# வெளிச்சம்

புரட்டாதி — ஐப்பசி

(1992)

20/

C.C
20/10/92

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழ்



விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

போஸ்கோ போஸ்கோ போஸ்கோ

பாடசாலைகளுக்கான, அலுவலகங்களுக்கான
அப்பியாசக் கொப்பிகள்
உபகரணங்கள்
தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும்

போஸ்கோ

காகிதாதிகளின்
மொத்த விற்பனையாளர்கள்

## போஸ்கோ

இல: 5, மருத்துவமனை வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
20-10-1992
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

முன்னர்
எம் தாயகத்துக்கு,
ஆடைகட்டி அழகுபார்க்க வந்தசிலர்,
இருந்த கோமணத்தையும் கொண்டு போயினர்.
பின்னர்,
சத்திரசிகிச்சையே சரியெனச் சொன்னவர்கள்
கத்தரிக்கோலையே களவாடிச் சென்றனர்.
''தம்பி'' மட்டும் தளராதிருந்தான்.
தன்னுயிர் தாயக விடுதலையென்றான்.
ஒன்று பத்தாக உயிர்ப்புகள் பிறந்தன.
ஒரு தலைமுறையே உணர்வுகொண்டெழுந்தது.
விடுதலைக்காக......
சக்திக்கு மீறிய விலைகொடுத்துவிட்டோம்.
இன்னும், இன்னும், கொடுப்போம்.
வேலிகட்டிய மண்ணுக்காகவா
இந்த விலைகொடுப்பு?
இல்லை......
விலங்குகளற்று,
கைகள் வீசி நடப்பதற்கும்,
எஜமானர்களின் கட்டளையற்று;
வேலை செய்வதற்கும்,
'எழும்பு' என்று யாரும் சொல்லாது
குந்த ஒரு குடிநிலம் வேண்டும்.
அது
தமிழீழம்.

# வெளிச்சம்

புரட்டாதி - ஐப்பசி 1992 - இதழ் - 7

''ஆயுதங்களைக் கைவிடும்வரை புலிகளுடன் பேச்சில்லை''

டில்லியில் திரு. பிரேமதாஸ அறிவிப்பு!

இருப்பிழந்துவரும் சிங்கள இராணுவத்தினரின் தள்ளாமையையும், விடுதலைப்புலிகளின் துணிவும், சோர்வுமிலாத் தாக்குதல் திறனையும் அறிந்துள்ள அனைவருமே, பிரேமதாஸவின் இந்த டில்லிப் பிரகடனத்தைப் பார்த்து நிச்சயம் எள்ளி நகையாடுவர்.

இப்படியான யுத்தப் பிரகடனங்களையும், சண்டப்பிரசண்ட அறிக்கைகளையும் காலத்துக்குக்காலம் அரசு கட்டிலேறும் சிங்கள ஆட்சியாளர்கள்; ஈழத்தமிழினத்தை நோக்கியும், தமிழீழத் தேசியப்படையான விடுதலைப் புலிகளைப் பார்த்தும் சொல்வது மரபாகி விட்டது.

கண்டியிலுள்ள எண்கோண மண்டபத்திலிருந்தும்,
ஜெயவர்த்தனபுரப் பாராளுமன்றப் படிகளிலிருந்தும்,
காலிமுகக் கடற்கரையில் இருந்தும்,

இந்த வார்த்தைகளை, எத்தனை சிங்கள வாய்கள் எத்தனை விதமாகக் கூறிவிட்டன. வாய்கள் மாறுமே தவிர வார்த்தைகளில் மாற்றமில்லை.

இவர்கள் யுத்தமென்று கூறியபோது இங்கு எவர்தான் பயந்தார்கள்.
இவர்கள் பேச்சுக்கு வரவேண்டுமென்று இங்கு எவர்தான் அழுதார்கள்.
இரண்டுமேயில்லை.
நாங்கள் காலத்தின் கட்டளையை ஏற்று களத்தில் நிற்கின்றோம்.
விடுதலைப் புலிகளாகிய நாங்கள் நீதியின் பக்கத்தில் நிற்கின்றோம்.
நியாயத்தின் நிழலில் இருந்து போராடுகின்றோம்.

சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் இல்லையே.

எனவே. பேச்சுவார்த்தை என்றாலும், பெரிய படையெடுப்பு என்றாலும் எதற்கும் எங்கள் வாசல்களை அகலத்திறந்து வைத்தே காத்திருக்கின்றோம்

ஆனால், எதைக்காட்டியும், எதைச் சொல்லியும், எங்கள் தமிழீழ இலக்கு நோக்கிய போராட்டத்திலிருந்து எம்மை எவரும் தள்ளிவிட முடியாது.

அதுசரி,

பிரேமதாஸவுக்கும், பேரினவாதச் சிங்கள ஆட்சியாளருக்கும் புத்திதெளிய இன்னும் எத்தனை வருடங்களாகும்.

அதற்கு,

விடுதலைப்புலிகள் இன்னும் எத்தனை முகாம்களை முற்றாகத் தகர்க்க வேண்டும்?

எத்தனை காவலரண்களையும், இராணுவத் தொடர்வேலிகளையும் அகற்றவேண்டும்?

இன்னும், எத்தனை கண்ணிவெடிகள் அராலித்துறைபோல் வெடிக்க வேண்டும்?

எவ்வளவு ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் புலிகள் கைப்பற்ற வேண்டும்?

இன்னும் எத்தனை ஆயிரம் இராணுவத்தினரின் சடலங்கள் இரத்மலானை விமான நிலையத்திலே இறக்கப்பட வேண்டும்?

நிதியமைச்சின் செயலாளர், கைகளில் திருவோடு ஏந்தி எத்தனை நாடுகளின் தெருவோரம் கடனும், பிச்சையும் கேட்டுக் கால் கடுக்க நடக்க வேண்டும்?

அதன் பிறகே சிங்கள ஆட்சியாருக்கு சித்தம் தெளியுமானால், புத்தி அதன் பிறகே பிறக்குமானால், தொடரும் எமது எழுச்சிமிக்க போராட்டத்தினால் விரைவில் அவர்களுக்குப் புரியவைப்போம். □□

...ய நூலகப் பிரிவு
...ர நூலக சேவை
யாழ்ப்பாணம்

1990 ஐப்பசி 30. மாலை முடிந்து இடை யாமம் ஆரம்பித்திருந்தது

சீ. எம். 125 மோட்டார் சயிக்கிள் ஒன்று சாவகச்சேரியிலிருந்து மணலாற்றை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

அந்தச் சயிக்கிளை இயக்கிய இளைஞனின் முகத்தில் ஓர் நிறைவு நிலவிக் கொண்டிருந்தது. 'எப்படியும் தம்பி விஜியைக் கண்டுபிடித்து இன்னும் இரண்டொரு நாட்களில் அம்மாவிடம் சேர்த்துவிடலாம். அதோடு அம்மா அமைதி அடைந்து விடுவாள். இயக்கம் எனக்கு இட்ட கட்டளையையும் நிறைவு செய்ததாகிவிடும்.'

விஜி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொள்ள வந்தபோது அவனது அண்ணன் தான், மகிழ்ச்சியுடன் அவனது விபரங்களை எல்லாம் குறித்து 'இயக்கத்தில் இணைத்துக்கொண்டவன்......

இன்று அவனே விஜியை வீட்டுக்குக் கூட்டிவந்து விடவேண்டிய நிலையை நினைத்து ..... மனதுக்குள்...

☐ ☐ ☐

மீசாலையில் பிறந்து குயில்போல பாடித்திரிந்த விஜி 1987 ம் ஆண்டு தன் தந்தையாருடன் ஒருமுறை வன்னி மாவட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

அப்போது தமிழ்ப் பிரதேசங்களில் இந்திய அரசு கட்டவிழ்த்து விட்டிருந்த ஆக்கிரமிப்பு யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

விஜியும் தந்தையும் கேரதீவு ஜெற்றியில் சென்றுகொண்டிருந்த பொழுது இந்திய விமானப் படையினர் அவ்விடத்தில் குண்டுமாரி பொழிந்தனர்.

பல வாகனங்கள் நாசமாக்கப்பட்டன. எரிபொருளுடன் நின்ற ஒரு

சி. பாவரசன்

# நினைவில் ஓர் நிகழ்வு

நிகழ்வு

லொறி தீப்பிடித்து முற்றாக எரிந்தது. பலர் காயப்பட்டனர். பலர் கொல்லப் பட்டனர்.

இதில் விஜியின் தந்தையும் கொல் லப்பட்டார். தந்தையின் உடலைக் கூட மீட்கமுடியாத நிலையில் விஜி கடலில் குதித்து நீந்தி அந்த வெறித் தனமான தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டான்.

தனக்கும் உறவினருக்கும் மற்ற வர்களுக்கும் இந்த மண்ணிலே ஏற்படு கின்ற இதைப்போன்ற அவலங்கள்; அந்தப்பிஞ்சு நெஞ்சத்தின் ஆழ்மன திலே பல காயங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

அவன் வேதனைப்பட்டான். ஆனால் விரக்திக்குள்ளாகவில்லை. வாழ்க்கையில் ஏற்படுகின்ற சின்னச் சின்னத்தோல்விகளுக்கெல்லாம் துவண் டுவிட்டால் உலகில் இயற்கை மரணம் என்பதே இல்லாமற்போய், வாழ்க் கையின் முடிவு தற்கொலை என்றாகி விடும் என உணர்ந்திருந்தான் போ லும்.

விஜி இந்த அநாகரீகங்களுக்கும், அநியாயங்களுக்கும் எதிராகப் போ ராட, தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளத் தொடங்கினான்.

விஜியினுடைய தாயார், விஜிக்கு மட்டுமல்ல அந்தப் பிரதேசத்தில் உலவிக் கொண்டிருந்த போராளிகளின் தாயாகவே வாழ்ந்தாள். அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் அகதி களாகப் புறப்பட்ட போதெல்லாம் அவள் அங்கேயேதான் இருந்தாள்.

தாய் மண்ணுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற போராளிகளின் வயிற் றுப் பசி போக்க அவளுடைய அடுப்பு எந்தநேரமும் புகைத்த வண்ணமே இருந்தது.

விஜி போராளிகளுக்கு இராணு வத்தின் நடமாட்டங்களைப் பார்த்துச் சொல்லுவது. பாதைகள் 'கிளியர்' பண்ணிக் கொடுப்பது, அவர்கள் நிற்கும் இடங்களுக்கு உணவு எடுத் துச் சென்று கொடுப்பது போன்ற ஆபத்தான வேலைகளில் ஆர்வமாக ஈடுபட்டிருந்தான்.

அந்தச் சூழ்நிலையில் விஜிபோன்ற வர்களின் சிறுசிறு உதவிகள் மிகப் பெரிய சேவையாகப் புலிகளுக்கு இருந் தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் களாலும், இராஜதந்திரத்தாலும் இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதே சங்களை விட்டு வெளியேறத் தொடங் கியது. விஜி தன்னையும் ஒரு முழு நேரப் போராளியாக இணைத்துக் கொண்டான்.

விஜி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மதுவன் என்ற புனை பெயருடன் மணலாறு மாவட்டத்தில் பயிற்சி பெற்று அங்கேயே தன் பணி யைச் செய்துகொண்டிருந்தான்.

மதுவனின் குடும்பத்தில் மதுவன் உட்பட மூவர் முழுநேரப் போராளி களாக வேலை செய்துகொண்டிருந் தனர்.

மதுவனின் தாயார், மூவரில் ஒரு வரை வீட்டில் வந்து தனக்கு உதவ வேண்டுமென விரும்பினாள். பிள்ளை கள் வர மறுத்துவிடவே அவள் இயக் கத் தலைமைக்குத் தனது விருப்பத் தைத் தெரியப்படுத்தினாள்.

அவர்கள் அந்தத் தாயின் விருப்பத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு அப்போதைய தென்மராட்சி தளபதிக்குப் பணித்தார்கள்.

இந்தச் சிக்கலில், இறுதியாக இயக்கத்தில் இணைந்த மதுவனை வீட்டுக்கு அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது.

மதுவனைத் தாயாரிடம் சேர்க்கும் பொறுப்பு அண்ணன் சேகரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

☐ ☐ ☐

சேகரின் மோட்டார் சயிக்கிள் குன்று குழிகளையெல்லாம் தாண்டி 31ம் நாள் அவனை மணலாற்றில் சேர்ப்பித்தது

முதலாம் திகதி முந்திரிக் குளத்துக்கும் சாம்பல் குளத்துக்கும் இடையில் உள்ள மினிமுகாம் மீது தாக்குதல் தொடுக்க, விடுதலைப் புலிகளின் ஒரு படை அணி நகரத் தொடங்கியிருந்தது அந்த அணியில் மதுவனும் ஒருவனாகி இருந்தான்.

மதுவனின் வரவுக்காக அவனது அண்ணன் காத்துக் கொண்டிருந்தான். சேகர் மதுவனை அழைத்துவர மேற்கொண்டிருந்த பயணம் பற்றி அவனது தாயாருக்கும் தெரிந்திருந்தது. அந்தத் தாயும் மதுவனின் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள்.

தாக்குதலுக்குச் சென்ற படையணி திரும்பிவிட்டிருந்தது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். கிளிமின், ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட ஏராளமான இராணுவத் தளபாடங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தன.

வென்றுவந்த படையணிக்குள் சேகரின் கண்கள் மதுவனைத் தேடிக் கொண்டிருந்தன.

☐ ☐ ☐

மதுவனின் வீடு தென்மராட்சியில் உள்ள பல போராளிகளுக்குத் தெரிந்துதான் இருந்தது. அதிலும் மதுவனின் குடும்பத்துடன் மிக நெருங்கிப் பழகுகின்ற இந்த இரண்டு போராளிகளும் ஏன் எங்களை யாரோ மாதிரி... 'உம்' என்று முகத்தை வைத்துக் கொண்டு எங்கள் வீட்டைக் கடந்து போவதும்... வருவதுமாக...... இவர்களுக்கு என்ன வந்துவிட்டது.

மதுவனின் குடும்பத்தினர் அவர்களை உள்ளே கூப்பிட்டனர்.. அவர்களின் முகம் எதையோ பறி கொடுத்த மாதிரி... வழமையான உற்சாகமின்றி... அவர்களது கலகலப்பான பேச்சும் சிரிப்பும் போய்விட்டது. ஏன் ..... இவர்கள் .. இப்படி......

வந்தவர்கள் செய்தியைச் சொல்ல முடியாது தவித்தார்கள். அத்தாயின் முன்னால் அவர்களுக்குச் சொற்கள் வெளிவர மறுத்தன. வார்த்தைகளைத் தேடி ..... தேடி .....

அந்தத் தாக்குதலில் மேஜர்சங்கர், முசோலின், 2வது லெப்டினன்ட் மதுவன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

போர்க்களம் சென்ற தனயனின் வருகையை எதிர்பார்த்திருக்கும் தாய் ...... அந்தத் தாயிடம் தம்பியை அழைத்துவந்து ஒப்படைக்கச் சென்ற அண்ணன்.. ...

அழைத்துவரச் சென்ற அண்ணன் தூக்கி வந்தான். ஆறடிப் பெட்டியிலே தாய் நாட்டை நேசித்த அந்த இளைஞனை நேராகப் படுக்கவைத்துத் தூக்கி வந்து......

தாயைவிட தாய்நாட்டை நேசித்த மதுவன்.... அவன்.... உறங்கவில்லை. அவன் இறந்த பின்பும் அவனது விழிகள் திறந்தபடியே தான்...... அவனது கண்களை மூடிவிட பலர் முயன்றனர். முடியவில்லை. அவன் மரணித்த பின்னர் கூட......

'அந்தத் தாக்குதலில் மதுவனுக்கு ஜி3 ரக துப்பாக்கியால் எயிற்ரிநயின் தாக்குதல் நடத்தும் பணி கொடுக்கப்பட்டதென்றும் அந்தப் பணியை அவன் திறம்பட செய்து முடிந்திருந்தான் என்றும் அந்தத் தாக்குதலின் வெற்றிக்கு மதுவனின் பங்கு அளப்பரியது' என்றும் மணலாறு மாவட்டத் தளபதி அன்பு அவர்கள் தெரியப்படுத்தியிருந்தார்.

2 வது லெப்டினன்ட் மதுவனின் புகழுடலை மணலாற்றில் புதைக்க, மணலாறு மாவட்டம் விரும்புவதாக குடும்பத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் தாயாரின் வேண்டுகோளின்படி, கண்ணாடிப் பெட்டி மயானத்தில் 2வது லெப்டினன்ட் மதுவனின் புகழுடல் தகனம் செய்யப்பட்டது.

''ஒரு உண்மையான புரட்சியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் ஒன்று வெற்றி பெறுகிறார்கள்; அல்லது வீரச்சாவடைகிறார்கள்'' என்ற குவேராவின் வார்த்தையை நடைமுறையில் காண்பித்தவர்களில் மதுவனும் ஒருவனாகிவிட்டான். ☐

●

●


# வெளிச்சம்

**கலை, இலக்கிய சமூக இதழ்**

*இதழ் அமைப்பு*

**இணுவையூர்**

**சிதம்பரதிருச்செந்திநாதன்**

உருவாக்கம்

**ஆசிரியர் குழு**

*முகப்போவியம்*

''ரமணி''

*அச்சு*

**ம. மரியதாஸ்**

வெளியீடு:

**விடுதலைப் புலிகள்**

**கலை, பண்பாட்டுக்கழகம்**

க
வி
தை

# போராடு மீண்டும் போவோமென்று உறுதி எடு

புதுவை இரத்தினதுரை

ஒதுங்கிக் கொள்ளாதே!
ஒவ்வொன்றாக இழந்து, இழந்து ஒதுங்கிக்கொள்ளாதே
போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

வற்றாப்பளை அம்மன் கோவில்
வைகாசிப் பொங்கல் முடிந்த கையோடு
கரை வழியாகக் கதிர்காமப் பயணம்.
'அரோகரா'க் கோஷம் வானைப் பிளக்க
மாணிக்க கங்கையில் தீர்த்தமாடும்
கனவில் மிதந்து
நடந்த கால்கள் எங்கே? எங்கே?

போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
போராடு.

''குரை கடலோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை''
போகமுடியுமா?
இராவணன் வெட்டை ரசிக்கமுடியுமா?
அந்திவான மஞ்சள் வெயிலில்
அந்த நகரம் குளிக்கும் அழகினை
முந்திப் பார்த்து மெய்சிலிர்த்திட்டாய்
இன்று போக எப்படி முடியும்?

போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு
ஒதுங்கிக் கொள்ளாதே!

பாண்டிருப்புப் பத்தினி அம்மன்
பங்குனி மாதப் பொங்கலென்றாலே
எங்கிருந்தெல்லாம் வந்து சேர்வார்கள்

இன்றேன் அந்த வீதி வெறிச்சது
தீ மிதிக்கின்ற நேர்த்தி என்னாச்சு?

போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

மன்னார் மடுப்பதி மாதா முன்னால்
கண்கள் மூடிக் கண்ணீர் சொரிந்து
சுருவம் சுற்றும் அழகில் உருகி
உன்னை இழந்த உணர்வு வடிந்ததா?
இன்றும் போக இயலும்
ஆனால்,
இன்னல் எத்தனை ஏற்றுப்போகிறாய்
நேர்வழியிருக்க நீந்திப் போகிறாய்.
படகிலேறி உயிரை இழக்கிறாய்.

போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

'பாலை தீவு
அந்தோனியார் அழைக்கிறார்.
படகிற் போகிறோம்.
நீயும் வாறியா? நீயும் வாறியா?'
இப்படிப் பேசி மகிழ்ந்த வாய்கள்
எப்படி இன்று ஊமைகளாயின?

போராடு
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு.
ஒதுங்கிக் கொள்ளாதே!

கீரிமலைக் கேணியை இன்று
யாரிடம் கொடுத்து ஒதுங்கிக் கொண்டாய்.
ஆடிஅமாவாசை அன்றுதானே
கீரிமலைக் கடலில் குளித்து
அப்பனுக்குத் 'தர்ப்பணம்' செய்வாய்.
இன்று,
'பிதுர்க்கடன்' செய்யவும் போக்கிடமில்லையா?
எப்படி உன்னால் பொறுத்திட முடியும்?

ஒதுங்கிக் கொள்ளாதே
ஒவ்வொன்றாக இழந்து இழந்து
ஒதுங்கிக் கொள்ளாதே.
போராடு.
மீண்டும் போவோமென்று;
உறுதி எடு
ஒதுங்கிக் கொள்ளாதே. □

# ஊனங்கள் உடலிற்தான்

வல்வையூரான்.

சிறுகதை

நான் இயக்கத்தில் வந்து சேர்ந்து வருடங்கள் நான்கு கழிந்து விட்டன.

இந்த நான்கு வருடங்களிலும் என்றுமே வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்றோ, எனது பெற்றோர்களை - உடன்பிறப்புக்களை சந்திக்க வேண்டுமென்றோ ஆசைப்பட்டவளுமல்ல.

இயக்கத்தில் உள்ள பிள்ளைகளில் பலர் வீடுகளுக்கு விடுமுறையில் சென்று வந்துள்ளார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் வீடு செல்லாததற்குக் காரணம், நான் வீட்டிற்குச் சென்றால் வீட்டிலுள்ளவர்கள் என்னை மறித்து விடுவார்கள் என்றோ — அழுது ஒப்பாரி வைப்பார்கள் என்பதனாலோ அல்ல.

வீட்டிற்குச் செல்ல வேண்டும் பெற்றாரை — உற்றார், உறவினரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏனோ எனக்கு ஏற்படவில்லை. அவ்வளவு தான்;

பொதுக் கூட்டங்களில் பேசப்பட்ட ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டு விட்டோ — வெறுமனே உணர்ச்சியினால் உந்தப்பட்டோ நான் திடீரென்று இயக்கத்துக்கு வந்து சேர்ந்து விட்டவள் அல்ல.

நான் பிறந்து வளர்ந்த வடமராட்சிப் பகுதி, அடிக்கடி சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களால் அழிக்கப்பட்ட நிகழ்வுகள் என் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக போராட்ட உணர்வை வளர்த்துக் கொண்டே வந்தன.

ஆனாலும் பெண்கள் பூரணமாகத் தங்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளாத நாட்கள் அவை.

ஆரம்பத்தில் 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பிலேயே என்னை இணைத்துக் கொண்டேன். முதலுதவிச் சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டு சிங்கள இராணுவத்தினரின் தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சிகிச்சைகள் செய்வது போன்ற செயல்களில் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டு வந்தேன்.

உண்ணாவிரதங்கள் — ஊர்வலங்கள் — பொதுக் கூட்டங்கள் என்று நான் திரிந்த ஆரம்ப நாட்களில் எனது வீட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

''பொம்பிளைப் பிள்ளையள் கண்டபாட்டிலை

வீட்டை விட்டு வெளிக்கிடக் கூடாது. புலிக்கொடியைத் தூக்கிக் கொண்டு ஊர்வலமெண்டும் உண்ணா விரதம் எண்டும் றோட்டில திரியிறது அவமானம். பொடியளும் பெட்டையளும் சேர்ந்து கொண்டு திரிஞ்சா பாக்கிறவை என்ன சொல்லுவினம்......?'' என்றெல்லாம் அம்மா அடிக்கடி சொல்லிக் கொள்வா.

''அவையளோடை சேரக் கூடாது...... இவையளோடை பழகக்கூடாது ..', என்றெல்லாம் நச்சரிப்புக்கள் வேறு.

'சாதி குறைந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நான் பேசினால்— பழகினால் — சேர்ந்து திரிந்தால் அவர்களோடு நான் ஓடி விடுவேன்' என்ற அச்சம் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த அழுத்தங்கள் அனைத்தும் போராட்டத்தின் பக்கம் என்னை இழுத்துச் சென்றனவே தவிர யாழ்ப்பாணக் குடாநாட்'டில் உள்ள ஒரு சாதாரண பெண்ணுக்கு ஏற்படுகின்ற படிக்க வேண்டும், திருமணம் செய்ய வேண்டும், குழந்தைகளைப் பெற வேண்டும் என்பது போன்ற சராசரி வாழ்க்கைக்கு என்னை இட்டுச் செல்லவில்லை.

எனது நெஞ்சத்தினுள் வித்தாக விதைக்கப்பட்டு, சின்னஞ்சிறு செடியாக வளர்ந்து கொண்டிருந்த எனது போராட்ட உணர்வுகள் பாரியதோர் விருட்சமாக வளர்வதற்கு 1987 இல் இடம் பெற்ற 'வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கை வழிசமைத்தது.

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட அந்தப் பெரிய தாக்குதல்களின் போது அப்பகுதி மக்கள் எல்லோரும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

முதலுதவிச் சிகிச்சை நிலையமொன்றில் கடமை புரிந்து கொண்டிருந்த நானும், சினேகிதிகள் சிலரும் எங்கள் பெற்றோர்களோடு கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்த போதுதான் எங்களது மக்களின் மனோ நிலையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

''இஞ்சார் பெட்டையள், நீங்கள் இங்கை இருக்க வேண்டாம் எங்கையாவது ஓடி விடுங்கோ ..... நீங்கள இங்கை இருக்கிறதாலை எங்கடை பெம்பிளைப்பிள்ளையளையும் ஆமி வந்து பிடிசகக் கொண்டு போயிடுவான்... நீங்கள் எங்கையாவது ஓடுங்கோ... அல்லது ஆமியிட்டைப் போய்ச் சரண் அடையுங்கோ'' என்று கோயில் மண்டபத்தில் கூடியிருந்த எங்கடை ஊர்ச்சனமே எங்களுக்குச் சொன்ன போது, எனக்கு என்னையறியாமலேயே அவர்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவ்வளவு நாளும் நாங்கள் நடாத்திக் கொண்டிருந்த முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில், எந்த மக்கள் எங்களிடம் வந்து நோய் நொடியென்று சொல்லி மருந்துகளை வாங்கிப் போனார்களோ — காயங்களுக்கு மருந்து கட்டுவித்துக் கொண்டு சென்றார்களோ — அந்த மக்களே எங்களை அந்த இடத்திலிருந்து ''ஓடுங்கோ .. ஓடுங்கோ'' என்று விரட்டிய போது தான்—

''கட்டாயமாக நான் இயக்கத்திற் போய்ச் சேர வேண்டும், இயக்கத்தைப் பற்றி — போராட்டத்தின் அவசியம் பற்றி மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்'' என்ற உணர்வு ஆத்திரத்தோடு கலந்து கொண்டது.

அமைதிப்படை என்ற பெயரில் இந்திய அழிவுப் படை இங்கு வந்ததும் — நான் அந்தக் காலகட்டத்தில் இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டதும்

— அலம்பில் காட்டில் நான் பயிற்சி பெற்றதும் கடந்த கால நிகழ்வுகள்.

இந்தியாக்காரனோ... . சிங்களவனோ மொத்தத்தில ஆமியோட சண்டை பிடிக்கிறதெண்டா... ...

அடிபாட்டுக்குப் போற தெண்டா......

நாங்கள் எங்களுக்குள்ளேயே போட்டி போட்டுக் கொள்ளுவம்......

எங்களை அடிபாட்டுக்கு விட இல்லையெண்டு சொல்லி அண்ணையிலை எத்தனை தடவை கோபப் பட்டிருப்பம் ....

ஆனா இப்ப என்னாலை அடிபாட்டுக்கு போக ஏலாம இருக்கு எண்டதை நினைக்கேக்கை தான்......

போன வருஷம் ஆறு மாசத்துக்கு மேலை பலாலிப் பகுதியில சென்றியிலை 'குறூப்'புக்குப் பொறுப்பாக இருந்தனான். கட்டுவன் அடிபாட்டிலை ஆமிக் காரங்களைத் தேடித் தேடி, ஓடி ஓடி அடிச்சனாங்கள்....

ஆனா இப்ப என்னாலை தேடித் தேடி, ஓடி ஓடி அடிக்க முடியாமற் போயிட்டுது எண்டதை நினைக்கேக்கை தான்......

கோட்டை அடிபாடு, சிலாவத்துறை அடிபாடு, மாங்குளம் தாக்குதல் எல்லாவற்றிலும் வெற்றிக் களிப்போடு மீண்ட எனக்கு ஆனையிறவு அடிபாட்டிலை தான்......

ஆனையிறவு அடிபாட்டுக்கு நாங்கள் வெளிக்கிட்டதை இப்ப நினைச்சாலும் எவ்வளவு சந்தோசமா இருக்குது......

□ □ □

பெண் போராளிகள் நாங்களும், அண்ணாக்களுமாக பல நூற்றுக்கணக்கானோர் எந்தவித கவலைகளுமின்றி ''எப்ப அடிப்பம் ...? எப்ப ஆனையிறவைப் பிடிப்பம் ......?'' என்ற ஆவலோடு தான் சென்றோம்.

நாங்கள் சென்ற இயக்கச்சிப் பகுதி பரந்த வெளிப் பிரதேசம். அந்தப் பகுதியில் இழப்புக்கள் அதிகம் வருமென்பது எங்களுக்கு முன்பே தெரியும். ஆனாலும் இழப்புக்களை நினைத்தால் நாங்கள் சண்டை பிடிக்க முடியாது. நாங்கள் முன்பு கலந்து கொண்ட எத்தனையோ களங்களில் இழப்புக்களையும் சந்தித்திருக்கிறோம் — வெற்றிகளையும் பெற்றிருக்கின்றோம்.

குழுக்கள் குழுக்களாக நாங்கள் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டோம். முதலில் ஒரு குழு உள்ளே சென்று காயப்பட்டிட்டுது — அல்லது இழப்புகள் ஏற்பட்டிட்டுது என்பது தெரிந்த பின்பே அடுத்த குழு தாக்குதலுக்குச் செல்லும்.

பாதுகாப்பு வாகனம் ஒன்று முன்னே செல்ல அதன் பாதுகாப்பில் எங்களது முதலாவது குழு சென்று கொண்டிருந்தது. எங்களதுகாவலரணிலிருந்து நூறு யார் தூரம் வரை எங்கள் வாகனம் சென்று விட்டது. எதிரி தரப்பிலிருந்து எந்த விதமான தாக்குதலும் எங்கள் பகுயை நோக்கி வரவில்லை. ட்ராக்டர் கொஞ்சம்கொஞ்மாக முன்னேறிக் கொண்டிருந்தது. ஐந்து நிமிட இடைவெளியின் பின் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் அனைத்திலுமிருந்தும் சகல விதமான ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதை எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எங்கள் பகுதியிலிருந்தும் பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எங்களது பாதுகாப்பு வாகனத்தின் மீது எதிரி தரப்பிலிருந்து ஆர். பி. ஜி தாக்குதல் மேற்கொள்ளப்

பட்டதனால் அது தீப்பற்றி எரிந்தது. அதன் பாதுகாப்பில் சென்ற பிள்ளைகள் சிதறி பல பக்கங்களிலும் சென்ற போது அவர்களை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தன ரவைகள். எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

முன்னுக்குச் சென்ற நால்வர் காயப்பட்டுவிட்டதாகவும், அவர்களை அப்புறப்படுத்தும்படியும் லீமா அறிவித்தாள்.

அதன்படி மீட்புக் குழுவினர் சென்று காயப்பட்டவர்களைத் தூக்கிவந்தனர். பிள்ளைகள் உயிராபத்தான நிலையில் இருந்த காரணத்தினால் அவர்களது ஆயுதங்களை மீட்புக் குழுவினரால் எடுத்து வர முடியாது போய் விட்டது.

முன்னே சென்ற இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் காயப்பட்டு விட்டதனால் மூன்றாவது குழுவினரோடு நானும் செல்ல நேர்ந்தது.

நான் சென்ற போது எங்கள் தரப்பில் ஆர். பி. ஜி கொண்டு சென்றவர்களில் 'லோடர்' வீரமரணம் அடைந்திருந்தார். இயக்குபவரும் காயப்பட்டிருந்தார். 'செல்' நிரப்பியபடி ஆர். பி. ஜி கீழே விழுந்து கிடந்தது. காயப் பட்டவரையும் தூக்கி ஆர். பி. ஜியையும் கொண்டு சென்று பின்புறமாக அனுப்பி விட்டு மீண்டும் நான் முன்னேறினேன்.

அங்கு சென்றவர்களில் பலரும் வீரமணத்தைத் தழுவிக் கொண்டோ, காயப் பட்டோ இருந்தனர். அது வெட்ட வெளிப் பிரதேசம் என்பதால் காயமுற்றவர்களைத் தூக்கச் சென்றவர்களும் காயமடைந்து ஆங்காங்கே வீழ்ந்து கிடந்தனர்.

அவர்களை தூக்க முனைந்தால் எதிரியின் காவலரண்களை பிடிக்கமுடியாது போய்விடும் என்பதனால், பக்கத்தில் நின்ற அண்ணாக்களிடம் ''பொயின்ரைப் பிடிக்க வேணும். விடியப் போகுது, ஓடி வாருங்கோ'' என்று சொல்லிக் கொண்டே நான் முன்னுக்கு ஓடினேன். அண்ணாமாரும் நானும் ஓடிப்போய் ஒரு இடத்தில் நிலை எடுத்திருந்து அடித்து விட்டு மீண்டும் முன்னே செல்வதற்காக எழுந்த போது அண்ணாக்கள் இருவருக்கு வயிற்றில் வெடி விழுந்தது.

அவர்கள் தங்களுக்கு வெடிவிழுந்ததைப் பொருட்படுத்தவேயில்லை ...

''அக்கா ஓடுங்கோ அக்கா ..... போயின்ரைப் பிடியுங்கோ அக்கா......'' என்று தான் கத்திச்சினம்.

நான் முன்னுக்கு ஓடினன். அங்கை 'அருள் 89' லோட் பண்ணியபடி பிள்ளையள் நின்று கொண்டிருந்தினம். எதிரியின் காவலரணிலிருந்து 30 யார் தூரத்துக்குக் கிட்டப் போயிட்டம்.

''இதிலையிருந்து நாங்கள் அடிச்சால் அவன் 203 செல் அடிப்பான். பொயின்றுக்குக் கிட்ட வந்து படுத்திருக்கிறது வீண் வேலை. எழும்பி முன்னுக்கு ஓடிப் போய் 'சக்கைக்கான்' எறிவம்'' என்றேன் நான்.

''காந்தி அக்கா, என்னிடம் ரவைகள் முடிஞ்சிது. எனக்கு ரவுண்ட்ஸ் அனுப்பச் சொல்லி வோக்கியில் அறிவியுங்கோ'' என லீமா என்னிடம் சொன்னாள்.

வோக்கியில் தொடர்பு எடுக்க முயன்றேன். நான் பேசியது எம்மவர்களுக்குக் கேட்க இல்லை. அவர்கள் பேசியது எனக்குக் கேட்க இல்லை. வோக்கித்தொடர்புகளை தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் ஒரே வெடிச் சத்தம் ...... வோக்கியில் தொடர்பு எடுக்க முடியாமலேயே இருந்தது.

''முட்கம்பிகளை அகற்றி

விட்டு நாங்கள் முன்னுக்குப் போய் கிரனட்டை வீசுவம்'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து முன்னுக்கு ஓடினேன் நான்.

'ரோர்பிட்டோவின்' (வெடிக்கண்ணி) மூலம் மிதிவெடிகளை வெடிக்கச் செய்வதிலும், முட்கம்பி வேலிகளை அகற்றும் வேலையிலும் ஈடுபட்டிருந்த லீமாவின் குரல் என்னை திரும்பிப் பார்க்க வைத்தது.

''எனக்குக் காயம் காந்தி அக்கா....'' என்று சொல்லியபடியே மார்பைப் பொத்தியபடி லீமா கீழே விழுந்தது தான் எனக்குத் தெரியும். அவள் வீரமரணமடைந்து விட்டாள் என்பதனை நான் பின்பு தான் தெரிந்து கொண்டேன்.

திடீரென்று யாரோ என்னையும் தூக்கி வீசியது போன்றதோர் உணர்வு. கொஞ்ச தூரம் மேலே போய் கீழே வந்தது மாதிரியான நிலை. காலொன்றில் இனம் புரியாத வலி. ஆனாலும் நான் மயங்கி விடவில்லை. நிலா வெளிச்சத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த 'பராலைற்றின்' உதவியோடு கால்களை ஒரு கணம் உற்று நோக்கினேன்.

காலொன்றில் முழங்காலுக்குக் கீழே எதுவும் இல்லை......வெறும் எலும்பும் பிய்த்தெறியப்பட்ட நிலையில் சதைத்துண்டங்களுமாய்... ..

நான் 'மைன்ஸிலை' காலை வைச்சபடியால் எனதுகாலொன்றை இழந்து விட்டேன் என்பதனை அப்பொழுது தான் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எழும்பினால் அடுத்த காலும் போய் விடுமோ என்ற தயக்க உணர்வு.

ஆனாலும் காலொன்று பறிபோய் விட்ட நிலையிலும் கத்தினேன்.

கால் போனது எனக்குப் பிரச்சினையாய் பட இல்லை. என்னாலை எழும்பி ஓட ஏலாமல் கிடக்கு...... பொயின்ரைப் பிடிக்க ஏலாமல் போச்சு .. என்ற ஏக்கமே என் நெஞ்சில் பரவி நின்றது.

அப்பவும் நான் பலமாகக் கத்தினேன்.

''எனக்கு மைன்ஸிலை கால் போயிட்டுது... என்னைத் தூக்க வேண்டாம்... எழும்பி எல்லாரும் ஓடுங்கோ......
போயின்ரைப் பிடியுங்கோ...''என்று தொடர்ந்து கத்தினேன்.

பொழுது விடியத் தொடங்கிட்டுது ..... இனி மேலும் படுத்துக்கிடந்தால் ஆமி வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான்.... அல்லது செல் அடிச்சு எங்களைச் சாகடிச்சுப் போடுவான்.

நான் சாகிறதுக்கு எப்பவுமே பயப்பட இல்லை... ஒரு கால் போய் விட்டது என்பதற்காக செத்து விடவும் முடியாது.

எமது இயக்கத்தில் இரண்டு கண்களும் இரண்டு கைகளுமின்றி அண்ணாக்கள் இருக்கின்றார்கள்.

தங்கையொருத்தி மாங்குளம் தாக்குதலில் இரண்டு கைகளையும் இழந்தவள். வாயினால் பேனாவைக் கவ்வி எழுதுகிறாள். ........ காலினால் ரவைகளை நிரப்புகின்றாள்......

எனக்கு ஒருகால்தானே போய் விட்டது .......

நான் எதற்காக சாவை அரவணைக்க வேண்டும்.

நாங்கள் எதிரியிடம் பிடிபட்டு விடக் கூடாதென்பதற்காக எங்கள் மானத்தைக் காப்பதற்காக எங்கள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 'சயனைட்டை' ஒருகணம் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

ஆனாலும் சாவைத் தேடிக் கொண்டு விட்டால் — சில வேளை எனது உடலை எம்மவர்களால் மீட்க முடியாது போய் விட்டால் — எனது உயிரற்ற உடலைக் கூட அந்த இனவெறி பிடித்த சிறிலங்கா அரசின் சிங்கள இராணுவத்தினர் சீரழித்து சின்னா பின்னப் படுத்தி விடவும் கூடும்...

மெது மெதுவாக இழுத்து இழுத்து எங்கடை காவலரணுக்குக் கிட்ட சென்றுதான் வோக்கியிலை அறிவிச்சன். ''என்னை வந்து தூக்குங்கோ'' என்று சொல்லி.

நான் இயக்கத்திலை சேர்ந்து நாலு வருஷத்துக்குப் பிறகு — எனக்குக் கால் போன பிற்பாடு தான் எங்கட வீட்டில என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாரையும் கண்டனான்.... அதுவரையும் நான் எவரையுமே சந்திக்கவில்லை.

என்னைப் பார்ப்பதற்காக 'வைகறைக்கு' வந்த அம்மா, ''இனியும் இங்கையிருந்து என்னடி செய்யப் போறாய்......? காலைப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து விடன்.....'' என்று சொன்ன போது எனக்கு அம்மா மீது ஆத்திரம் வரவில்லை. அவரது அறியாமையை எண்ணிய போது சிரிப்புத்தான் வந்தது.

சிலவேளை நீங்களும், ''சொத்தி ..அதுவும் பொம்பிளைப் பிள்ளை...... இனி உன்னாலை சண்டை பிடிக்க ஏலுமே..? விசர்க் கதையளை விட்டுப்போட்டு வீட்டை போய் ஆத்தை அப்புவோடை இரன்'' எண்டு தான் சொல்லுவியள்.

அம்மாவுக்குச் சொன்னதைத் தான் உங்களுக்கும் சொல்லுறன்.

''களத்தில் நாங்கள் வீரமரணமடையலாம். எங்கள் கண்கள்பறிபோகலாம். கைகள் போகலாம். கால்கள் போகலாம். நாங்கள் ஊனமுற்றவர்களாகலாம். ஆனாலும் நாமனைவரும் உறுதியோடு இறுதி வரை போராடி எமது இலட்சியத்தை வென்றெடுப்போம். இது திண்ணம்.'' □□

நன்றி: **புலிகளின் குரல்**

□ □ □

யூதர்கள் தாங்கள் இழந்த தாயகத்தை மீண்டும் கைப்பற்றி, உரிமையான இறைமையை இஸ்ரேலில் நிலை நாட்டிய பின், இலங்கையிலும் அவர்களின் தூதரகம் அமைக்கப்பட்டிருந்த ஆரம்பகாலம். யாழ்ப்பாணம் அலுப்பாந்திக்குச் சமீபமாக உள்ள ஒரு கட்டிடத்தில், கூட்டுறவாளர் புகையிலைச் சங்கம் நடாத்திய ஒரு கூட்டத்திற்கு இஸ்ரேலியத் தூதரக அதிகாரியும் கலந்து கொண்டு பேசினார். ''இஸ்ரேல்'' என்ற தாயத்தை உருவாக்க ஒரு சிறு கூட்டுறவுச் சங்கமே ஆணிவேர் என்று கூறி,

இறுதியில் சில கேள்விகளைக் கேட்டு பதில்களையும் அவரே சொன்னார்.

''மீண்டும் இஸ்ரேல் எப்பொழுது தாபிக்கப்பட்டது?'' கூட்டுறவுச் சங்கம் தொடங்கிய போதா...இல்லை. நாங்கள் சிறு சிறு கூட்டங்கள் கூடினோமே... அப்போதா இல்லை, இஸ்ரேல் என்ற எமது தாயகத்தைப் பிடித்து எமது தேசியக் கொடியை ஏற்றினோமே. அப்போதா? இல்லை ' என்றவர், ''பின் எப்போது? உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருந்த ஒவ்வொரு யூதனின் இதயங்களிலும் எமக்கென்றொரு நாடு வேண்டும் என்ற எண்ணம் என்று உதித்ததோ அன்றே இஸ்ரேல் பிறந்துவிட்டது மற்றவையெல்லாம் அதற்கான சம்பவங்கள்', என்றார்.

**— மாமனிதர் எஸ். ரி. அரசுவின் தகவலிலிருந்து**

# “எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை கலை, இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்க வேண்டும்.”



**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்**

எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக, எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக நிற்பவை. எமது பண்பாடு தான் எமது தேசத்தின் உயிர். எமது இனத்தின் ஆன்மா. எமது உடல்கள் அழிந்தாலும், உடமைகள் அழிந்தாலும், எமது இனத்தின் இதயமாக இயங்கும் பண்பாட்டு வாழ்வை எவராலும் அழித்துவிட முடியாது.

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர்வாக பரிணாமம் பெறுகிறது. இந்தத் தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்

ளும் போது தான் ஒரு தேசம் தனக்கே உரித்தான, தனித்துவமான ஆளுமை யைப் பெறுகிறது. இந்தத் தேசிய ஆளுமையைக் கொண்ட மக்கள் இனம்தான் ஒரு அரசை அமைத்துக் கொள்ளும் தகுதியைப் பெறுகிறது

ஒரு திடமான, தனித்துவமான தேசிய ஆளுமையைக் கொண்ட மக்களாக தமிழீழ மக்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறார்கள். இரத்தப் புரட்சி யாக கட்டவிழ்ந்த, நீண்ட, கடினமான போராட்ட வரலாறும், அதனால் உருவான நிலை தளரா இலட்சிய உறுதியும், நாட்டுப் பற்றும் எமது மக்களை தேசிய ஆளுமை கொண்ட மக்கள் இனமாக மாற்றியமைத்திருக்கிறது. இதனால் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்களாக, தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.

உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும், தமிழீழத்தில் தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது. தமிழீழத்தில் தான் தேசிய ஆளுமை பிறந் திருக்கிறது. தமிழீழத்தில் தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கிறது.

தமிழீழத்தில் பிறந்து, வளர்ந்து, நிமிர்ந்து நிற்கும் தமிழனின் தேசிய ஆளுமையைக் கொன்று விட எமது பகைவர்கள் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார் கள் எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசு ஒரு புறமும், இந்திய வல்லரசு மறுபுறமுமாக எமக்குப் பெரும் சவால்களாக எம்மை அச்சுறுத்தி நிற்கின்றன

அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டின் மையமாக, தன்னாட்சி உரிமைக்கு தகுதி பெற்றதாக, அரசியல் ஆளுமை பெற்று வளர்ந்துள்ள தமிழீழத் தேசியம் இந்திய உபகண்ட தேசிய எழுச்சிப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக அமைந்து விடுமென இந்தியா அஞ்சுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் செத்துக் கொண்டிருக் கும் திராவிடப் பண்பாட்டு இயக்கத்திற்கு புத்துயிரளித்து தூங்கிக் கிடக்கும் தமிழகத் தமிழனை தட்டி எழுப்பி விடலாமென பாரதம் பயப்படுகிறது. இந்தியா விலும், உலகளாவிய ரீதியிலும் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் ஊக்க சக்தியாக உருவாக்கம் பெற்று வரும் தமிழீழ தேசி யத்தை ஆரம்பத்திலேயே சிதைத்துவிட வேண்டுமென டில்லி ஆட்சிப்பீடம் திட்டம் தீட்டியது. இந்த நோக்கில் தான் இந்திய ஆளும்வர்க்கமானது சிங்களப் பேரின வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து, ஒப்பந்தம் செய்து எமதுமண்ணில் தனது ஆக்கிர மிப்புப் பாதங்களைப் பதித்தது. தமிழீழ தேசியத்தின் புரட்சி வடிவமான புலிகள் இயக்கத்தை அழித்து விட முனைந்தது. இந்திய தலையீடும், அதனால் எமது தாயகத்தில் நிகழ்ந்த மனிதக் கொலைகளும், அழிப்புகளும் தமிழ்த் தேசியத்தை நசுக்கி விட முடியவில்லை. பதிலாக, எமது போராளிகளதும் பொதுமக்களதும் உறுதிமிக்க எதிர்ப்பியக்கம் தேசியப் பற்றுணர்வை மேலும் வலுப்படுத்தியது என்று தான் சொல்ல வேண்டும்.

இந்திய ஆட்சியாளரதும், சிங்களப் பேரினவாதிகளதும் நெருக்குதல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்து தமிழீழ தேசிய எழுச்சியை [illegible]ிவினைவாத[illegible]றும் '[illegible]யங்கரவாதம்' என்றும

உலகிற்கு திரித்துக் காட்டுவதில் இந்தியா முனைப்பாக நிற்கிறது. தமிழரின் தேசிய கட்டமைப்பிற்கு ஆதாரமாக விளங்கும் தமிழரின் வரலாற்றுப் பூமியை ஆக்கிரமிப்பால் அபகரித்துக் கொள்ள சிங்களப் பேரினவாதம் பகீரத முயற்சிகளை செய்கிறது. இதனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாத ஒரு பெரிய சவாலை சந்தித்து நிற்கிறது.

இந்த சவாலை நாம் வெற்றிகரமாக எதிர் கொண்டு முறியடிப்பதாயின் ஒரு திடமான, வலுவான தேசிய எதிர்ப்பியக்கத்தை நாம் கட்டி எழுப்ப வேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுது தான் அது மக்கள் போராட்டமாக, தேசிய போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகிறது.

எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி, மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான, உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தை கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது.

எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை கலை, இலக்கியப் படைப்புகள் தரிசித்து நிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிணாமங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினை சிருஷ்டி கர்த்தாக்கள் சித்திரித்துக் காட்ட வேண்டும். மக்களிடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலையுணர்வையும் தூண்டிவிடும் கலை, இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும். இத்தகைய கலை, இலக்கியப் படைப்புகளே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உயிரூட்டுவதாகவும் அமையும்.

போர்க்காலக் கலை, இலக்கிய மறுமலர்ச்சிக்கு களமாகத் திகழ்ந்து வரும் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ள முத்தமிழ் விழாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்
வெளியிட்ட முத்தமிழ்விழா மலர் (1992)க்கு
தலைவர் வழங்கிய ஆசிச்செய்தி

க
வி
தை

# எங்கள் தேசம் புனிதமானது

வவுனியா திலீபன்

நெருப்பு விழும்!
குருதி கொட்டும்!
கண்ணீர் பாயும்!
இருள் குவியும்!

ஆனாலும் என்ன?
எங்கள் தேசம்
புனிதமானது!

வயல் தேகங்களையும்
வனத்தின் அங்கங்களையும்
வருடி வரும்
இந்தக் காற்றிற்குத் தெரியும்
எமது மண்ணின் பெயரை
உச்சரிப்பதற்கு!
வரப்பு மேடுகளைத் தாண்டி
சல சலத்துப் பாயும்
தண்ணீருக்குத் தெரியும்
எமது மண்ணின் மகிமையைப்
பாடுவதற்கு!

எதிரியால் -
இந்த மண்ணை
என்ன செய்ய முடியும்?
தீக்குச்சியால்
வானத்தை எரிக்க முடியுமா?
பூக்களிலிருந்து
பரவும்
வாசத்தைப் போல
இந்தப் பூமி
புனிதமானது!
தளிர்களில் துலங்கும்
பளபளப்பைப் போல
இந்த மண்
பவித்திரமானது!
இன்னும் -
தூரத்தில் சொக்கிக்கிடக்கும்
தோழர்களே -
எழுந்து விடுங்கள்!

இருள் விலகுவதும்
நெருப்புத் தணிவதும்
தண்ணீர் வற்றுவதும்
எமது எழுச்சியில் தான்
உள்ளது

எதிரியை
இரத்தத்தால் தான்
எரிக்க முடியும்!

நாடகம்

# நாடக அறிவு நிலையும் நினைப்பும்

குழந்தை ம. சண்முகலிங்கம்

கற்றலும் பயிற்சியும் அனுபவமும் அனைத்துக் கலைகளுக்கும் அவசியம். நாடகம் இதற்கு விதிவிலக்காக அமைய முடியாது. 'நாடகமும் கற்றறிய வேண்டியதொரு கலை' தான் என்ற உணர்வு இன்று நாடக ஆர்வலர் மத்தியில் குறிப்பிடக் கூடியளவு பரவிவருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. கற்றலின் அவசியத்தை உணர்ந்தும், அதனை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அனைத்தையும் நாம் அறிவோம் என்ற உணர்வுடன், தமக்குத் தெரியாததைப் பிறருக்குப் புகட்டுவதற்கு வகுப்புகள் வைத்து நடாத்துவாரும் சிலர் இருக்கின்றனர். (எமக்கு எல்லாம் தெரியும் என்பவர்களுக்கு எதுவுமே தெரியாது என்பதைத் தான் உலகம் ஏற்கும்) நாம் பெற்ற ஒரு சிறு அறிவை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதோடு, அனைவரும் இணைந்து மேலும் அறிவை வளர்த்துக் கொள்வோம் எனக் கருதுவோரும் உளர். ''நான் எதையுமே கற்று அறிந்து கொண்டதில்லை, வேறு எவருடைய நாடகங்களையும் நான் பார்த்ததில்லை, எனது தனித்த சிந்தனையின் வெளிப்பாடாகவே அனைத்தையும் செய்து வருகிறேன்,'' எனக்கூறும் மிகச் சில கலைஞர்களும் இருக்கின்றனர். வேறு எவருடைய நாடகங்களையும் பாராமல், அவற்றிலிருந்து சில அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளாமல் நாடகம் படைக்கிறோம் என்று கூறுவோர், உண்மையில் உண்மையைக் கூறவில்லை என்பது தான் உண்மை. அத்தகையோரது படைப்புக்கள் பலவற்றையும் பார்க்கும் போது, அப்படைப்புக்களில் பிற கலைஞர்களின் படைப்புக்களின் சாயலை வெளிப்படையாகவே காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் ஏன் இவ்வாறு

தம்மைத் தாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டும் என்பது விளங்கவில்லை.

கலையுலக மேதைகள் யாவரும் சூழலிலிருந்தும், பாரம்பரியத்திலிருந்துமே தமது படைப்புக்களுக்கான பொருளையும் ஏனைய மூலகங்கள் பலவற்றையும் பெற்றுக் கொண்டனர். தாம் புறத்தே இருந்து பெற்றுக் கொண்டவற்றைத் தமது மேதைமையால் இணைத்து இசைவுபெற வைத்து, கலையின் உச்சங்களைத் தொட்டனர். நாடக உலகில், எக்காலத்துக்குமுரிய மேதையாக வீற்றிருக்கின்ற ஷேக்ஸ்பியர், செந்நெறிக் காலத்து கிரேக்க, றோம நாடக மரபுகளைத் தனது காலத்தில் இங்கிலாந்தின் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களின் நாடகப் படைப்புக்களினூடாகப் பெற்றுக் கொண்டதுடன், தனது காலத்தினதும், தனக்கு முந்திய காலத்தினதும் பாரம்பரியக் கலை மரபுகள் பலவற்றையும், மத்திய கால ஐரோப்பாவின் நாடக மரபுகளையும் பெற்றுத் தனது நாடகவாக்கத்துக்கான பொருள்களாகப் பயன்படுத்தித் தனது மேதைமையினால் அவலச்சுவை, மகிழ்நெறி ஆகிய நாடக வகைகளின் உச்சங்களைத் தொட்டார். அவர் எந்த வகையிலும் தான் தோன்றீஸ்வராக எழுந்து நின்று, மக்களதும், அறிஞரதும் மதிப்பையும் வணக்கத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஜேர்மன் நாடக மேதை பேர்டோல்ட் பிறெஃட் தான் தேடி அலைந்த நாடக முறையினைச் சீன, யப்பானிய நாடகங்களில் கண்டு வியப்புற்று, பின் அவற்றில் காணப்பட்ட சில மூலகங்களையும் கைக்கொண்டே தமது புதிய நாடக வடிவமான 'காவிய அரங்கை' அறிமுகப்படுத்தினார். 'உலகம் யாவையும் தாமுளவாக்கல்' என்ற நிலை இறைநிலை. நாம் மனிதர். எனவே உலகம் யாவையும் எம்முடையதாக்கிக் கொண்டு, அதிலிருந்து புதியதொரு வடிவத்தைப் படைக்க முடியுமென்பதே உண்மை; அதுவே யதார்த்தமும் கூட. மேதைகள் மட்டுமன்றிச் சாதாரண கலைஞர்களின் அனுபவமும் இதுவே.

நாடகக்கல்வி பற்றிய விளக்கம் சிறிதளவு பெறப்பட்டு வரும் இக்காலகட்டத்தில், மற்றுமொரு வேண்டாத செயற்பாட்டைக் காணக்கூடியதாகவும் உள்ளது. இது எமது சமூகத்தின் தனிப் பண்பின் பயனாக விளையுமொன்று எனலாம். கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வைக்கும் மனோபாவம் எனலாம். நாடகக்கல்வியின் அடிப்படைகளையேனும் அறிந்து கொள்வதற்கு முன்னமே, நாடகம் பற்றிய வகுப்புக்களையும், களப்பயிற்சிகளையும் அவசர அவசரமாக ஆரம்பித்து நடத்தச் சிலர் முற்பட்டுள்ளனர். எமது சமூகத்தில் பொதுக்கல்வி என்பதே இத்தகைய போட்டிகளாலும், யாரும் போதிக்கலாம் என்ற மனப்பான்மையாலும் பாதிப்படைந்து வருகின்ற வேளையில், நாடகக்கல்வி அதற்கு விதிவிலக்காக அமையுமென்று எதிர்பார்ப்பது பலருக்கு கேலிக்குரியதொன்றாகத் தோன்றக் கூடும்.

அரசாங்கப் பாடசாலைகளில் பயிற்றப்படாத ஆசிரியர் பெருந்தொகையாக இருக்கின்றனர். பயிற்சி பெறுவதாயின் கற்பித்த அனுபவம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முரண்பாடு இப்படி இருக்கையில், தனியார் கல்வி என்பது மிகப்பரவலாகி விட்டது. வீட்டுவிறாந்தைகள் தோறும் குழந்தைக் கல்வி நிலையங்கள் வளர்ந்துள்ளன. எந்தவிதமான பயிற்சியும், அனுபவமும் இல்லாத பெண்பிள்ளைகள் இக் குழந்தைக்கல்வி நிலையங்களில் ஆசிரியப் பணிபுரிகின்றனர். பூரணமான பயிற்சியினைப் பெற்ற பின்னரே ஒருவர் ஆசிரியராக வகுப்புறைக்குள் செல்ல முடியும் என்றநிலைதான் வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவுகிறது. எமது பொதுக்கல்வியே ஆரம்பம் முதல் முடிவு வரை பாழ்

படுகிறது. இதற்கே இந்தக் கதியாயின், நாடகக்கல்வியை விட்டு வைக்கவா போகிறார்கள். இருப்பினும் நாடகத்தில் உண்மையான நாட்டமுள்ளவர்கள், ஆரம்பத்திலிருந்தே இவ் விசயத்தில் விழிப்பாக இருப்பது நல்லதென நம்புகின்றேன்.

கல்வி, கலைகள் யாவும் இந்தப் போட்டிச் சமூகத்தின் வியாபாரப் பண்டமாக மாறிச் சீரழியும் நிலையில், நாடகம் பற்றிய கற்றலும் அவ்வாறு அமைந்து விடும் அறிகுறி தென்படுவதில் என்ன தவறு இருக்கப் போகிறது. இவ்வாறு கூறுவதைக் கூடச் சிலர் வக்கிரத்தோடு நோக்க முற்படுபவர், நாடகக் கல்வி பரவலாவதை விரும்பாத 'நாட்டு வைத்தியக்' குணத்தால் தான் இவர்கள் இப்படி அங்கலாய்க்கிறார்கள் என்று எம்மீது குறை காண முற்படுவர். நிச்சயமாக அப்படி ஒன்றுமில்லை. இந்த நாட்டில் நாடகக்கல்வி பரவலாக வேண்டும் என்பதையே நாம் மிகவும்விரும்புகின்றோம். அதற்காக எம்மாலான, எமதறிவுக்கு எட்டிய எதையும் செய்யவும் விரும்புகின்றோம். அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதையே என்றும் விரும்புகின்றோம். நாடகக்கல்வி சரியான முறையில், சரியான திசையில் வளர்ந்து செல்ல வேண்டுமென்பதே எமது அக்கறை. 'முதற் கோணல் முற்றும் கோணல்' ஆகிவிடும் என்ற கவலை மட்டுமே எமக்கு உள்ளது. எனவே தான் நாடகக்கல்வி பற்றியதொரு அறிமுகத்தின் அறிமுகத்தைப் பற்றி இங்கு சிந்திக்கத் தலைப்படுவது அவசியமென உணரப்பட்டது.

நாடகக்கல்வியை நாம் மூன்று மட்டங்களில் வைத்து நோக்குவது நல்லதென விரும்புகின்றேன்;

1) குழந்தைகளினதும், ஆரம்பப் பாடசாலைச் சிறார்களினதும் கல்வியில் நாடகத்தின் பங்கு;

2) இடைநிலைப் பாடசாலை முதல் புல்கலைக்கழகங்களின் கல்வியில் நாடகத்தின் இடம்;

3) சமூகத்தில் நாடக, அரங்க நடவடிக்கையில் ஈடுபடுவோர், ஈடுபட ஆர்வங் கொள்வோருக்கான நாடகக்கல்வி.

## சிறுவர் கல்வியில் நாடகம்

குழந்தைகளின் கல்வியிலும், ஆரம்பப் பாடசாலைக் கல்வியிலும் நாடகம் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகிறது. மேலைத்தேயங்களில் இது நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு நிலைகளில் சிறுவருக்கான நாடகம் நோக்கப்படுகிறது; 1) ஆக்க நாடகம் எனவும், வகுப்பறை நாடகம் எனவும், விளையாட்டு முறைமை எனவும் இது கொள்ளப்படுகிறது. இங்கு நாடகம் என்பது ஒரு கற்றல் முறைமையாக, பிள்ளைகளின் ஆளுமைவிருத்திக்கான ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. விளையாட்டுப் போலவே கல்வி, சிறுவரைப் பொறுத்தவரையில் அமைய வேண்டும் என்பர். விரும்பி ஈடுபடும் ஒருதொழிற்பாடு தான் விளையாட்டு; கல்வியும் அத்தகைய தொரு மனநிலையை ஏற்படுத்தக் கூடிய சூழலிலேயே நிகழ்த்தப்படுவது அவசியம். (ஆங்கிலமொழியில் 'பிளே' (*Play*) என்ற சொல் விளையாட்டையும் நாடகத்தையும் ஒரு சேரக் குறிக்கும் ஒரு சொல்லாக அமையும் சிறப்பைப் பெற்றுவிட்டது) சிறுவர்களது வகுப்பறையில் நடத்தப்படும் ஆக்க நாடகம் குழந்தைகளின் ஆக்கத்திறனை இயல்பான முறையில் விருத்தி செய்ய உதவுகிறது. சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் சுதந்திரமாகச் செயற்படும் இயல்பு, கற்பனை விருத்தி, கருத்தூன்றிக் கருமமாற்றுதல், அவதானத்தை வளர்த்தல், கலையை நயக்க்கும் பண்பு, அழகியல் உணர்வு விருத்தி, வியத்தகு வினோதங்களைச் சிருஷ்டித்துத் தனது மனவெழுச்சிகளைச் சமப்படுத்திக்



நகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

கொள்ளும் ஆற்றல் இலக்கியங்களை நயத்தல், மனவெழுச்சிப் பிறழ்வுகளைச் சீராக்கிக் கொள்ளுதல், உடல் வலிமையையும் உள வலிமையையும் வளர்த்தல், கூடிக்கருமமாற்றும் பண்பு, கலந்துரையாடும் திறன்விருத்தி, பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல், தன் கருத்தை நயமாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல், புலன்களைக் கூர்மைப் படுத்திக் கொள்ளுதல், தலைமை தாங்கும் கும் பண்பு தலைமைக்குக் கட்டுப்படும் பான்மை, பேச்சு, எழுத்துத்திறன்விருத்தி பிறரில் நம்பிக்கை வைத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல், மேலான வாழ்விலக்குகளை வகுத்தமைத்துக் கொள்ளல். பொறுப்புணர்வை வளர்த்தல், எப்பொழுதுமே விழிப்பாயிருத்தல் எனும் பல இலக்குகளைக் கருத்திற் கொண்டு, எதிர்கால மனிதத்தின் தந்தையாகப் பிள்ளையை வளர்த்தெடுப்பதே வகுப்பறை நாடகத்தின் பணியாகும். இங்கு பிள்ளை, தனது திறன்களைத் தானே கண்டறிந்து விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டுகிறது. 2) சிறுவர் அரங்கு என ஒரு நிலையிலும் நாடகம் கருத்திற் கொள்ளப்படுகிறது இந்த நிலையில் நடிப்போர், பார்ப்போர் என்ற ஆற்றுகை — பார்வையாளர் எனவுள்ள முறைசார் நாடக அரங்கு இடம் பெறுகிறது. எழுதித் தயாரிக்கப்பட்ட நாடக எழுத்துருவொன்று நடிகர் தெரிவின் பின்னர், முறையாக ஒத்திகை பார்க்கப்பட்டு, ஏனைய அரங்கச் சாதனங்களினதும், மூலகங்களினதும் துணையுடன் பார்வையாளர் முன்னிலையில் நிகழ்த்திக் காட்டப்படும். இந்த நாடகம், மேடையேற்றம் வரை உருவாக்கம் பெறும் படிமுறைகள் பலவாறு வேறுபடும். நாடக எழுத்துரு மாணவரின் கூட்டுருவாக்கமாக, தனியொரு மாணவனது படைப்பாக, ஆசிரியரின்படைப்பாக, வேறு ஒருவரின் படைப்பாக, நாடக நூலொன்றிலுள்ளதாக இருக்கலாம்.

எமது நாட்டில் குழந்தைக் கல்வியில் ஆக்க நாடகம் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு ஐந்து வரையிலான கலைத்திட்டத்தில் 'அழகியற்கல்வி'யில் ஆக்க நாடகத்துக்குக் குறிப்பிடக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது ஆனால், கலைத்திட்டத்தில் அச்செழுத்துகளில் இறுகிப் போய் இருக்கும் நாடகம் வகுப்பறைக்குள் இன்னமும் செல்வதாக இல்லை. ஆக்கநாடகம் பற்றியோ, சிறுவர் அரங்கு பற்றியோ ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பெரிய அளவில் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரியவில்லை. 'சிறுவர் அரங்கு' என்ற பெயரில் தயாரிக்கப்படும் நாடகங்களும், பெருமளவில் சிறுவருக்குரியனவாகத் தோன்றுவதில்லை இவை பற்றியெல்லாம் நாம் சிந்திக்கும் நாள் எந்நாளோ?

## இடைநிலைப்பள்ளியிலும் பல்கலைக் கழகங்களிலும் நாடகம்

க பொ த உயர்தர வகுப்பில் 'நாடகமும் அரங்கியலும்' எனும் பாடம் 1977 முதல் இருந்து வருகிறது இதுவரை மூன்று நான்கு பாடசாலைகளில் அது அறிமுகமாகியுள்ளது. இப்பாடத்தைத் தனது மாணவர்களுக்கு முதல் அறிமுகப்படுத்திய கல்லூரி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகும் மூன்று வினாத்தாள்களைக் கொண்டதாக இப் பாடம் பரீட்சிக்கப்படுகிறது மூன்றாவது வினாத்தாள் செய்முறை பற்றியது. ஆயினும் செய்முறை என்பது செய்து காட்டல் நிலையில் பரீட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு இதில் இல்லை இருந்தாலும் 'சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி' போல இது நின்று பயன்தருகிறது. இதற்கு மேல் பாடசாலையில் கல்வியாகப் போதிக்கப்படுவதற்கு கலைத்திட்டத்தில் இடமில்லை. தமிழ்த்தினம், ஆங்கில தினம், பரிசளிப்பு விழா, இசை, நடன, நாடகப் போட்டி, ஸ்தாபகத் தினம் போன்ற சடங்காசார வைபவங்களில் நாடகம் மேடை

யேறுவதற்கு வாய்ப்பு, சில பாடசாலைக ளில் உள்ளது. பெரும்பாலான பாடசாலை களில் இவை ஆர்வத்தோடு செயற்படுவ தில்லை. மிகப் பெரும்பாலான பாடசாலை களில் இவை செய்யப்படுவதே இல்லை. ஆண்டு ஆறு முதல் பதினொன்று வரையி லான வகுப்புக்களில் சித்திரம், இசை, நடனம் என்பன அழகியற் பாடங்களாக உள்ளன. இவற்றோடு நாடகமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்படுவது விரும்பத்தக்கது. நாடகம் தனியொரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்படாதவிடத்து, மேற்கண்ட பாடங்களில் ஒன்றாகவேனும் சேர்க்கப் படுவது நல்லது. இதுபற்றி நாம் சிந்திக்கப் போகும் காலம் எக்காலமோ?

யாழ். பல்கலைக் கழகத்தில் 1985 முதல் ''நாடகமும் அரங்கியலும்'' போதிக் கப்பட்டு வருகிறது. பொதுக்கலைத்தேர்வு டன் சிறப்புக்கலைத் தேர்வுக்கான பாடமாகவும் உள்ளது. பல்கலைக் கழக நாடகக் கல்வியினால் விளையும் பயன்களை இனி மேல்தான் எதிர்பார்க்க முடியும். வெளிவாரிப் பட்டப் படிப்பின் ஒரு பாடமாகவும் இது சேர்க்கப்பட்டுள்ளது. நாடகத்தில் உண் மையான நாட்டமுள்ள ஆசிரியர்களும் பிறரும் இதனால் பயனடைய வாய்ப்புண்டு.

நாடகம் கல்வியாக வரும் வேளையில், அக்கலையில் உண்மையான ஆர்வமில்லாத பலரும், வெறுமனே புதியதொரு பாட மென்ற வகையில் மட்டும், அதைப் படிக் கும் நிலை பாடசாலையிலும் பல்கலைக் கழகத்திலும் எழக்கூடும். இருப்பினும், நாடகம் பற்றிய அறிவு பரவலாவதற்கு இது வாய்ப்பளிக்கும் என்பதை மறுப்பதற் கில்லை.

மேற்கண்ட இரு கல்வி நிறுவனங் களைத் தவிர, வட இலங்கைச் சங்கீதசபை யிலும் 'நாடகமும் அரங்கக் கலைகளும்' ஒரு பாடமாகப் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. இதுவும் நாடகக்கல்வியைப் பரவலாக்க ஓரளவு உதவுகிறது. நாடகத்தைக் கற்றறி வதற்கு விரும்பும் மாணவர்களுக்கும் பிறருக் கும், அதனைக் குறிப்பிடக்கூடியளவு நல்ல முறையில், போதிப்பதற்குப் போதிய நபர் கள் இல்லாதிருப்பது இன்று பெரிதும் உணரப்படுகிறது.

## சமூக அரங்கில் நாடகக் கல்வி

பாடசாலைகள், பல்கலைக் கழகம் என் பவற்றைச் சாராத ஏனைய நாடக மன்றங் கள், நடிகர் குழுக்கள் என்பன இங்கு 'சமூக அரங்கு' எனக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட கல்வி நிறுவனங்கள் மூலம் பெறப்படும் நாடகக் கல்வி சிறிய அளவில் சமூக அரங்குக்கும் பயன்படவாய்ப்புண்டு. மேலை நாடுகளில் போன்று இங்கு நாட கம் தொழில் முறைசார்ந்த தொரு கலை யாக வரும் வாய்ப்பு இன்னமும் இல்லை. பயில்நெறிக் கலையாகவே இருந்து வருகி றது. அதனால், நாடகத்தில் நாட்டமுள்ள வர்கள், வேறு தொழில்களில் ஈடுபடும் வேளையில் தமது ஓய்வு நேரங்களை நாட கத்துக்காகச் செலவிடுவர்; அத்தோடு மாண வர்களும் ஆர்வம் காரணமாக ஓய்வு நேரங் களில் இக்கலையில் ஈடுபடுவர். எனவே, இத்தகையோருக்கு நீண்டகாலம் கல்வி நிறுவனங்களில் கற்கும் அவகாசம் இருப் பதில்லை. இத்தகையோருக்காகக் குறுகிய காலக் கல்வியும் பயிற்சியும் திட்டமிடப் படுவது அவசியம் இன்று சில நிறுவனங்கள் மிகக் குறுகிய காலப் பயிற்சிகளை ஆங்காங்கு செய்து வருகின்றன. ஆயினும் அவற்றின் பணி போதும் என்று சொல்லு மளவுக்கில்லை. நாடகம் பற்றிய அறிவி னைப் பெற வேண்டுமென்ற ஆவல் இன்று பரவலாகப் பல இளைஞர் மத்தியில் எழுந் துள்ளது. அவர்களுக்கான வார இறுதிப் பயிற்சிகளை, அல்லது குறுகியகால தொடர் பயிற்சிகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்க முன்வருவது அவசியம்.

அவர்கள் பெற்ற பயிற்சியினை அத்தாட்சிப் படுத்தும் பத்திரங்களை வழங்கும் தகுதி பல்கலைக்கழகத்துக்கு உண்டு. அப்பத்திரம் பங்குபற்றுவோருக்கு, வேலைவாய்ப்பின் போது உதவக் கூடிய தொரு மேலதிக ஆவணமாக இருக்கும். இந்த நிலைமை தோன்றும் வரை, நாடக ஆர்வலருக்கு உதவக் கூடிய தொரு கல்வி மார்க்கமாக 'நாடகக் களப்பயிற்சிகள்' அமையக் கூடும். இக்களப் பயிற்சிகளே இன்று ஓரளவு நடைபெற்று வருகின்றன. குறுகிய களப்பயிற்சிகள் நாடகம் பற்றியதொரு அறிமுகத்தை மட்டுமே செய்யமுடியும் அவ்வறிமுகத்தைப் பெற்று, ஆர்வம் கொள்வோர் தொடர்ந்தும் நாடக அறிவைப் பெற முயலலாம்.

### களப்பயிற்சிகள்

நாடகத்துக்கான களப்பயிற்சிகள், நாடக, அரங்க அறிவையும் அனுபவத்தையும் வழங்குவதோடு, மனித ஆளுமையையும் விருத்தி செய்யத் துணைபுரிவது அவசியம். இங்கு வெறுமனே, தொழில் முறை நடிகர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும், அரங்கக் கலைஞர்களுக்குமான பயிற்சியினை அளிப்பது நோக்கமாக இருப்பது தவறு. சமூக உணர்வுள்ள மனிதர்களாக, மானிடநேயம் கொண்டவர்களாக நின்று மக்களுக்கு நாடகம் மூலம் பணிபுரியும் ஆவல் கொண்டவர்களை உருவாக்குவதே எமக்கு அவசியமாக இருக்கும். எனவே, முதலில் மனிதத்தை வளர்த்தெடுப்பதற்கான மார்க்கங்களை நாம் கண்டறிந்து அவற்றை இக்களப்பயிற்சிகளினூடாக நடைமுறைப் படுத்தி, சுதந்திரத்தை அவாவுகின்ற, தளைகளை அறுத்து நிமிர்கின்ற, நேயத்தை நெஞ்சத்திருத்துகின்ற மனிதர்களை இக் கலைஞர்களில் தோற்றுவிப்பது அவசியம். அதற்கான எத்தனையோ பயிற்சிகள் உள்ளன இருக்கின்ற பயிற்சி முறைமைகளை அப்படியே கண்மூடிக் கைக்கொள்ளாமல், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவற்றைப் பயன்படுத்துவதோடு, எமது பிரத்தியேகச் சூழலுக்கு உகந்த முறைமைகளை நாம் கண்டறிந்து கொள்வது அவசியம் மேலைத்தேயத்துப் பயிற்சி முறைமைகளைக் குரங்குப்பற்றோடு பற்றாது மேலைத்தேயத்தவை என்பதற்காக நல்லவற்றையும் நிராகரிக்காது, எமது மரபுகள் என்பதற்காக பொருந்தாதவற்றையும் பற்றுறுதியோடு பிடித்துக்கொள்ளாது, கற்பனைத் திறத்தோடும், கலைநயக்கோலத்தோடும் பயிற்சிகளை, நயத்தகு விளையாட்டாக நடத்தி உள்ளத்தில் ஊற வைக்கவேண்டும். எனவேதான், களப்பயிற்சிகளை நடத்துவோர், சிறந்த கலைஞர்களாக, ஆக்கத் திறனுடையவராக, மனித நேயமுடையவராக இருப்பது அவசியமாகின்றது. கற்பனை கெட்டவர் களப்பயிற்சி நடத்த முற்பட்டால், நாடக விளையாட்டுக்கள் தென்னாலிராமன் குதிரைபோலாகிவிடும்.

எமது சமூகத்தில் இன்று களப்பயிற்சிகளை நடத்த முற்படும் போது அவற்றை இரண்டு படிமுறைகளாகப் பகுத்து நடத்துவது அவசியம் என்பதை அனுபவம் எமக்குப் புகட்டுகிறது. முதலாவது படிமுறையில், கூடிய அளவில் நாடக விளையாட்டுக்களைப் பயன்படுத்தி, ஒவ்வொருவரும் தம்மைத்தாம் கண்டு உணர்ந்து கொள்வதோடு ஏனையவர்களையும் புரிந்துகொண்டு பரிவு, பாசம், அன்பு, நேயம் என்ற உணர்வுகளைச் சுதந்திரமாகப் பரவவிடக் கூடிய நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டியது இன்று மிக அவசியமாகிவிட்டது. சுயநலத்தளை நீங்கிச் சுதந்திர உறவு வளர வேண்டிய தேவையை எமது களப்பயிற்சிகள் எமக்கு உணர்த்திவருகின்றன. களப் பயிற்சிகளில் கைக்கொள்ளப்படும் கருத்தூற்றல் பயிற்சிகள் இன்று எமக்குப் பல உண்மைகளை உணர்த்துவதோடு பலசவால்களையும் பிறப்பித்த வண்ணம் இருக்கின்றன. புண்பட்டுப் புரையோடிய மனங்களுக்குத் தேறுதல் அளித்து, வாழ்வில், நம்பிக்

கையை ஊட்டும் சாதனமாகவும் அவை கருத்தூற்றப்பயிற்சிகள் வளர்த்தெடுக்கப் படவேண்டியுள்ளதை நாம் இன்று உணர்கிறோம். 'உளவளத்துணை' சார்ந்ததொரு விஷயமாகவும் இன்று களப்பயிற்சிகள் ஆகி வருகின்றன. நாடகத்தின் பிணிநீக்கும் பணி புதியதொருபரிமாணத்தை இங்கு இன்று பெற்று வருகிறது. குண்டு மழையால் சிதறுண்டு கொண்டிருக்கும் ஒரு மண்ணில் வாழும் மக்களின் சிந்தையைச் சீராக்கும் ஒரு மார்க்கமாகவும் இக்களப் பயிற்சிகள் பயன்படும் என்பது அறியவருகின்றது.

இதன் காரணமாக, நாடகம், அரங்கக்கலைகள் சார்ந்த பயிற்சிகளும் விளையாட்டுக்களும் இன்று, களப்பயிற்சிகளின் இரண்டாவது படிநிலையாகவே கொள்ளப் படவேண்டியுள்ளது அரங்கக்கலையில் ஈடுபடுவோர், முதலில் தாம் சீரான மனநிலையைக் கொண்டவர்களாக இருப்பது அவசியமாகின்றது. சமூகப் பொறுப்புள்ளவர்களாகளாக அவர்கள் இருப்பது அவசியம். கலைகள் வெறுமனே பொழுதுபோக்குக்காகவெனப் படைக்கப்படுவதில்லை. எனவேதான், முதலில் சிறந்த மனிதர்களை உருவாக்கிக் கொண்டு, பின்னர் அவர்களைக் கலைஞர்களாக்குவது பற்றிச் சிந்திக்கப்படுகிறது.

நாடகம், அரங்கம் சார்ந்த களப்பயிற்சியில் நடிகர்களுக்கான பல்வேறுபட்ட பயிற்சிகளும், நெறியாளுகை, காட்சி விதானிப்பு, ஒளியமைப்பு, இசை, நடனம், ஒப்பனை, வேடஉடுப்பு சம்பந்தப்பட்ட பயிற்சிகளும், நாடகத் தயாரிப்பு சார்ந்த அறிவும், உலக நாடுகளின் நாடக, அரங்க வரலாறு பற்றிய பொதுவான அறிவும் புகட்டப்படுவது அவசியம். சிறுவரின் ஆளுமை விருத்திக்காகச் செய்யப்படுவன வென முன்னர் கண்ட அனைத்தும், இங்கு பெரியவர்களின் ஆளுமை விருத்திக்காகவும் செய்யப்படுவது நல்லது. எனவே, ஆளுமைக்கான பயிற்சிகளும், அரங்கப் பயிற்சிகளும் ஒன்றுக் கொன்று உதவுவனவாக அமைவதால், களப்பயிற்சியை நடத்துவோர் இத்துறைசார்ந்த அறிவினைக் குறிப்பிடக்கூடியளவு பெற்றிருப்பது அவசியமாகும். அவ்வாறில்லாது மேலெழுந்தவாரியாகச் செய்ய முற்பட்டால், களப்பயிற்சிகள் மூலம் பெறப் படும் பயன்கள் மிகக் குறுகியவையாக இருப்பது மட்டுமன்றி. களப்பயிற்சிகளே கேலிக்குரியனவாக அமைந்து விடும்.

நாடகம் பற்றிய அறிவினை வளர்க்க முற்படும் அனைவரும் ஒன்றிணைந்து, எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, தமது அறிவினைப் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு, பணி புரிய முன்வருவது அவசியமென்பதை உணர்ந்து கொள்வது, நாடகக் கலைக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய ஒன்றாக இருக்கும். □□

*"பெண் புரட்சிக்காரர்களைத் தலைமறைவாக இருக்க உத்தரவிட எனக்கு மனமில்லை. ஆனால் அவர்களது கட்டுப்பாட்டையும், மனத்திண்மையையும் நேரில் பார்த்த பிறகு அவர்கள் எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகி விட்டது. அதனால் இப்போது தலைமறைவாக இருந்து கூட வேலை செய்ய நான் அவர்களை அனுமதிக்கிறேன்"*

சிட்டகாங் புரட்சித் தலைவர் சூர்யா ஸென்.
(சிட்டகாங் வீரர்களில் கல்பனாதத்)

சிறுகதை

# மானம் ஒன்றே பெரிதென

கே. எஸ். ஆனந்தன்

*குடதிசை வானில் குங்குமச் சிதறல்கள். செந்தழலில் உருகும் தங்கக் கிண்ணமாய் கரைந்துகொண்டிருந்தான் கதிரவன். படை பதைக்கும் வெயிலில் பிரயாணம் செய்த களைப்பை மாலைத் தென்றல் வருடிக்கொடுக்க இருட்டுவதற்கு முன்பாக சிங்கக் கோட்டையை அடைந்துவிடவேண்டும் என்ற முடிவில் விரைந்து சென்ற புரவியை மேலும் விரட்டிக்கொண்டிருந்தான், அதில் பிரயாணம் செய்துகொண்டிருந்த இளைஞன். எசமான விசுவாசம் கொண்ட அந்த அசுவம் தீயை மிதித்துவிட்டது போன்று விரைந்து பாய்ந்து கொண்டிருந்தது.*

ஓங்கி வளர்ந்த நாவல்களும், புளிகளும், ஆலும் அடர்ந்துநின்ற நெடுஞ்சாலையிலிருந்து அரண்மனை நோக்கிச் செல்லும் இராச வீதியில் திரும்பியதும் கோட்டை வாசலில் கம்பீரமாகப் பறக்கும் நந்திக்கொடி அவனை அழைத்துக் கொண்டிருப்பது போன்ற உற்சாகம் பிறந்தது. சாயரட்சைப் பூசைக்காக கோயில்களில் கண்டாமணிகள் ஒலிக்க ஆரம்பித்திருந்தன. அரண்மனை மேல் மாடங்களில் அகல் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன. கோட்டைத் தலைவனின் கூர்மையான விழிகள் புரவியில் வருபவனை அடையாளம் கண்டு கொண்டன. அடுத்த வினாடி கோட்டையின் மேலிருந்த முரசு முழங்கியது. மன்னருக்கும், அரசப் பிரதானிகளுக்கும் செய்தி பறந்தது.

சிங்கைநகர் அரண்மனை சுறுசுறுப்படைந்தது. முக்கிய அரசப்பிரதானிகள், அதிதிகள் வந்தால்தான் கோட்

டைத் தலைவன் முரசறைந்து செய்தி தெரிவிப்பான். ஒரு மாதத்திற்கு முன்பு நாட்டு நிலைவரங்களை அறிந்துவரப் புறப்பட்ட இளஞ்சூரியன் வந்திருக்கிறான் என்று ஊகித்துக்கொண்ட சிங்கைச் சக்கரவர்த்தி கனகசூரியன் தன் இளவலை வரவேற்க ஆயத்தமாகி அரண்மனை முகப்புக்கு வந்து நின்றான்.

□ □ □

சிங்கைநகர்க் கோட்டையும், மாட மாளிகைகளும் பழமை வாய்ந்தவை ஆயினும், காலத்துக்குக் காலம் புனர் நிர்மாணம் செய்துவந்தமையால் புதுப் பொலிவோடு விளங்கின. விசயகூழங்கைச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் ஒன்பதாவது பரம்பரையைச் சேர்ந்த கனகசூரியன் ஆட்சிபீடமேறிய பின்பு தான் தமிழரசு மீளவும் ஈழத்தின் வடபுலத்தில் மிக உன்னத நிலையை எய்தியிருந்தது.

சிங்கை சிறும், சிறப்பும் மிக்க அரசாக செழிப்புடன் விளங்கியது. குறுநில மன்னர்களுக்கு ஒப்பான கிராம ராட்சியத் தலைவர்கள் சிங்கையரசுக்குத் திறை செலுத்தி வந்தனர். கிராம ராட்சியங்கள் விவசாயத்தில் செழிப்புடன் திகழ்ந்தன.

மன்னார், சிலாவத்துறை முதலிய இடங்களில் முத்துக்குளிப்பு நடைபெற்றது. முத்துவணிகம் சிறப்பாக நடைபெற்றதால் பிறதேச வணிகர்கள் இங்கே வந்து வணிகம் செய்ய முற்பட்டனர். கடற்கொள்ளைக் காரர்களின் கெடுபிடிகளைக் கண்காணிப்பதற்காகவும், கடலில் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் திறமைவாய்ந்த கடற்படையும் இருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட நாவாய்கள் (போர்க்கலங்கள்) கப்பற்துறை, சம்புக்கோளம், மன்னார், சிலாவத்துறை முதலிய துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

சிங்கமாப்பாணனைத் தளபதியாகக் கொண்ட தரைப்படையும் மிக வலிமை பொருந்தியிருந்தது. ஈழத்தின் வட கிழக்குப் பிரதேசங்கள் யாவும் சிங்கையின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், புத்தளம், நீர்கொழும்பு, வத்தளை ஆகிய இடங்களில் அரபு வணிகர்களோடு வர்த்தகம் செய்யும் உரிமையையும் கொண்டிருந்தனர். சிங்கையின் வளர்ச்சியும், செழிப்பும் சிங்கள ஆட்சியாளர்களுக்குள் கலகத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

கண்டியைச் சேர்ந்தவனும், செயவர்த்தனபுரத்தில் பெரும் மாளிகை அமைத்து அரபு வணிகர்களோடு வர்த்தகம் செய்து வந்தவனுமான சிங்களத் தலைவனான அழகக்கோனாரா நலிவடைந்த சிங்கள ஆட்சியாளர்களை ஒழித்து விட்டு அரியணை ஏறும் ஆசையிலிருந்தான். ஆனாலும் சிங்கையின் ஆட்சி அவனுக்குப் பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்தது. இரகசியமாகச் சதிசெய்து, வரிவசூலிக்கச் சென்ற சிங்கை அதிகாரிகள் சிலரைக் கடத்திச் சென்று தூக்கிலிட்டுவிட்டான். நாட்டுநடப்புக்களை அறியச் சென்ற சிங்கைச் சக்கரவர்த்தியின் இளவலான இளஞ்சூரியன் ஒற்றர்கள் மூலம் செய்தியறிந்தே அவசரமாக அரண்மனை திரும்பியிருந்தான்.

□ □ □

அரண்மனை வாசலில் அவனை வரவேற்க மன்னரும், மகாராணியும்,

வேறு பலரும் கூடியிருந்தனர் அது வரையும் அடக்கிவைத்திருந்த ஆவேச உணர்வுகள் வெடித்துச்சிதற ''அண்ணா'' என்று ஓடிச்சென்று மன்னரைத் தழுவிக்கொண்டான் இளஞ்சூரியன்.

பாசச் சுழலில் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சிந்தியதைப் பார்த்து உள்ளம் பூரித்த மகாராணியின் விழிகளிலும் நீர் முத்துக்கள்.

''பிரயாணக் களைப்பு நீங்க நீராடி விட்டு வாருங்கள் இளவரசே'' என்றாள் மகாராணி.

''அண்ணி முக்கியமாக ஒரு விடயம்பற்றி கூறிவிட்டே சிரமபரிகாரம். உள்ளே வாருங்கள் அண்ணா'' என்று நடந்தான் இளஞ்சூரியன்.

''தம்பி எதுவானாலும் காலையில் பேசலாம். நீ ஓய்வு எடுத்துக் கொள்ளப்பா'' என்றார் மன்னர்.

'இதுவரை காலமும் நாம் ஒய்வு எடுத்துக் கொண்டுதானிருக்கின்றோம் இனிமேல் நாம் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் எமது அரசுக்கு எதிரான சதிக்கூட்டம் விரைந்து முன்னேற ஆரம்பித்துவிடும்'' என்று கூறி நடந்தவற்றை விளக்கினான்.

''பதடப்படாதே தம்பி நாளை மந்திராலோசனைச் சபையில் இது பற்றி ஆராய்வோம்'' என்று ஆறுதல் கூறி அவனை நீராட அனுப்பினார் மன்னர்.

இளஞ்சூரியன் நீராடச் சென்று விட்டானாயினும் அவன் கூறிவிட்டுச் சென்ற விடயம் மன்னரின் மனதில் சுடர்விட்டு எரியும் தீயாய், சுவாலை விட்டெரிய ஆரம்பித்தது.

மறுநாட் காலையில் மன்னர் தலைமையில் கூடிய மந்திராலோசனைச் சபையில் தளபதி சிங்கமாப்பாணனும், கடற்படைதளபதி வீரகேசரியும் இளஞ்சூரியன் கருத்தை ஆதரித்தது மட்டுமன்றி, உடனடியாகப் படை எடுக்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய உற்சாகம் மன்னரின் ஆர்வத்தைத் தூண்டவே, முதலமைச்சரான வடுகநாதரைப் பார்த்து ''அமைச்சரே!'' என்றார் இளநகையுடன்.

''அரசே''

''தாங்கள் இதுவரை எதுவும் கூறாதிருப்பது தான் எனக்கு ஆச்சரியமாக விருக்கின்றது'' என்றார்.

''மெளனம் சம்மதத்தின் அறிகுறி என்பார்கள். தவிர தளபதிகள் இளவரசர், மன்னர் எல்லோரும் இளைஞர்கள். நானோ வயோதிபன். எம்மவர்க்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நாம் நல்லதோர் படிப்பினையைப் படிப்பிக்கவேண்டும். சொல்வதைச் செயலில் காட்டும் தங்கள் முன் வெறும் வார்த்தைகளால் சூழுரைக்க வெட்கப்பட்டே மௌனம் சாதிக்கின்றேன்'' என்றார்.

''அமைச்சரே! வீரத்தின் துணைவன் விவேகம். தங்கள் மதிநுட்பமே இன்று சிங்கையின் ஆட்சிகண்டு எல்லோரும் மலைத்துநிற்கின்றனர் தென்னிந்திய சாம்ராட்சியங்கள் கூட எம்முடன் உறவு கொண்டாடத் துடிக்கின்றன. இதற்குக் காரணம் தங்கள் விவேகம் தான்'' என்று சிரித்தார்.

''அண்ணா! நாம் நாடுபிடிக்க ஆசைப்பட்டுப் போராடப் புறப்பட வில்லை. ஆக்கிரமிப்புக்காக அடுத்த வனைக் கெடுக்கப் புறப்படவில்லை எமது அரசியல் அதிகாரிகள் என்று தெரிந்துகொண்டே தூக்கிலிட்ட அந்தக் கயவர்களுடைய கொட்டத்தை அடக்கி எமது மானத்தைக் காக்கச் செய்யும் போருக்கே புறப்படுகின் றோம். உயிரை விட எமக்கு மானம் தான் பெரிது என்பதை நிரூபிக்கப் புறப்படுகின்றோம்'' என்றான்.

அன்றே போர் முரசு அதிர்ந்தது. சிங்கையிலும், சுற்றுவட்டாரமெங்கும் போர்ச்செய்தி பரவியது. போர் வீரர் களுக்கு உற்சாகம். வேலும், வாளும், கேடயமும் கொண்ட கூட்டம் ஒரு புறம், வில்லும், அம்பும் ஏந்தியோர் ஒருபுறம் விளையாட்டுக்குச் செல்ல விருக்கும் சிறுவர்கள் போலக் குதூகல மாகத் துள்ளியது காளையர் கூட்டம். சுருங்கக் கூறின் சிங்கைநகரே போர்க் கோலம் பூண்டிருந்தது.

கதிரவன் வரவுக்காக கீழ்வானில் ஆரார்த்தி கரைக்கப்பட்டிருந்தது. 'கப்பற்துறை' எனும் துறைமுக வட் டாரத்தில் போர் வீரர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. நாவாய்கள் எல் லாம் அணிவகுத்து நின்றன. வீரகே சரி, போர்வீரர்களுக்கு உத்தரவுகளை வழங்கிக்கொண்டிருந்தான்.

அதே வேளையில் சிங்கைக் கோட் டையில் போர்முரசு அதிர்ந்து கொண் டிருந்தது. தளபதி சிங்கமாப்பாணன், இளஞ்சூரியன் இருவர் தலைமையிலும் புரவிப்படை அணிவகுத்து நின்றது. அரண்மனை மாடத்தில் மகாராணி உட்பட்ட பெண்மணிகள் பலர் படை அணிவகுப்பையும், போர் வீரர்களின் உற்சாகத்தையும் பார்த்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்து நின்றனர். எனினும் உள்மனது உருகியது. பாச மல்லவா?

''அண்ணா விடை கொடுங்கள் வெற்றியோடு திரும்புகின்றோம்'' என்று இளஞ்செழியன் குரல்கொடுத் தான்.

''தம்பி! உங்களையெல்லாம் பார்க் கும்போது நானும் வரவேண்டும் போல உள்ளம் துடிக்கின்றது' என்றார் மன்னர்.

''அரசே! இது ஒரு சாதாரண போர். நாங்கள் இருக்கும்போது தாங்கள் வரவேண்டுமா? தாங்கள் வகுத்த திட்டப்படியே படை நகர் கின்றது. வெற்றிச் செய்தியை விரைந்து அனுப்புகின்றோம்'' என்றார் தளபதி சிங்கமாப்பாணன்.

''வெற்றியோடு வாருங்கள்'' என்று மன்னர் விடை கூற, ஊது கொம்பு கள் ஒலிக்க, போர்ப்பறை அதிர்ந்தது. மேல் மாடத்திலிருந்து மகாராணியும், பெண்களும், முதியோரும் மலர் தூவி வாழ்த்தப் படை நகர ஆரம்பித்தது.

குதிரைகளின் கனைப்பும், போர்க் கருவிகள் கேடணங்களுடன் தட்டுப் பட்டதால் ஏற்பட்ட ஒலியும் சேர்ந்து சங்கீதமிசைக்க புரவிகளின் நகர் வினால் புழுதிப்படலம் மேகக்கூட்டம் போல, கிளம்பி வானத்தில் ஓர் மேகக் கூரை அமைத்தன.

காலைக் கதிரவன் ஒளிபட்டுத் தளதளக்கும் கடல்நீரைக் கிழித்துக் கொண்டே நாவாய்கள் அணிவகுத்துச் சென்றன. பாய்மரத்தின் உச்சியில்

பட்டொளிவீசிப் பறக்கும் நந்திக் கொடிகளுக்கு வெற்றிச் சாமரம் வீசுவது போன்று கடலலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன

மன்னர் கனகசூரியர் சிறந்த கல்விமான். பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். ஒருமுறை மலையாளத் துறைமுகத்தில் தங்கியிருந்த போது சீன யாத்திரிகரான 'இபன் பத்துதா' மன்னரைச் சந்தித்தார். சீன யாத்திரிகருக்குத் தமிழ் மொழியில் அதிகம் பேசமுடியாது போகவே அவருக்கு தெரிந்த பாரசீக மொழியில் மன்னர் உரையாடியதும் மகிழ்ந்து போய், மன்னர் கூடவே வந்து சிங்கை அரண்மனையில் விருந்தினராகத் தங்கிச் சென்றார். விசயநகர மன்னர் கனகசூரியனின் நெருங்கிய நண்பராகையினால் போர்ச் செய்தி கேட்டதும் தூதுவன் ஒருவனை சிங்கைக்கு அனுப்பியிருந்தார். சிங்கை அரசின் வலிமை தெரிந்தும் வலிந்து உதவ வந்த நண்பனுக்கு ''விரைவில் வெற்றிச் செய்தி அனுப்புகின்றேன். தங்கள் நல்ல நட்புள்ளத்துக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்'' என்று தூதுவனிடம் பதிலளித்திருந்தார்.

அதே சமயம் அரசின் ஆலோசனையறைக்குள் முதலைமைச்சர் வடுகநாதர் புன்முறுவலோடு நுழைந்தார்.

''வாருங்கள் அமைச்சரே. புன்னகை புரிகின்றீர்கள் புதினம் ஏதாவது ........?'' என்று அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

''அரசே! தாங்கள் வகுத்த திட்டப்படியே படைகள் சென்றுகொண்டிருக்கின்றன. சிலாவத்துறையில் நாவாய்கள் நங்கூரமிட்டிருக்க வீரகேசரி கரையோரமாகப் படையை நகர்த்திச் செல்கின்றான். இளஞ்சூரியனும் சிங்கமாப்பாணனும் பன்னாகம் (மாத்தளை) கடந்து அப்பாற் செல்வதாகவும், வழியில் எதுவித எதிர்ப்புமின்றியே படைகள் செல்வதாகவும் செய்திகள் வந்துள்ளன'' என்றார்.

''தென் இந்திய படையெடுப்புகளுக்குப் பயந்து அடிக்கடி தலைநகரை மாற்றும் சிங்கள மன்னர்களுக்கும், சூழ்ச்சியால் சிங்கள அரியணைகளை அடையத்துடிக்கும் கலகக்காரர்களுக்கும் எமது அரசு செழிப்புடனிருப்பது கண்களை உறுத்துகின்றன போலும். பாண்டிய மன்னரிடமே படை உதவி கோரியிருக்கின்றாராம் கோட்டை மன்னர் விக்கிரமபாகு. அழகக்கோனாரா நிறைய கூலிப்படைகளை அமர்த்திக் கொண்டே நாம் வர்த்தக அதிகாரம் பெற்ற பகுதிகளில் ஊடுருவி எமது அதிகாரிகளைப் பிடித்துச் சென்றிருக்கின்றான். ஒரு நாட்டின் வளர்ச்சியும். எழுச்சியும் அண்டை நாடுகளை அச்சுறுத்தவே செய்கின்றன. இப்படையெடுப்பு சிங்கள மன்னர்களுக்கும், கலகக்காரர்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்'' என்றார் மன்னர் கனகசூரியர்.

''பாண்டியர்கள், சோழர்களிடையே சுமூக உறவு இல்லாமலிருந்த போதும் வட ஈழத்தில் ஓர் தமிழரசு வலிமையுடனிருப்பது அவர்களுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது மன்னா''

''நாம் வலிந்து சண்டைக்குப் போகவில்லை. வரும் சண்டையையும் விட்டுவைக்கமாட்டோம் என்பதற்கு இப்போர் ஓர் உதாரணமாயிருக்கட்

டும்'' என்று கூறிவிட்டு எழுந்த மன்னரைத் தொடர்ந்து அமைச்சரும் எழுந்துகொண்டார்.

வீரகேசரி தலைமையில் கரையோரமாகச் சென்ற படை பாணந்துறையில் பாடிபோட்டுக் கொண்டது. அழகக்கோனாரின் விபரீத விளையாட்டால் ஏற்பட்டுவிட்ட நிலைமையை எண்ணிச் சிங்கள மன்னர்கள் திகிலடைந்தனர். அழகக்கோனார, அவர்களைத் தேற்றித் தான், தன் படையோடு உதவுவதாகக் கூறிப்போர் ஆயத்தங்களைச் செய்தான்.

பன்னாகம் வழியாகக் கோட்டையை நோக்கிச் சென்ற சிங்கமாப்பாணனையும், இளஞ்சூரியனையும் சில இடங்களில் சிறுசிறு குழுக்களாய் எதிர்த்த சிங்களக் கலகக்காரர்களை எல்லாம் சில விநாடிப்பொழுதிலேயே சிதறடித்து விட்டுப் படைமுன்னேறியது.

நீர்கொழும்பு, பாணந்துறை, கோட்டை ஆகிய இடங்களில் பெரும் போர் நிகழ்ந்தது. சிங்கள மன்னர்கள் யானைப்படையையே பெரிதும் நம்பியிருந்ததால் யுத்தகளத்தின் முன்னணியில் பெரும்பாலான குஞ்சரங்களைக் குவித்திருந்தனர். கரிய மலைகள் போல பிளிறிநிற்கும் அவைகளை ஊடுருவித்தாக்குவதால் தமக்கே பெரும் தேசம் ஏற்படும் என்பதை ஊகித்துக்கொண்ட தமிழ்த் தளபதிகள், தமது விவேகத்தையும் கூட்டத் தவறவில்லை.

ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்ட பெரிய தீப்பந்தங்களை எரி அம்புகளாக்கி குஞ்சரக் கூட்டங்களிடை விழச்செய்தனர். தீயைமிதித்ததும் குஞ்சரங்கள் படை வியூகத்தையே நிலைகுலையச் செய்து பிளிறிக் கொண்டு ஓட ஆரம்பிக்க, வளியெனப் புகுந்த புரவிகள் சிங்களப் படையை சிதறடித்தன.

முன்னேறி வந்த வீரகேசரியின் படையுடன் பின்புறமிருந்து வந்த சிங்கமாப்பாணனும், இளஞ்சூரியனும் தமது படையை பிறைச்சந்திர வியூகத்தில் அமைத்து முன்னேறியதால் சிங்களப் படையினர் நிலை குலைந்தனர்.

யானைகளின் பிளிறல்கள், குதிரைகளின் கனைப்புகள், வாளோடு வாள் மோதும் ஒலிகள், அதனால்கையிழந்து, காலிழந்து, மெய்யெல்லாம் புண்பட்டு துடித்துவிழும் போர்வீரர்களின் மரணஓலங்கள். ரத்தத் தடாகமாய் விளங்கிய யுத்தகளத்தின் பிரதிபலிப்பாய் மேல் வானம் சிவந்து சிரிக்க, யுத்தத்தின் பயங்கரத்தை பார்க்கச் சகிக்காதவனாய் பகலவன் மேகமலைகளில் பதுங்கிக் கொண்டிருந்தான்.

அழகக்கோனாரா பாணந்துறைக் கப்பால் தெற்கே ஓடிஒழிந்து கொண்டான். சிங்கைப் படையின் வெற்றி முழக்கம் நாலா திசைகளிலும் ஒலிக்க ஆரம்பித்தது.

காயம்பட்ட வீரர்களை வெற்றிக் களிப்புடன் தமது பாசறைகளுக்குத் தூக்கிச் சென்றனர் படைவீரர்கள்.

''இளவரசே'' என்றான் தளபதி சிங்கமாப்பாணன். அவனருகே புரவியைக் கொண்டு வந்த இளஞ்சூரியன் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

''முகத்தில் என்ன இரத்தக்காயம்?''

''வெற்றித் தழும்பு'' என்று கூறிச்சிரித்தான் இளஞ்சூரியன்.

''உண்மை தான். இவ்வெற்றித் தழும்புடன் நாம் சிங்கைக்குத் திரும்பி விடுவோம். ஆனால் இந்த வெற்றியை நாம் ஓர் மெய்க்கீர்த்தியாக இங்கே நாட்டவேண்டும்'' என்றான்.

''தளபதி! நாம் பெற்ற வெற்றிக்கு எதிர்காலத்தில் ஓர் சான்று காட்ட வேண்டும் இல்லையா?''

''ஆமாம்''

''புறப்படுவதற்கு முன்பு அதனைச் செய்துவிட்டுத் திரும்புவோம். அதற்கு முன்பாக எமது வெற்றிச் செய்தியை சிங்கைக்கு அனுப்புவோம்.''

இரவோடு இரவாக வெற்றிச் செய்தியை தாங்கிய இரு வீரர்கள் சிங்கை நோக்கிப் புரவிகளில் விரைந்து கொண்டிருந்தனர். □□

● ● ●

''மட்டக்களப்பில் நடவடிக்கையை முடித்துக் கொண்டு இந்திய அமைதிப்படை வவுனியா வந்து சேர்ந்தது. வவுனியாவில் இந்தியப் படை நடவடிக்கையைத் தொடங்கியது'' என்ற செய்தியில் என்னென்ன உண்மைகள் மறைக்கப்படுகின்றன! மழுப்பப்படுகின்றன!! மட்டக்களப்பு என்னவோ இவர்கள் நாடு மாதிரி அவ்வளவு சாவதானமாகக் குறிப்பிடப்படுகிறது. அது அந்நியநாடு என்ற உணர்வே எழாமல் பார்த்துக் கொள்கிறார்கள் ''வேலையை முடித்துக் கொண்டு'' என்பதில் அடங்க வேண்டிய செய்திகள் என்ன?

அங்குள்ள போராளிகளை சுட்டுக் கொன்றது, கைது பண்ணியது, அழித்தது, பெண்களைக் களவாடியது! இலங்கையை ஆக்கிரமித்ததுடன் அங்குள்ள ஆளும் வர்க்கத்தின் போலீஸாகவும் இந்திய இராணுவம் செயற்பட்டது. இதுபோன்ற அவமானத்தை, ஆக்கிரமிப்பை நம் நாட்டுப் படைகள் செய்வதை 'சமாதானம்', 'அமைதி' 'உதவி' எனும் பெயரிட்டு புகழ்வது அங்கு நடந்த உண்மையை மட்டும் மறைப்பதல்ல. இந்நாட்டு இராணுவச் செயலை ''நம் நாட்டின் வெற்றி'' என்னும் வெறியூட்டி அதன் மூலம், இந்நாட்டின் ஆளும் வர்க்க ஆதிக்க வெறியைப் பற்றிய சதியை மக்கள் சிந்தித்து விடாதவாறு செய்து விடவும் தான்.........''

[இந்திய இராணுவம் இங்கிருந்த போது தமிழகத்திலிருந்து வெளிவரும் 'புறப்பாடு' (மே, ஜூன் 1988) சஞ்சிகையில் எஸ். வி. ராஜதுரை எழுதிய கட்டுரையிலிருந்து]

க
வி
தை

யோகரத்தினம் யோகி

# தாயை நிகர் எங்கள் தாயகத்தைக் காதல் செய்

எந்தையும் தாயும் பிறந்து வளர்ந்ததும்
அவர்தந்தையும் தாயும் வாழ்ந்து மகிழ்ந்ததும்
என்தாயக பூமியின் மடியினில் தானே
எனதாயினும் மூத்தவள் தாயகம் தானே
தாயின் வயிற்றில் கருவாய் இருந்தேன்
தாயவள் தந்திடும் உணவினில் வளர்ந்தேன்.
தாயின் வயிற்றில் கருவாய் மலர
தொட்டிலாய் இருந்தவள் தாயகம் தானே
தாயவள் தந்திடும் உணவினில் வளர்ந்திட
கஞ்சியை தந்தவள் என்தாயகம் தானே
தவழ்ந்திட இங்கே தாயகம் இருந்ததால்
தாயவள் மடியில் வாழ்வது மலர்ந்தது
தாயகம் இருந்ததால் தாய்மொழி வாழ்ந்தது
தாய்மொழி தமிழ் மொழி கருவினில் கேட்டது
தாய்ப் பாலை குடித்து அம்மா என்றதும்

யாழ் பாலையில் தவண்டு தத்தி நடந்ததும்
அம்மா, அப்பா, ஆடு என்றதும்
ஆடு, மாடு, நாடதைப் பார்த்ததும்
நேற்றும் நடந்தது;
தாயக பூமியில் இன்றும் நடக்குது.
தாயவள் அன்பது அள்ளிடக் குறையுமா?
தாயவள் அன்பதை அளவிட முடியுமா?
தாயக செல்வம் அள்ளித் தான் குறையுமா?
தாயக வளம் தனைச் சொல்லிட முடியுமா?
நாங்கள் வாழத் தாயவள் உழைப்பாள்
நாங்கள் உழைத்தால் தாயவள் சிரிப்பாள்
நாங்கள் வாழத் தாயகம் வளம் தரும்
எங்கள் உழைப்பால் தாயகம் வளம் பெறும்.
தாயினைப் பிள்ளைகள் பிரிவது உண்டு
தாயவள் பிள்ளையை மறப்பதும் உண்டோ?
தாயைப் பிரிந்து சென்றிடும் பிள்ளைகள்
அன்பைத் தேடி தாயிடம் வருவர்
தாயவள் பிள்ளையை வெறுப்பதும் இல்லை
அன்பினால் அணைத்திட மறுப்பதும் இல்லை
தாயகம் தன்னை பிரிந்தவர் எத்தனை
தாயகம் அவர்தமை மறப்பதும் இல்லை
தாயகம் பிரிந்து சென்றிடும் தமிழர்கள்
எல்லாம் இழந்தபின் தாயகம் வருவர்
தாயகம் அவர்தமை வெறுப்பதும் இல்லை
தாயகம் அவர்தமை மறுப்பதும் இல்லை
குளிரினில் நடுங்கும் பனிமலை இல்லை
தீயினில் கருக்கும் எரிமலை இல்லை
ஊரெங்கும் பழமரச் சோலைகள் உண்டு
உலகினில் இதுபோல் பழச்சுவை இல்லை

கரையெலாம் மீன் இனம் வந்தெம்மைத் தேடும்
வயலெல்லாம் நெல்லினை அள்ளிக் கை நோகும்
அளவிலா செல்வத்தில் திளைத்திடும் தாயகம்
தாயைப் போல என்றுமே அணைத்திடும் தாயகம்
இத்தாயக பூமியில் குண்டுகள் வெடித்தன
தாயக மேனியைக் கீறிக் கிழித்தன
தாயகம் என்றுமே தளர்ந்ததா! இல்லையே?
தாயகம் துளிர்விட மறந்ததா இல்லையே!
ஆயிரம் குண்டுகள் விழுந்து வெடித்தன
தாயவர் உடல்கள் சிதறித் துடித்தன
குழந்தைகள் குருதியில் மூழ்கினர், செத்தனர்
ஆயினும் தாயவள் கருவினைச் சுமந்தாள்
தமிழீழ விடுதலைப் பயிர்தனை வளர்த்தாள்
தாயகம் வாழ்ந்தால் தமிழினம் வாழும்
தமிழினம் வாழ்ந்தால் தமிழது வாழும்
தாயகம் விடுதலை பெற்றிட வேண்டும்
தாயவள் துயரம் மறைந்திடல் வேண்டும்
விடுதலைப் பாதை இருளிலா கிடக்குது
தற்கொடைத் தீபங்கள் எங்குமே எரியுது
தீபத்தை ஏந்துங்கள் வழிதனைக் காணுங்கள்
தாயகம் விடுதலை பெற்றிட வாருங்கள்
நாளையே விடுதலை கிடைத்திடும் பாருங்கள்.

● ● ●

*இறந்தவர்களின் சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஓர் எல்லையுண்டு. தாய் நாட்டின் மீதும் அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துவதுதான் அந்த எல்லை. இந்த அன்பு என்றும் தோல்வியடைவதில்லை; நம்பிக்கை இழப்பதில்லை; சுருங்கி விடுவதில்லை; தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்.*

*'தாய் நாட்டின் மடியில் ஒருவன் உயிர் விடும்போது துன்பம் முடிகிறது; சிறைச் சங்கிலிகள் தெறிக்கின்றன. இறுதியில், அந்த மரணத்தில் வாழ்வு துவங்குகிறது'*

**வரலாறு என்னை விடுதலை செய்யும் — பிடல் காஸ்ட்ரோ**

சிறுகதை

கருணாகரன்

# ஒரு நாள்

காலையில் இவன் வெளிக்கிட்ட போது மகன் கேட்டான்; ''அப்பா! நாளைக்கு நீங்கள் போகலாம் தானே''.

'' இல்லையப்பன், இண்டைக்குப் போக வேணும். நான் சனிக்கிழமை வருவன் தானே!'' - இவன் இப்படிச் சமாளித்தும் மகன் திருப்திப் படவில்லை. (சம்மதம் கொள்ளவில்லை)

''தம்பிக்கு என்ன வேணும்? வரேக்க நான் வாங்கிக் கொண்டு வாறன்''

வேறு எதைச் சொல்ல முடியும். விடைபெறலை நினைக்க உத்தியோகம் வெறுத்தது.

''......''

மகன் பதில் சொல்லவில்லை; இவன் மனைவியிடமும், மகனிடமும் பயணம் சொல்லி, விடைபெற்று வந்தான்.

ஏனோ தெரியவில்லை இப்போது இந்த எண்ணங்கள் நினைவுக்கு வந்தன. யாரோ இவனைத் துரத்துவது போலவும், முன்னால் யாரோ வழிமறிப்பது போலவும், கீழே குழிகளை யாரோ வெட்டி வைத்து வீழ்த்தக் காத்திருப்பது போலவும் இவனுக்குப்படுகிறது. - பாடுகள் நிறைந்தது

தான் வாழ்வா? அவ்வாறாயின் துயரக் கூட்டினுள் மனிதனா?

அன்று திங்கட் கிழமை. காலையில் வீட்டிலிருந்து வெளிக்கிட்டுமுப்பத்தைந்து மைல் எதிர்காற்றில் சைக்கிள் மிதித்து, அலுவலகத்துக்கு வந்தான். வரும் வழியில் யோசித்தான் —

'பிந்திச் செல்வதற்கு 'சீவ்கிளாக்' ஏதாவது சொல்லலாம். 'அல்லது வரவுப் பதிவேட்டில் ஏதாவது குறிப்பு எழுதியிருக்கலாம்' என.

'என்ன 'பஸ்' அனுப்பியிருக்கிறாரா கிளாக்' — நேரத்துக்குச் செல்வதற்கு.

இப்ப எத்தனை மாதம் பஸ் ஓடி; பஸ்ஸில் ஏறி?

தானும் 'சைக்கிள் மிதிக்கிறேன்' என்பார். அவர் ஐந்து மைல் தூரத்திலிருக்கின்றார். — அலுவலகத்திலிருந்து.

இவன் முப்பத்தைஞ்சு மைல் தொலைவில்.

எதிர்காற்று - வெளிகள் - ஏற்றங்கள், இறக்கங்கள், நாரி உழைய மிதிப்பு.

'தன்னால் சனங்கள் காத்திருக்கக் கூடாது' என வந்துவிட்டான். அலுவலகத்திற்கு வரும்பொழுது நேரம் 9-15 ஆகியிருந்தது. ஆனால், அலுவலகத்தில் எதிர்பார்த்தவை நடக்கவில்லை. எப்ப நாலுமணியிருக்கும் என்றிருந்தது.

பஸ் ஓடும் போதும் இதே கதிரைகள். சைக்கிள் உழக்கும் போதும் இவைதானா?

நாற்காலிகளுக்குப் பதில் உழைவகற்றும் கருவிகள் பொருத்திய இருக்கைகள் இருந்தால்......?

நிலைமையும் உடம்பும் நல்லபடியிருந்தால் தான் ஒழுங்காக எதுவும் செய்ய முடிகிறது. ஆனாலும் செய்ய வேண்டியவற்றைச் செய்தான். 'எல்லாம் சரிவந்த பிறகு என்றால், இந்த நெருக்கடிகளுக்குள்ள வாழ முடியாமல் போய்விடும். எல்லாவற்றையும் வென்று வாழ்கின்றோமே! இது விடை சொல்ல முடியாத, உழைப்பின் பெறுமானம் தான்' என்று நினைத்துக் கொண்டான்.

இப்போது வேலைவிட்டு, தேனீர்க் கடைக்குள் நுழைந்து......... வெளிக்கிட்டு, மறுபடியும் சைக்கிளை மிதிக்கையில், வழியில் ஜெயம் கண்டான். ஜெயத்தைக் கண்டதும் 'இன்றைக்கு மாட்டியாச்சு' என நினைத்தான்.

ஜெயம், ஹற்றன் பக்கத்து அட்டை மாதிரி. பிடித்தால் பிடிதான்; உறிஞ்சி எடுத்துவிடும். ஜெயமும் அப்படித்தான்.

தேனீர்க்கடைக்கு அழைத்துப் போவான். சிகரட் வாங்கிக் கொண்டு, தேனீரைக் குடிக்க ஆரம்பித்தால்; கதைத்துக் கொண்டேயிருப்பான். கடைக்காரனுக்கும் அலுக்கும். கடைக்காரனுக்கு ஆட்கள் வருகையில் இடம் வேணுமே!

ஜெயம் தேனீரை ஆறவைத்து, வைத்து இவன் காசு குடுக்க வெளிக்

கிடும் வரை குடித்துச் சாட்டுக் கழிப் பான். காசு கொடுக்க இவன் எழும் பும்போது, தான் குடுக்க முந்துவதாக அவதிப்படுவான். அவனிடம் மாட்டி னால் அவ்வளவு தான்.

இப்ப ஜெயம் வாய் திறக்க முதலே;

''ஜெயம் ஒரு அவசர அலுவல். ஐந்தரைக்கு ஒரு ஆளிட்டை வாற தெண்டு சொன்னனான் காத்துக் கொண்டிருப்பார். குறை நினைக் காதை பிறகு சந்திக்கிறன்'' எனக் கூறித் தப்பிக்கொண்டான்.

ஜெயம் எதிர்பார்க்காத அடி. ''சரி வசந்தன், என்னை உனக்கு முக்கியமாகப் படேல்லை'' என்று புறங்கூறிவிட்டுப் போனான்.

'ஓசியில் 'பிளேன்ரி' யும் 'சிகறற்' றும் கிடைக்காமல் போனதே' என்ற ஏக்கம் அவனுக்கிருக்கும்.

இராணுவ முற்றுகையில் இருந்து தப்பியது போலிருந்தது; ஜெயத்திட மிருந்து தப்பியது இவனுக்கு.

தேவையில்லாமல் இப்பிடியான துக்கெல்லாம் பொய் சொல்ல வேண் டியிருக்கிறதே என நினைத்தான். ஆனால் வேறு வழி? நேராகச் சொன் னால் முகம் முறியும். அல்லது அவ னாக உணர வேண்டும். திட்டமிட்டுச் செய்பவர்கள் எப்படி உணருவார்கள்? இப்பிடி நினைக்கும் போது இவனுக்கு இனப்பிரச்சினை பற்றி எண்ணம் வந்தது.

'அரசாங்கமும் இப்படித்தானே நடக்குது. திட்டமிட்டு எங்களை அழித் துக் கொண்டு வேஷம் போடுது — 'பேச்சு வார்த்தை, சமாதானம்' என் றெல்லாம்.

எதைப் பேசுவது? திட்டமிட்டு அடாத்துப் பண்ணிக்கொண்டு 'பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை' யென் றால் எப்பிடிப் பேசமுடியும்?

நாற்பத்தைஞ்சு வருஷமாக திருப் பித் திருப்பி ஒரே சரக்கைப் பற்றிப் பேசுவதா?

'இரண்டாம் வாய்ப்பாட்டை இன்னும் தான் திருப்பித் திருப்பி ஒருதன் பாடமாக்கிக் கொண்டிருப்ப தென்றால்......?'

இவைகளை விட கடந்த வாரம் சிறி மாஸ்டர் சொன்னது —

''பிரேமதாசா, தமிழற்றை பிரச் சினை வெளிப்படையாக பேசப்படத் தொடங்கின காலத்தில இருந்து அரசி யல்லயும், ஆட்சியிலையும் இருந்த ஆள். அப்பிடி இருந்துகொண்டு இன் னும் பிரச்சினை விளங்கேல்ல என் றால், அதைவிடப் பம்மாத்து வேற என்ன? இனியும் பேச்சு வார்த்தை எண்டதை விட அடிபட்டு ஒரு முடி வுக்கு வாறதுதான் வழி'' என்று.

இவனுக்கும் இது சரியென்று தான் பட்டது. இதைப்பற்றி முன்ன ரும் தீவிரமாகச் சிந்தித்திருக்கிறான். இவன் ஞாபகம் கொண்ட சம்பவங் களையும், சிறி மாஸ்டர் சொன்ன வைகளையும் ஒப்பிட்டால் மாஸ்டரின் வார்த்தைகள் சரியானவை என்று தெரிந்தது.

முடக்கால் திரும்பி, ஒழுங்கைக் குள் இறங்கிய போது நன்றாக இருட்டி

விட்டது. இன்னும் இரண்டு வளைவுகள் திரும்பவேணும். திரும்பினால் இவனிருக்கும் வீடு— அறை வந்துவிடும்.

இரண்டாவது வளைவில் புளிய மரமும், மதவும். எப்பவும் கவிந்திருக்கும் இருள். அடிக்கடி அவ்விடத்தில் யாரும் அடிபட்டு (சிலவேளைகளில் மதகுக்குள்ளும்) விழுவது நடக்கும். அவதானமாகப் பார்த்துக் கடந்துவிட்டான்.

கண்டம் தப்பியாயிற்று.

வீதி விளக்கில்லர்மல் போனதன் அர்த்தங்கள் புரிந்தன. சைக்கிளை நிறுத்திவிட்டு, கேற்றில் பூட்டைத் தடவினான். இரும்புக் 'கேற்' கையில் ஏதோ கீறிவிட்டது. எரிந்தது. ஆத்திரமாக வந்தது.

'இந்த உலகத்தில பூட்டாமல் எல்லாத்தையும் விடுகிற காலம் எப்ப வருமோ?'

பூட்டைத் திறந்து, உள்ளுக்குச் சைக்கிளை எடுத்துவிட்டுக் 'கேற்றை மறுபடியும் பூட்டிவிட்டு, சைக்கிளை விறாந்தையில் ஏற்றிவிட்டான்.

இனி வீட்டைத் திறக்கவேணும். கதவைத் தடவினான். 'ஒரு தேவாரம் பாடியதும் கதவு திறபடுவதாக இருந்தால்......?'

இந்த வீட்டில் குடியிருந்தவர்களும் இப்போது வேறு இடத்திற்குப் போய் விட்டனர் தனிமையும் ஒரு வகையில் சுகம் தான். ஆனால் இந்த நிலைகளிலல்ல.

'லைற்' இல்லை. எல்லா இடமும் துயரம் கவிந்தது, போல இருட்டு. அமாவாசை இன்னும் இரண்டொரு நாளில் வரும் என்று நினைவு வந்தது. முந்தியென்றால் 'ரவுண்' பக்கத்தில் யாருக்கு ஞாபகமிருக்கும் — அமாவாசையையும், பௌர்ணமியையும். (சிலவேளை பாரதிராஜாவின் புதியவார்ப்புகள் படத்தில் வந்த அமாவாசையை ஞாபகமிருக்கலாம்) பௌர்ணமியில் பள்ளிக்கூடம், அலுவலகங்கள் இயங்காது. அதனால் தெரியும். மற்றப்படி எங்கும் ஒரே வெண்ணிரவாக மின்னொளி நிலவும்.

இப்ப இருள். 'பற்றி' யைக் காண முடியாது. கண்டாலும் விலை. நினைக்காமலிருப்பது உபயோகம். மின்சாரமில்லை. 'பற்றி' யில்லை. மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு. ஆனால். அரசாங்கம் மட்டும் அடிக்கடி 'றேடியோ' வில சொல்லும்; ஊரடங்கு உத்தரவுகளையும் இராணுவ நடவடிக்கைளின் ஆரம்பத்தையும்; எச்சரிக்கையையும்.

இவற்றை எங்காவது கேட்க நேரிடுகையில் இவனுக்குச் சிரிப்பு வரும். சிலவேளைகளில் கோபமும் வரும்.

'கரண்ட்' டுக்குத் தடை 'பற்றி'க்குத்தடை அப்படியிருக்க எப்படித்தன்ர 'றேடியோ' உத்தரவுகளை நாங்கள் கேட்பது? அதன் வழி ஒழுகுவது? என அரசாங்கம் நினைக்கிறது என்று.

இதைவிடச் சுவாரசியமான சம்பவங்களும் நடக்கிறதுண்டு ஒரு முறை 'ஹமில்டன் வனசிங்க' சொல்லியிருந்தார். அப்போது ஊரடங்குச் சட்ட நேரம். 'பரீட்சை நடைபெறும்' என்று.

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் நேரம், எப்படிப் பரீட்சையை நடத்துவது? பரீட்சைக்கெனச் செல்லும் போது அது அவர்கள் விதித்த கட்டளையை மீறியதாகுமே! சட்டக்குற்றமல்லவா?

இவர்களின் கூத்துக்களை நினைத்து, நினைத்து நினைத்துச் சிரித்தான்.

அலுவலகத்திலும், கடைகளிலும் இப்படியான சம்பவங்களைப் பற்றிச் சுவாரசியமாக விமர்சிப்பார்கள்.

போனமாதம் கூட ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தது. ஒருவருக்கும் தெரியாது. (போட்டவர்களுக்கே எப்போது போடப்பட்டது என்பது ஞாபகமற்றுப் போய்விட்டது போலிருந்தது) திடீரெனக் கேள்விப்—பட்டான். ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக, பாதுகாப்புப் படை அலுவலகம் தெரிவித்துள்ளது என்று.

எவ்வளவு மகத்தான சம்பவங்கள் எல்லாம் இந்த நாட்டில் நடக்கின்றன.

இனியாவது ஒரு தமிழன் நான் இலங்கையன் என்று சொன்னால், அவனைத் திருகிக் கொல்வதைத் தவிர வெறு என்ன செய்ய முடியும்?

இவை எல்லாவற்றையும் மீறி எங்களுடைய இனம் வாழுகின்றதே. ஒவ்வொரு நாளும் சவால்களைவெற்றி கொள்ளுகின்றதே. 'தமிழனாகப் பிறந்ததற்காக நான் பெருமைப்பட வேண்டும்' என நினைத்தான்.

கதவைத் திறந்து உள்ளே போய், மேசையில் வலப்பக்கமாகத் தடவி (ஒரு குறிப்பில்) தீப்பெட்டியை எடுத்தான். பற்றவைத்து விளக்கை ஏற்றினான்,

மூன்று நாட்களாக தான் இல்லாத சுவடு துல்லியமாகத் தெரிந்தது. தூசி. சோளகம் தன் வேலையைச் செய்திருந்தது.

இவனது நேசிப்பிற்குரிய காற்று இன்று வேடிக்கை காட்டியிருந்தது.— காற்று இவனைப் பழி வாங்கியிருந்தது;

தூசியைத் தூசி என்று சொல்வதா? தூசுகள் என்று சொல்வதா? நிறைய என்றால் பன்மையாகுமே. ஐந்தாம் வகுப்பில் தமிழில் படித்தது நினைவு வந்தது.

மேசையைத் தட்டி, புத்தகங்களை அடுக்கி, கதிரைகளைத் துடைத்து.... வீட்டைக் கூட்டும் போது, பார்த்தான். கடிதம். மாமா எழுதியிருந்தார். இவன் இல்லாததால் கதவு இடுக்கினால் உள்ளே போட்டிருக்கின்றார்.

கடிதத்தை எடுத்து வைத்து விட்டு, நிலைக் கண்ணாடியைத் தடவித் துடைத்து......

எல்வாம் முடிய இரவு எட்டுமணி.

நல்ல வேளை உடுப்புக்களை மடித்து பையினுள் வைத்தது. அல்லது அவற்றை இப்போது கிணற்றடியில்

கொண்டுபோய்ப் போட்டிருக்க வேணும்.

குளித்துவிட்டு வந்தான். சாப்பிடப் போவதற்கு அலுப்பாக இருந்தது. தேனீர் போடுவதற்கு இனி அடுப்பைப் பற்ற வைக்க வேணும். காலையில் சைக்கிள் உழக்கிய களை இப்போது நர்த்தனமாடியது.

ஏதாவது படித்துக் கொண்டிருந்தால், இன்றைக்கு நேரத்துக்கு நித்திரை வரும்போலிருந்தது. படிப்பதற்கென புத்தகத்தை மேசையில் இருந்தவற்றுள் தேடினான். மாமாவின் கடித நினைவு வரவே எடுத்தான்.

பிரித்துப் படித்தான்.

அருண். மாமாவின் கடைசி மகன் இயக்கத்துக்குப் போயிருந்ததாக கடிதம் சொல்லியது. இவனுக்கு இயக்கத்தில் சிலரைத் தெரியும் என்பதால், அருணை எப்பிடியும் இயக்கத்திலிருந்து எடுத்துத் தரும்படி மாமா கேட்டிருந்தார். (கெஞ்சியிருந்தார்) அவ்வாறென்றால், தான் என்றைக்கும் இவனுக்கு 'நன்றியுடையவனாக இருப்பேன்' எனவும் தெரிவித்து எழுதப்பட்டிருந்தது.

இவனுக்கு முதலில் சிரிப்பு வந்தது. அதை மேவி மாமாவின் மீது அளவற்ற கருணையற்ற கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

மாமாவுக்கு ஆற்றையும் கையைக் காலைப் பிடிச்சு அலுவல் பார்க்கிற புத்தி இன்னும் மாறவில்லை. இயக்கத்தில் ஆரையும் பிடிச்சு அருணை எடுக்க வேணும் என்ற சின்னத்தனமான சிந்தனை...... என்ர தம்பியும் இயக்கத்தில தானே! அவன் போராட வேண்டுமெனப் போனான் — தேவையிருக்கிறது. அருணும் போகட்டுமன், இருபத்தியொரு வயசில அருணுக்குச் சுயமா முடிவெடுக்கத் தெரியும். அவன் தனக்குத் தெரிந்தவரையில சரியாகத்தான் முடிவு செய்திருக்கிறான். என இவன் தீர்மானித்தான்.

இவன் முடிவு செய்தான்.

நாளைக்கு மாமாவைச் சந்திக்கிறதில்லை. தன்னால முடியாதென காரசாரமாகக் கடிதம் எழுதிவைப்போமென்று நினைத்தான்.

'வேண்டாம். இப்படியான மனிசருக்கு மினக்கெட்டு எழுதிக்கழிப்பதை விட, வேறு வேலை பார்க்கலாம்.'

மாமாவின் கடிதத்தைக் கிழிக்காமல் பத்திரமாக மடித்து வைத்தான். தான் அதை ஏற்கவில்லை என எப்போதாவது மாமாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக.

பசித்தது. வெளிக்கிட்டு நடந்தான். □□

●                    ●

உண்மை ஒரு நாள் வெளியாகும் — அதில்
உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்
பொறுமை ஒருநாள் புலியாகும்
அதற்குப் பொய்யும், புரட்டும் பலியாகும்.

— பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

விமர்சனம்

சொக்கன்

# 'முத்தமிழ்விழா மலர்' (1992)

## நிகழ்காலத்துக்குரியனவும்; வேண்டுவனவுமாகிய பலவற்றை குவிவாகக் காட்டும் ஒளிவிளக்கு

சென்ற ஆண்டு வெளியான முத்தமிழ்விழா மலர், செந்தமிழ் ஈழமக்களின் வரலாற்றினை தொன்மையில் தொடங்கி நிகழ்காலம் வரை எடுத்துக் காட்டிய ஆவணம். இந்த மலர், நிகழ்ந்து கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தின் பிறப்பிலிருந்து இன்றுவரை இடம் பெற்ற, பெற்று வருகின்ற அதன் வளர்ச்சிக் கட்டத்தின் பலமுகங்களையும் மிகத்தெளிவாகப் புலப்படுத்துகின்றது. வேறுவகையில் சொல்வதானால் நிகழ்காலத்துக்குரியனவும், வேண்டுவனவுமாகிய பலவற்றையும் குவிவாக்கிக் காட்டும் ஒளிவிளக்கு (Forcus Light) ஆக இதுவிளங்குகின்றது.

அட்டைப்படத்தில் வெளிப்படும், அழிவுகள், துன்பங்கள், என்ற பெரு நெருப்பினூடாக எமது கலை, பண்பாடுகள் அனைத்தும் கொடியாக அல்ல, பெருமரமாகக் கிளைவிட்டுப் பரந்து, நிமிர்ந்து நிற்பதை மிகத்திறனாக ஓவியர் ரமணி கையாண்டுள்ளார்.

மாவீரர்களின் தாளடிகளுக்குப் படையலாக வைத்துள்ள இம்மலரிலே, தமிழீழத் தேசித் தலைவரும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவருமான திரு. வே பிரபாகரன் அவர்களின் பெருமைகளை எடுத்தியம்பும் புதுவை இரத்தினதுரையின் எழுச்சிமிக்க கவிதையும், அதனைத் தொடர்ந்து, தலைவரினதும், புலிகள் இயக்கப் பேராளர்களதும் ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள் என்பனவும் கணிசமான இடத்தைப் பிடித்துள்ளன. வெறும் வாழ்த்துரைகளாய் அமையாதனவும், ஈழத் தமிழினத்தின் முனைப்பான செயற்பாடுகளுக்குத் தூண்டுகோலானவையுமான உணர்வுரைகளும், அறிவுரைகளுமே இவை என்பதில் ஐயமில்லை.

'உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும், தமிழீழத்தில் தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கின்றது. தமிழீழத்தில் தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது. தமிழீழத்தில் தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கிறது' என்ற கூற்று தலைவரின் உறுதியான கருத்து என்பதால் மட்டுமன்றி, உண்மையான கருத்துமாகும் என்பதால் அதனை இவ்விடத்தில் எடுத்துக் காட்டுவது பொருத்தமேயாகும்.

இம்மலரிலே கட்டுரைகளே முதன்மையான இடத்தை வகிக்கின்றன. எல்லாமாகப் பத்துக் கட்டுரைகள் இவற்றை நான்கு வகைக்குள் ஆராய முற்படுகின்றேன்.

1. 'ஆழவேரோடிய ஆலமரமும், அசைக்க நினைத்த புயல்களும்' — யோகரத்தினம் யோகி

2. 'கண்ணீர் விட்டே வளர்த்தோம்' — மு மனோகர் (கரும்பறவை — பசீர் காக்கா)

3. 'யுத்தகால வாழ்க்கை முறை — பொருளாதாரத் தடையும் போர்க்காலக் கண்டுபிடிப்புகளும், அவற்றின் பயன்பாடுகளும்' — பொன் பூலோகசிங்கம்.

இம்மூன்று கட்டுரைகளிலும் முதலில் நோக்க வேண்டியது 'கண்ணீர் விட்டே வளர்த்தோம்' என்பது.

''எப்படியோ மட்டக்களப்புக்குக் கொண்டு செல்வதற்கு ஆயுதம் கிடைத்து விட்டது. இரண்டு. 45 ரக துப்பாக்கிகள் மட்டக்களப்புக்கென ஒதுக்கப்பட்டுவிட்டன. எங்கள் முகத்தில் பூரிப்பு. இதைக்கொண்டு செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து பிரான்சிஸ் யாழ்ப்பாணம் வந்திருந்தான்'' என்று சிறுகதை ஒன்றின் கவர்ந்திழுக்கும் முதற்பந்தியாகத் தொடங்கும் இக்கட்டுரை படிப்போரைப் புல்லரிக்க வைப்பதும், இரத்தோட்டத்தை முறுக்கேற்றுவதுமான உண்மைச் சம்பவங்களாய் வளர்ந்து செல்கிறது. புலிகள் கண்ணீரை விட்டல்ல, தமது செந்நீரைவிட்டே இயக்கத்தை மண்ணாங்கட்டியிலிருந்து மாளிகையாகக் கட்டி எழுப்பினார்கள் என்ற உண்மை வரிக்கு வரி நிறுவப்படுகின்றது. ஒவ்வொரு சம்பவமும் கதையாக, காவியமாக வளர்த்தெடுத்து எதிர்கால பரம்பரையினருக்கு இயம்பவேண்டியது என்ற உண்மையை இந்தக்கட்டுரை, படிப்பவர் மனத்திலே எழுவிக்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கை 'போராளி ஒருவனிடம் எழுத்தாளனுக்குரிய எழுத்தாற்றலும் எவ்வளவு அழகாக இணைந்து விடுகின்றது' என்பதற்கு கரும்பறவையின் இக்கட்டுரையைச் சான்றாக எடுத்துக் காட்டலாம்.

'ஆழவேரோடிய ஆலமரமும் அசைக்க நினைத்த புயல்களும்' என்ற கட்டுரை புலிகள் நடத்திய, நடத்த நிர்ப்பந்திக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் மூலங்களையும் முடிவுகளையும் தெளிவாக, கட்டம் கட்டமாக விளக்குகின்றது. கட்டுரை ஆசிரியர் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை மூன்று வகையுள்ளே அடக்கிக் காட்டுவது பின்வருமாறு;

அ) பலமுள்ளவனுக்குப் பயந்து அவன் சொல்வதற்கு இணங்கி, அதன்பின் அந்த இணக்கத்திற்குக் காரணத்தைத் தேடி மக்களை ஏமாற்றியது.

ஆ) நம்பி ஏமாந்து கூட நின்றவர்களை (மக்களை) யும் ஏமாற வைத்து அழிவின்பின் விழித்துக் கொள்வது.

இ) தனிப்பட்ட நலன், பதவிகளுக்காக எல்லோரையும் ஏமாற்றித் தம் நலன்களை மட்டும் பார்ப்பது.

புலிகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் இம்மூன்றையும் கடந்து நின்றவை என்பதும், பேச்சுவார்த்தைக்கு அழைத்தோரின் நோக்கங்களை வெளிப்படுத்தித் தங்கள் இயக்கத்தை உலகம் அறியச் செய்தவகையில் தமக்கு வெற்றியைத் தேடிக்கொண்டவை என்பதும், ஆசிரியரால் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன. இவ்வகையில் காரணகாரியத் தொடர்புடன் கூடிய வரலாற்றுக் கட்டுரை இது என்றும் கொள்ளத்தக்கது.

'பொருளாதாரத் தடையும், போர்க்காலக் கண்டுபிடிப்புகளும் அவற்றின் பயன்பாடுகளும்' என்ற கட்டுரையிலே கடந்த சில ஆண்டுகளாக அரசு கடைப்பிடித்து வரும் வல்லாண்மைக் கோட்பாட்டினால் தமிழீழத்தில் ஏற்பட்ட பொருளாதாரத் தடையின் பல்வேறு இன்னல்களும் விரிவாக ஆராயப் படுகின்றது. நிகழ்காலத்துடன் இணைந்து வாழும் நாம் இவற்றோடு நேரடியாகத் தொடர்புபட்டு வருவதால் இவற்றின் உண்மைத் தன்மை, எங்கள் நெஞ்சங்களை நெருடவே செய்யும். ஆனால் பொருளாதாரத் தடைகளை ஒன்றும் விடாது நுணுக்கமாக எடுத்துரைத்த கட்டுரையாசிரியர், போர்க்காலக் கண்டுபிடிப்புகளும் அவற்றின் பயன்பாடுகளும் பற்றிப் போதிய ஆதாரங்களைத் தராது மிகவும் சுருக்கிவிட்டார்.

அடுத்து, நாட்டாரியல் தொடர்பான பண்பாட்டுக் கோலங்களை விரிவாக விவரிக்கும் கட்டுரைகள் இரண்டையும் இரண்டாவது வகையுள் அடக்கலாம்.

1. 'வன்னிவள நாட்டின் பண்பாட்டுக் கோலங்கள்' — க. பார்த்திபன்.

2. 'தென் தமிழீழத்து மக்களின் வாழ்வியல்' — எம். இ. யோகேந்திரம்.

உழவினைத் தமது வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்ட வன்னி வளநாட்டாரதும், கிழக்கு மாகாணத்தினதும்-சிறப்பாக மட்டக்களப்பாரதும் வாழ்க்கை முறைகள், மரபுகள், கரணங்கள், அவர்களிடையே வழங்கும் பாடல்கள் என்ற பலவும் இக்கட்டுரைகளில் விரிவாக இடம் பெறுகின்றன. படிப்படியாகக் கைநெகிழ்ந்து வரும் தனிப்பட்ட வாழ்வியல்களை மீளப் பார்ப்பதும், அவற்றிற்கு உயிர்கொடுப்பதும், அவற்றின் மீது பற்றுக்கொண்டு எதிர்காலப் பரம்பரைக்கு மண்ணோடும், மொழியோடும், மரபுகளையும் பாதுகாத்தளிப்பதுமாகிய கடமைகளை நினைவூட்டும் வகையில் இக்கட்டுரைகளுக்குக் குறிப்பிடத்தக்கதோர் இடம் உண்டு.

தமிழ் மொழியின் தனித்த இயல்பினைப் பேணிக்காப்பதன் இன்றியமையாமைபற்றி வரலாற்றடிப்படையிலும், நிகழ்காலப் போக்கின் அடிப்படையிலும் ஆராய்ந்து எழுதப்பெற்ற கட்டுரையொன்றும், ஈழத் தமிழரிடையே வழங்கும் பேச்சு வழக்குப் பற்றி விளக்கும் கட்டுரையொன்றும் மூன்றாவது வகையுள் அடங்குவன.

1 'தூய தமிழ் வழக்கும் இன்றைய அதன் தேவையும்'--கலாநிதி இ. பாலசுந்தரம்

2. 'தமிழீழத்துக் கிராமியப் பேச்சு வழக்கு. புதியன புகுதலும் பழையன கழிதலும்' — பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

'மக்களின் எண்ணக் கருத்துக்களை வெளியிடுவதற்கு பட்டுமன்றி எண்ணுவதற்கும் கருவியாயுள்ளது மொழி' என்று மொழியின் தேவையை வலியுறுத்தும் முதற் கட்டுரையில், தமிழ்மொழி இன்றைய நிலையிலே தன்னுடன் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களைக் களைந்து தூயதமிழ்ச் சொற்களையே கையாளல் வேண்டும் என்று வற்புறுத்துவதாயும், இத்தூய தமிழ் இயக்

கம் தனித்தமிழ் இயக்கமாக வளர்ந்து வந்துள்ள வகையை எடுத்தியம்புவதாயும் அமைந்துள்ளது.

ஆனால், தனித்தமிழ் இயக்கச் செயற்பாடுகளை ஈழத்தில் முன்னின்று நடத்தியவர்களாக தா. அழகசுந்தரதேசிகர், விபுலாநந்த அடிகள் முதலியோரைக் குறிப்பிடும் ஆசிரியர், இளமுருகேசனார், வேந்தனார் ஆகிய தனித்தமிழ்க் கோட்பாட்டாளர்களைக் குறித்திருக்கலாம். இவர்கள் இருவரும் தனித்தமிழ் இயக்க முன்னவரான மறைமலையடிகளின் ஏகலைவர்கள்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் கட்டுரை மொழியியல்சார் கருத்தடிப்படையில், பேச்சுவழக்கு இடத்துக்கிடம் மாறுபடுவதைச் சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. எனினும் இக்கட்டுரை மேலும் விரித்து எழுதியிருப்பின் கூடிய பயனுடையதாக அமைந்திருக்கும். பண்பாட்டு மாற்றத்தால் பல்வேறு சொற்றொடர்களும் வழக்கிழக்கின்றன. சில புதியனவாய் இடம்பெறுகின்றன என்ற பேராசிரியர் கூற்று ஏற்கத்தக்கதே.

நான்காவது வகையுள், கவிதை, நாடகம் படிமக்கலை, பற்றிய மூன்று கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

1. 'மரபுவழிக் கூத்துக்களும் மரபுவழி சாராதநாடகங்களும். இன்றைய பயன்பாடும், எதிர்கொள்ளும் பிரச்சனைகளும்' —குழந்தை. ம. சண்முகலிங்கம்.
2. 'ஈழத்தமிழர் எழுச்சியில் கவிதைக்கலையின் பங்களிப்பு' — இ. முருகையன்.
3 'ஈழத்தில் தமிழர் கலைப் பாரம்பரியம்- வெண்கலப் படிமங்கள் பற்றிய வரலாற்று நோக்கு' — செல்லையா கிருஷ்ணராசா.

ஈழத்து நாடகங்கள் பற்றியும், மேற்குலக நாடகங்கள் பற்றியும் முன்னையதில் பட்டறிவும், பின்னையதில் படித்தறிவும் மிகுதியும் கொண்ட குழந்தை ம. சண்முகலிங்கம், ஈழத்துத் தமிழ் நாடகங்களின் நிலைபற்றி மிகவிரிவாக ஆராய்ந்து எழுதிய கட்டுரை மிகுதியும் பயனளிப்பதே. ''இசை நாடகம், 'மேலைத் தேய மூலத்தைக் கொண்டதாகவே உள்ளது' ''மரபு சாராத நாடகங்களை நவீன நாடகங்கள் என்று கருதும் மரபொன்று அண்மைக்காலமாக எழுந்துள்ளது. யதார்த்த விரோத நாடகங்களையே பலர் நவீனநாடகங்கள் என அழைக்கின்றனர்'' என்ற கூற்றுக்கள் ஆழ்ந்து சிந்திக்கவைக்கின்றன.

இ. முருகையன் ஈழத்தமிழர் எழுச்சியில் கவிதைக் கலையின் பங்களிப்பு' என்ற தமது கட்டுரையில், இந்நூற்றாண்டின் ஐம்பதுக்கு முன்னிருந்த கவிஞர்களின் எழுச்சிப் பணியில் தொடங்கி, இன்றுள்ள போராட்ட காலத்துக் கவிஞர்களின் பணிவரையுள்ளவற்றை ஆழமாக அணுகுகின்றார். ஐம்பது அறுபது காலங்களில் போராட்டம் பற்றிய உணர்வுக் கவிதைகள் எழுந்தாலும் அவை மென்செயல் நடவடிக்கைகளையே சார்ந்து எழுந்தவை என்று முடிவு செய்கிறார். 'அறப்போர்' என்ற பெயரில் சத்தியாக்கிரகம் நடைபெற்ற காலத்தின் நிலைப்பாடு அதுவாகவே இருக்கும் என்பது அவர் முடிவு. ஆனால் மனிதனின் உள்ளத்தெழுச்சிகள் உளவியல் அடிப்படையில் எண்ணிப் பார்க்க வேண்டியன.

முருகையனின் வெளிக் கவிஞர்கள், களக்கவிஞர்கள் என்ற பகுப்பு முறையும், களக்கவிஞர்களின் சாதனைகளை அவர் மதிப்பிட்டுள்ள வகையும் பாராட்டத்தக்கன. ஆய்வு நுணுக்கமும் மதிப்பீட்டுத் திறனும் அவ்விடத்தில் முருகையனின் முத்திரைகளாய் விழுந்துள்ளன.

ஈழத்துக் கலை மரபிலே வெண்கலப் படிமங்கள் பற்றிய ஆய்வுக்கட்டுரை ஆய்வாளர்க்கேயுரிய கட்டொழுங்கோடு கூடி அமைந்திருப்பதால், ஈழத்துக் கலை மரபு ஒன்றின் தனித்தன்மையை வெளிக்கொணர்ந்ததற்காக அவரைப் பாராட்டவேண்டும்.

கவிதைகள் அனைத்திலும் இக்கால இழுப்புக்களும், பறிப்புக்களும், ஏக்கமும் எழுச்சியுமே மேலோங்கி நிற்கின்றன. எனவே கவிதைக்கரு பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவேண்டாத, பொதுமைப் பாங்கே இவற்றின் காலஉணர்வைப் பாராட்டத்தக்க வகையில் சிறப்பிக்கின்றது.

*'அன்னை நாட்டின் விலங்கை ஒடித்திட*
*ஆர்த்தெழுந்த இளைஞர் அணியில் இச்*
*சின்ன வீரன் பயிற்சி பெறுகிறான்*
*தேசம் காத்துக் கிடக்குது செங்களம்*
*நண்ணு வான்தன் நாயகன் ஆணையை*
*நாட்டு வான்இனம் மீளும்அந்நாள் அவன்*
*கண்ணுளே தெரிகின்றது - கைப்படும்*
*காலை ஒன்று கிழக்கில் விடிந்தது'*

எனச் சோ. ப வின் நெஞ்சில் எழுகின்ற நம்பிக்கையின் உறுதிப்பாடு,

*'விழிப்புடன் இருப்போம்*
*துடிப்புடன் நிமிர்வோம்*
*எம்*
*சந்ததி காக்க*
*சரித்திர மாவோம்*
*இது*
*எங்கள் தேசம்'*

என்ற 'ஜெயா' வின் கவிக்குரலிலே உளப்பாட்டுத் தன்மை, பன்மையாகத் திரட்சி பெற்றது.

*'பொங்கு தமிழ் ஈழமென்னும்*
*பூவணையில் நீயுறங்கு*
*எங்களெழில் தாயவளே*
*இடர்நீத்துக் கண்ணுறங்கு'*

என்ற பரந்தாமனின் கொஞ்சு தமிழிலே தமிழ்த்தாய் மீண்டும் பிறப்பெடுக்கும் ஏக்கமாக விரிந்து சென்று, பல அவலங்களின் மத்தியிலும் உவர்நீரைக் குடித்து, உயிர் வாழ்கின்ற ஈழத்தாயைப் பற்றிய இராமலிங்கத்தின் பாடலில்,

*'எம்தாயைப் பாருங்கள்*
*எம்தாயைப் போற்றுங்கள்*
*எம்தாயின் மகிமையைப் பாடுங்கள்'*

என்ற நம்பிக்கை,

*'கீழே நுழைய நிலத்தில் குழிதோண்டிக்*
*கீரி, மரணாய் கிழப்பூனை யாதொன்றும்*
*ஊரெல்லைக் குள்ளே வராமல்*
*உறுதியுடன் போராட*
*இங்கே புலிக்குட்டிக் கூட்டங்கள்*
*ஏராளமாக எதிர்பார்த்துக் காத்திருக்கும்*
*இந்த நினைப்பே ஏழாந்தபடி*
*ஈழத்தில்,*
*சந்தை நடக்கும்*
*சமயத்துக் கேற்றபடி*
*அந்தவிழா இந்தவிழா*
*ஆரோ எவருக்கோ பந்தம்*
*பிடிப்போர் எடுக்கும் அணிவிழா*
*சொந்தவிழா சடங்கு சோடிப்பு*
*என்றெல்லாம் கொண்டாட்டம்.'*

என்ற கல்வயல் குமாரசாமியின் ஆவேச அருவருப்பாகிய,

*'கோணமலை நகரினில்*
*ஆனை குடிவந்தால்*
*வீணே கிடந்திடலாமோ?*
*ஆணை கிடைத்தும் நீ*
*தூணாய்க் கிடக்கின்றாய்*
*காணப்புறப்பட்டு வாடா ஈழம்'*

என்ற வாஞ்நாதனின் வீர ஆவேசமாய் உருவெடுத்து,

*'நெஞ்சு திரள்கிறது*
*திரளத் திரள*
*விடியல் மலரொன்று பூக்குமெனும்*
*வீரியம் என்னுள்*
*தகதக வென்று எழுகிறது'*

என்ற கருணாகரனின் உரிமைப் பங்காளிக் குரலாய் ஓங்கிஎழுந்து,

'சென்றான்.
இனியெங்கள் தேசம் பணியாது
தாய்மண்ணைக் காதலிக்கும் தளிர்கள் -
இருக்குமட்டும்
பாய்விரித் தெம்தேசம் படுக்காது
போர்செய்யும்'

என்ற புதுவை இரத்தினதுரையின் புதிய நம்பிக்கையாய்ச் சுடர்விடுகின்றது. குருதியிலே சூடேற்றிக் கூனிய முதுகினை நிமிர வைத்து, குனிந்த தலையை மேல் நோக்கி எழவைக்கின்ற நோக்கத்தினை இக்கவிஞர்களின் கூர்மையும், நேர்மையும், சீர்மையும் சீற்றமும் நிறைந்த சொற்கள் ஏற்படுத்த வல்லன எனலாம். 'குறியீடும் படிமமும் இன்று எமக்கு வேண்டாம். நெஞ்சைக் குளிர் விக்கும் இச்சகச் சொல்லைத் தொலைத்துக் கூரிய திஞ்சொல் கொண்டு, தூங்குவோரைப் பிடரியில் பிடித்தெழுப்பிச் செயலுந்தல் பெறவைப்போம்! என்ற உணர்ச்சிப் பாங்கே இவர்களின் கவிதைகளிலே தலையெடுக்கிறது; இதனால் காலத்தின் தேவை நிறைவுறுகின்றது.

இனி சிறுகதைகளுக்கு வருவோம்.

1. 'காண்டீபம்' — செம்பியன் செல்வன்.
2. 'அதிர்வு' — சாந்தன்.
3. 'பட்டறிவு' — நாக. பத்மநாதன்.

இந்திய அமைதிப்படைக் காலத்திலே அவர்களின் நிழலிலே, பாதுகாப்பாக நின்று கொண்டு அட்டாதுட்டிகளைச் செய்து வந்த தமிழ்த் தேசிய இராணுவத்தினர் போராளி ஒருவரைத் துரத்திச் சென்று கல்லூரியினுள்ளே புகுந்து ஆசிரியர் ஒருவரைக் கொன்று மேலும் சில ஆசிரியர்களுக்குப் படுகாயம் ஏற்படுத்தியதையும், அதனை முறையிட அதிபரும், ஆசிரியர்களும் (ஆசியர்களில் ஒருவரின் மகன் அதே கல்லூரியில் படித்தவன். இக்கொடியவர்களால் சிறைப்படுத்தப்பட்டிருந்தான்) நகரத் தளபதி (கொமாண்டன்ட்) யிடம் சென்றதையும், அந்தத் தளபதி, அவர்களைப் 'புலிகளின் ஆட்கள்' என்று சொல்லி விரட்டியதையும் கருவாகக்கொண்ட சிறுகதை 'காண்டீபம்' இது உண்மைக்கதை. இதனை எழுதிய செம்பியன் செல்வனும் அக்கல்லூரியிலே ஆசிரியராயிருந்து பட்டறிவு பெற்றகதை. எனவே நிகழ்ச்சியில் பங்காளியாயிருந்த அவர் சம்பவத்தை எதார்த்தமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் சித்தரிக்கின்றார்.

பெரும்பாலும் உரையாடல்களைக் கொண்டே வளர்க்கப்பட்டுள்ள இச் சிறுகதை, ஓரளவு நாடகத்தன்மை பெற்றிருந்த போதிலும் அதன் உண்மைநிலை காரணமாக இலக்கியத் தரத்துக்கு உயர்ந்துவிடுகிறது. இடையிடையே பாத்திரங்களினின்று விலகி ஆசிரியர் தமது கருத்துக்களை வெளியிடுகின்றார். எனினும் அவை பிரசார வாடையின்றிக் கதையோடு இணைந்து செல்வதும், அன்றைய நிலையை உணர்ந்து கொள்ள வைப்பதால் இன்றியமையாததாய் விளங்குவதும் குறிப்பிடத்தக்கன. சம்பவத்தினூடாக இந்திய அமைதிப்படையின் உள்ளார்ந்த நோக்கத்தினையும் புலப்படுத்துவது கதைக்கு வலிவை அளிக்கின்றது. நீண்டகாலத்துக்குப் பிறகு செம்பியன் செல்வன் இச்சிறுகதையை எழுதியிருந்த போதிலும் அவருடைய கைப்பழக்கம் குன்றிவிடவில்லை என்பதை இதனைப் படிக்கும் போது உணர முடிகிறது.

அடுத்து சாந்தனின் 'அதிர்வு' என்ற சிறுகதையை நோக்கினால், பொன்னையரின் தேனீர்க்கடையை மையங்கொண்டு, மேலேபறந்த ஹெலிகளின் வேட்டுக்களினால் ஏற்படும் அவலங்கள் சித்தரிக்கப் படுகின்றன. அவற்றினால் ஏற்படும் அக அதிர்வுகள் கதாசிரியரின் மனஅனுக்கங்கள் மூலமாகவும், நிகழ்வுகள் மூலமாகவும் வெளியாகின்றன.

ஹெலியின் தாக்குதலுக்கு அவரின் கடையினுள்ளே பாதுகாப்புத் தேடும் மோகன், அவர் கடையின் வாங்கினிலே வழக்கமாக அமர்ந்திருக்கும் சேனாதியின் வண்டிலுக்கும் மதகுக்குமிடையே பதுங்கும் தடியன், வானில் காயக்காரர்களை ஏற்றி வரும் போராளிப்பெடியன் என்போரின் ஊடாகப் பொன்னையரின் மனஅதிர்வு களே இக்கதையில் பெருமளவு ஒலிக்கு மாறு கதை வளர்க்கப்படுகிறது.

வான் நின்றபொழுது 'அது ஆபத்து' என்று பொன்னையர் கொள்ளும் பயம். வானுக்குள் எட்டிப் பார்த்ததும் மகனை நினைத்தகலக்கம். அவன் இல்லை என்ற தும் ஏற்படும் தெளிவு... பெடியள் சென்ற வானின் திசையில் வேட்டொலி கேட்டதும் அந்த இடத்துக்குச் செல்வதில் அவர் காட் டிய, ஆர்வம் இவை யாவும் பொன்னை யரின் சித்திரத்தை வாசகர் மனத்திலே அழுந்தப் பதிந்துவிடுகின்றன.

பொன்னையர் செல்ல எண்ணியது புதினம் பார்க்கவா? பொடியள்மீது அவர் கொண்ட இரக்கமா? சாந்தனின் பாத்திர வார்ப்பில் அது உண்மையாகவே இருக்கும், என்று வாசகன் உள்ளத்தில் கேள்விக்குறி கேள்விக்குறியாகவே நிற்கக் கதை முடிந்து விடுகின்றது.

கதையின் பாத்திரத்தை அதன் சிறு சிறு சிந்தனைத் துணுக்குகள் செயல்கள் கொண்டு வளர்த்து அந்த வளர்ச்சி இயற் கையானதன்றி, கதாசிரியராகிய தாம் அதற்குப் பொறுப்பாளி அல்ல என்பது போல சாந்தன் ஒதுங்கிவிடுகிறார். 'அதிர்வு' சிறந்த இலக்கிய தரமுடையது என்பதை மறுத்தல் இயலாது. ஆனால் சாதாரண வாசகனின் உள்ளத்திலே அதிர்வு, அதிர்வை ஏற்படுத்துமா என்ற கேள்வியும் உடன் எழுகின்றது.

மகனின் விடுதலையை எதிர்பார்த்து வந்த ஆசிரியர் பஞ்சாட்சரம் நகர தளபதி யின் போக்கினாலும், பேச்சினாலும் கவலை யையும் புறந்தள்ளி விட்டு.

''வேண்டாம் போகலாம். வாங்க. பொடியன் இனிப்போராளியாய்த் தான் வருவான்...... இவங்களை, அகற்ற என்ர பிள்ளை மட்டுமல்ல...... ஏராளமான பேர் சேருவாங்கள்...... இவங்கள் எண்ணந்தான் வெட்ட வெளிச்சமாய் விட்டதே...... புலி யளை வெளியே வரச்சொல்லுறாங்கள்... கட்டாயம் அது வெளியவரும். அதில என் மகனும் கட்டாயமாக இருப்பான்''

என்று உறுதியுடன் கூறும் பகுதி (காண்டீபம்) எழுப்பும் உணர்வலைகளை 'அதிர்வு' எழுப்பமாட்டாது என்ற முடிவு தவிர்க்கமுடியாததே.

நாகபத்மநாதனின் உருவகம் கதை யான 'பட்டறிவு' சிறியமீன் பெரிய மீனுக் குத் தப்பிக் குகையில் ஒளிப்பதையும், பெரிய மீன் மறைந்த வேளையில் தன்னி லும் சிறிய மீனைத் தன்வாயைத் திறந்து உள்ளே சிறிது நேரம் தத்தளிக்க வைத்து வெளியில் விடுவதையும் நிகழ்வாகக் கொண்டு வளர்க்கப்பட்டுள்ளது. மிகச் சிறிய நிகழ்வு. ஆனால் தத்துவச் சிந்தனை களின் பாரத்தினை இந்தச் சின்னஞ்சிறிய உருவகம் தாங்குமா என்பதே கேள்வி. தாங்குவது மட்டுமல்ல அவசியமா என்ற கேள்வியும் அடுத்துத் தோன்றுவதை தவிர்க் கக்கூடவில்லை.

பொன்னின் குடத்துக்குப் பொட்டிட் டாற் போல அழகிய அமைப்புக் கொண்ட இம்மலரினை ஓவியர்கள் ஆ. இராசையா, மார்க்கு, ராஜன், தயா, ஞானகுரு, ஆகி யோரின் ஓவியங்கள் மேலும் அழகு செய்ய அவற்றிற்கு விளக்கமாகத் தந்துள்ள கவிதை கள் உயிர்கொடுக்கின்றன. □□

# அக்கரைகள்

முத்துவிஜயராகவன்

உருவகம்

இளந் தேனீயொன்று நீலத்திரைக் கடலின் மேலாகப் பறந்து கொண்டிருந்தது. மனிதர்கள் விமானத்தில் ஏறிப்பறக்கிறார்கள். தேனீயோ தானாகப்பறக்கிறது. அவ்வளவு தான் வித்தியாசம். ஆம் அந்தத் தேனீக்கும் தன் சொந்த நாட்டுத்தேன் கசக்கிறதாம். அதனால் அது பரதேசம் நோக்கிப்பறக்கிறதாம்.

''ச்சீ......அது என்ன வாழ்க்கை, எந்த நேரமும் குண்டு விழும். நிலம் குலுங்கும். நாசமறுவாங்களின்ரை குண்டு கக்கிற புகையாலை நாங்கள் மயங்கிச் சரிவோம். இல்லாட்டி மடிஞ்சு சாவோம். இதுதானே சொந்த நாட்டு வாழ்க்கை. இதாலை தானே ஒண்டுக்கும் மசியாத நானே வெளிநாடு எண்டு வெளிக்கிட்டேன்'' அகதி என்று ஓடும் தன் ஆற்றாமையை மறைப்பதற்காக தேனீ இப்படிக் கூறிக் கொண்டது,

உண்மையில் தேனீக்கு வெளிநாடு என்றால் உள்ளுக்குள் கொள்ளை ஆசை. ''கண்ணைக் கவருங் கட்டடங்களை...... வண்ண வண்ண நிறத்தில் பூத்துக் குலுங்கும், விதம் விதமான செடிகளை எல்லாம் காண வேண்டும். அவற்றினிடையே மற்றவர்களைப் போலத் தானும் பறந்து திரிய வேண்டும்.'' எனத் தேனீயின் எண்ணக் கனவுகள் எண்ணிலடங்காதவை.

இந்த உசாரில பெற்றாரை, உற்றாரை, உறவினரை எல்லாம் உதறிவிட்டுச் செல்வது தேனீக்கு ஒன்றும் பெரிய காரியமாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில், பிரியும் போது மட்டும் அழுது குழறி கவலைப்படுவதாகக் காட்டிக் கொண்டாலும் பின்னர் அது துளியுங் கலங்கவில்லை.

அந்தத் தேனீ தேடி வந்த வெளிநாட்டின் வெள்ளை மணல் எல்லை தெளிவாகத் தெரிந்தது. தேனீக்கு சந்தோசம் பொறுக்கவில்லை. அது அந்தரத்தில் அங்குமிங்கும் ஆனந்த நடனமாடியது. -கள் உண்டு களித்த மானிடர் போல்.

ஆனாலுந் தேனீக்கு ஒரு சின்ன ஏமாற்றம். சொந்த நாட்டின் வெள்ளை மணற் கடற்கரைகளில் உறுதியுடன் நிமிர்ந்து நின்று காவல் காக்கும் கரிய நிறப் பனைகளை, அந்த வெளிநாட்டின் வெள்ளை மணற் கரைகளில் காணாதது தான் அதனது ஏமாற்றத்துக்குக் காரணமாயிருக்க வேண்டும்.

''பிறந்த இனத்திற்காக சொந்தச் சுகங்களைத் துறந்ததாலை பனையளாக உயர்ந்துவிட்ட எங்கட வீரர்கள், அடிமைப்பட்டுகிடக்கிற எங்களின்ர சொந்த மண்ணிலே மட்டுந்தான் பிறக்கிறார்களோ?'' தேனீயின் எண்ணம் இப்படித் திரும்பிய போது அதன் இறுகிய இதயமும் ஒரு கணம் கண்ணீரால் இளகியது.

வெளி நாட்டிற்குள் பிரவேசித்த தேனீ ஆசைதீர அனைத்தையும் கண்டு களித்தது. ஆனால் எதிர்பார்த்ததைவிட எல்லாம் எதிர் மாறாகவே இருந்தன.

''சொந்த நாட்டின் பாசப் பிணைப் புக்களால் கட்டப்பட்ட குடிசைகளில் இருந்து வேறுபட்ட உயிரோட்டமற்ற கட்டடங்களை..அதனிடையே இயங்கும் இயந்திர மனிதர்களை ......அது கண்டு களித்தது. அல்ல, அல்ல கழித்தது.

''அடடா...... என்ன இது வயிற்றைக் குடைகிறதே'' அப்போதுதான் சாப்பிட்டு பல மணி நேரமாகி விட்ட தென்பதை தேனீ உணர்ந்தது.

''எட நானும் ஒருத்தன் வந்திருக்கிறன். ஒருத்தரும் என்னைக் கவனிக்கிறதாக் காணயில்லை.'' தேனீ கவலைப்பட்டுக் கொண்டது. அதற்குப் பசி. அகோர பசி தேனீக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது.

இங்க நாங்க தான் எங்கட பாட்டைப் பார்க்க வேணும் போலை ஒருத்தரும் உதவி செய்யிறதா காணயில்லை'' இப்படி எண்ணிக் கொண்ட தேனீ மலர்களை நாடி மரங்களைத் தேடி அங்குமிங்கும் அலைந்தது.

அதோ ஒரு அழகான மலர். தேனீ அதில் ஆனந்தமாய் அமர்ந்து கொண்டது. அடுத்த கணமே அது விரைந்தெழுந்து பறந்தது.

''எட நான் கூடவா ஏமாந்து போனேன், எத்தினை காலமா பூக்களோடை நெருங்கிப்பழகின எனக்கே இது 'பிளாஸ்ரிக்' பூவெண்டு தெரியாமல் போச்சுதே.''

தேனீ ஏமாற்றத்துடன் உயர எழுந்து பறந்தது. நிஜமான இயற்கையைத் தேடி, சொந்த நாட்டில் உள்ளது போல் மகரந்த வாசம் வீசும் பூக்களை நாடி பறந்தது... பறந்தது.

இறக்கைகள் ஓ(டி)யும் வரை பறந்து கொண்டேயிருந்தது.

அங்கே அந்தச் சதுப்பு நிலத்தில் ... தேனீக்கு ஓரே ஆச்சரியம். அது தேடி வந்த சொர்க்கம் வெளிநாட்டில் இப்படியொரு ஓரத்தில் இருக்குமென்பதை அது நினைத்துக் கூடப்பார்க்கவில்லை.

அந்தச் சதுப்பு நிலத்தில் ஆகா! என்ன அழகான தாவரம், வண்ண... வண்ண நிறத்தில் மின்னும் அந்தப்பகுதி, தேனீமயங்கியது. பிறகு மெல்ல ...... மெல்ல..... கீழே இறங்கியது,

கவர்ச்சியினால் தேனீயின் உணர்ச்சிகள் மரத்துப் போயின. சதுப்பு நிலத்தின் வெடுக்கு நாற்றங்கூட

அதன் நாசியைப் பாதிக்க வில்லை.

தாவரத்தின் கவர்ச்சியான அந்தப்பகுதியை அணுகிய தேனீ மெல்ல அதில் அமர்ந் தது.

''ஆ...ஆ...ஐயோ''

சிலந்தியின் கால்களைப் போல ஏதோ ஒன்று தேனீ யைப் பிடித்து உள்நோக்கி இழுத்தது. தேனீ நிதான மாவதற்கு முன்னரேயே அது உள்ளுக்குள் தள்ளப் பட்டுவிட்டது. ஆம் அந்த வெளிநாட்டுப் பொறிக்குள் தேனீ நன்றாக அகப்பட்டுக் கொண்டது.

எவ்வளவு முயன்று பார்த்தும் அதனால் வெளி யே வரமுடியவில்லை. உடம் பெங்கும் யாரோ கட்டுப் போட்டு விட்ட மாதிரியிருந் தது. பாவம் தேனீ. கண் கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் பண்ண முடி யுமா என்ன?

சிறிது நேரத்தில் அந்த ஊனுண்ணித் தாவரத் தில் சுரக்கப்பட்ட சுரப்புக் களினால் தேனீ கொல்லப் பட்டு, அதன் சில பகுதிகள் உறிஞ்சப்பட்டது. மீதிக் கழி வுகள் வெளித்தள்ளப் பட்டு வேற்று மண்ணில் விழு ந்து சிதைந்தது. □□

● ● ●

''சிறிலங்கா ராணுவத்தின்ர வாக்கு மூலக்காரராக கேர்ணல் சரத்முன சிங்கா இருக்கிறார் போலிருக்கு. ஏனெண்டால், அரசாங்கத்தின்ர ராணுவ நடவடிக்கை களைப் பற்றி, ராணுவ நடவடிக்கைகளில் புலிகள் குடுக்கிற அடிகளைப்பற்றி கண்டபடி தங்கடபக்கத்தில இருந்து அபிப்பிராயங்கள் வெளிவரக் கூடாதெண்டு தான்

முதல்ல ராணுவத் தளபதிகள் எல்லாரும் கண்டபடி கருத்துச் சொல்ல முற்பட் டினம் 'ராணுவத்தீர்வு இனப்பிரச்சினையைத் தீர்க்காது' எண்டும் 'புலிகளைவெல்ல ஏலாது' எண்டும், பல அபிப்பிராயங்கள் வந்தது. ஏன் கொப்பேக்கடுவவும் இந் தக் கருத்தில பேப்பர்களுக்குப் பேட்டி குடுத்தது ஞாபகமிருக்கும்.

இப்படி உண்மைகள் வெளிவரக் கூடாதெண்டு தான் சிறிலங்கா அரசாங்க மும், ராணுவமும் 'இராணுவப்பேச்சாளர்' எண்டு ஒருத்தரை வைச்சிருக்குது போல

எல்லா உண்மையும் புரியத் தொடங்கத்தானே ஏழாயிரம் பேர் ராணுவத்தை விட்டு ஓடியிருக்கினம்.

உண்மையள் புரியத் தொடங்கத்தான் அவைக்கு ..

கண்கெட்ட பிறகுதான் சூரிய நமஸ்காரம் செய்வினம் போல... □□

தரிசனம்

# மலர் வெளியீடும். கலை வெளிப்பாடும்

## ஒரு நிகழ்வுத் தொகுப்பு

அண்மையில் யாழ் / பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ''மலர் வெளியீடும், கலை வெளிப்பாடும்'' என்ற நிகழ்வு நடந்தது. அந்த நிகழ்வுகளை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

11 - 09 - 92 வெள்ளிக்கிழமை அன்று யாழ் / பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், ''விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் மலர் வெளியீடும், கலை வெளிப்பாடும்'' என்ற அறிவிப்புத்திரை காணப்பட்டது. பி. ப 3-00 மணிக்கு ஆரம்பமாவதாக இருந்த நிகழ்வுகளுக்காக மக்கள் (போராளிகளும்) கூடத் தொடங்கினர்.

நிகழ்வுக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளரும், முத்தமிழ் விழாப் பொறுப்பாளருமான திரு. தேவர் அவர்கள் தலைமை தாங்கினார். மரபு ரீதியான மங்கள விளக்கேற்றலில் வன்னிப் பிராந்திய கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. டொமினிக் அவர்களும், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி அவர்களும் மங்கள விளக்குக்கு சுடர் ஏற்றினர். மண்மீட்புப் போரில் வீரச்சாவெய்திய போராளிகளுக்கும், மற்றும் உயிர் ஈந்த எமது மக்களுக்குமாக உணர்வுபூர்வமான இரண்டு நிமிடங்கள் மௌன வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துப்பாவை திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கினார். வழமையான வாழ்த்துப்பா வகையை மீறி, தமிழின் சிறப்பையும், போராட்டத்தையும், போராளிகளின் ஈகையையும் இந்த நாட்களின் நிகழ்வுகளையும் கொண்ட பா, பொருளும் குரல் இனிமையும் இசையில் இணைந்து மெய்சிலிர்க்க வைத்தன. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு சிட்டு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மக்கள் கூட்டம் அரங்கு நிறைந்து, வெளியேயும் குழுமி இருந்தது. திரு. தேவர் அவர்கள் தலைமையுரையில், ''விடுத

லைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற ஆயுதப் போராட்டத்திலே விடுதலைப் போராளிகளினதும், தமிழீழ மக்களினதும் ஆன்ம பலமும், மனஉறுதியும் உந்து சக்திகளாக விளங்குவதுடன், மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துவிட்ட கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்கள் இலக்கியங்கள் ஆகியனவும், விடுதலைப் போராட்டத்திலே பெரும் பங்களிப்புச் செய்வனவாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே எமது தேசியத் தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாக கலை பண்பாட்டுக் கழகத்தினைத் தோற்றுவித்தமையும், இதனூடாக இயல், இசை, நாடகம் என்ற தன்மையில் முத்தமிழைப் போற்றி வளர்க்க முற்பட்டமையும், காலத்திற்கேற்ற நிகழ்வாக உள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ்விழாவை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது எனினும் விழா மூலம் செய்யவேண்டிய பணிகள் உரியமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழீழ மண்ணிலே எதிர் வரும் ஆண்டில் முத்தமிழ் விழா மகத்தான முறையில் கொண்டாடப்பட்டே தீரும், எனக்குறிப்பிட்டார்.

பிறகு 'எழுதாத கை உலக்கை' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நிகழ்ந்தது. பண்டிதர் வீ. பரந்தாமன் அவர்கள் தலைமை வகித்தார். திரு. செம்பியன்செல்வன். திரு. சபா ஜெயராசா திரு. சி. சிவலிங்கராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

''30 லட்சம் மக்களையும் 30 ஆண்டுகள் காலத்தையும் இதுகால வரையான எமது இலக்கியங்கள் சரியான பாதையில் இட்டுச் செல்லத் தவறி விட்டது என்பதை, கடந்த காலங்களைத் திரும்பிப் பார்க்கிற போது புரிகிறது. இது வேதனையைத் தருகிறது எமது மண்ணின் பல கிராமங்களையும், கிராமத்து மக்களின் வாழ்வியலையும் நாம் சரியான முறையில் தரிசிக்கவில்லை - அல்லது வெளிப்படுத்தவில்லை என உணர்கிறேன். இன்று, காலம் நமக்குப் பல பாடங்களைப் படிப்பிக்கின்றது. இவற்றைக் கற்றுக்கொண்டு இனி இலக்கியங்களைப் படைக்க வேண்டும். இது நம் அனைவருக்குமான சமூகக் கடமையாகும்.'' என்ற செம்பியன் செல்வன் தன்னையும் சுயவிமர்சனத்துக்கு உட்படுத்திப் பேசியது எல்லோரும் சிந்திக்க வேண்டியது.

இதன் பின்னர், சிவலிங்கராசா; ''இந்த போராட்டத்தின் போது பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன். அவற்றை நாம் இலக்கியங்கள் ஆக்கவேண்டும். அவை வரலாற்றைக் கூறுவனவாகவும், இக்காலத்தை ஆவணப் படுத்துவதாகவும் அமையும்'' என்றதும், சபா. ஜெயராசா: 'படைப்பாளியானவன் விடயங்களை உள்வாங்கி அடைகாத்து படைத்தல், படைப்பில் அனுபவம் அறிவு சார்ந்த வெளிபாடாகப் அமையும்'' எனத் தெரிவித்ததும், கலை இலக்கியப் பிரக்ஞை உள்ளவர்கள் செயன்முறையில் ஈடுபட வேண்டிய தேவையை உணரக்கூடியதாக இருந்தது.

இந்தக் கருத்தரங்கில் எங்களுடைய வாழ்வியலுக்கான போராட்டம், இலக்கியவாதிகள் இன்று புரிய வேண்டிய அவசியமான பணி என்பன உணர்த்தப்பட்டன.

முத்தமிழ் விழா மலர் வெளியீட்டில் தலைமையுரை ஆற்றிய திரு தேவர் அவர்கள், ''சென்ற ஆண்டு முத்தமிழ் விழாவையொட்டி மிகவும் சிறப்பான முறையில் முத்தமிழ் விழா மலர் வெளியிடப்பட்டது. இந்த வருடம் முத்தமிழ் விழா மலர், தமிழீழத்து அறிஞர்கள், படைப்பாளிகளின் ஆக்கங்களுடன் சிறந்த முறையில் தயாரிக்

கப்பட்டது. திட்டமிட்டபடி முத்தமிழ் விழாவினை குறித்த காலத்தில் நடாத்த முடியாமல் இருந்தாலும் முத்தமிழ் விழா மலரினை வெளியிடுமாறு எமது தலைவர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதற்கமைய முத்தமிழ் விழா மலர் வெளியீடும், கலை வெளிப்பாடும் இடம்பெறுகிறது'' என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் மலரை வெளியிட்டு வைக்க, செல்வி ஆர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். இளங்குமரன் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்துகையில்,

''கடந்த ஆண்டு முத்தமிழ் விழாவில் செய்யப்பட்ட பிரகடனங்களின்படி எமது பணிகள் நடந்து வருகின்றன. அவற்றில் குறிப்பிடும்படியாக, மொழியைப் பேணி வளர்ப்பதற்கான முயற்சிகளும், இசை மேம்பாட்டுக்கான 'இசைவிழாவும்' இலக்கியத்தில் 'வெளிச்சம்' இதழ் வெளியீடும் குறிப்பிடக்கூடியன. இனியும் இத்துறைகள் தொடர்பான பணி தொடரும்' எனக்குறிப்பிட்டார்.

மலர் பற்றிய ஆய்வுரைகளை திரு சொக்கனும் திரு வி. பி. சிவநாதனும் நிகழ்த்தினர்.

கலை வெளிப்பாடுகள் கவியரங்குடன் ஆரம்பமாகின. 'தாயை நிகர் எங்கள் தாயகத்தைக் காதல் செய்' எனுந் தலைப்பில் புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமையில், முழுமையும் போராளிக் கவிஞர்களே பங்கேற்றனர். இவ்விதமாய் அமைந்தது இதுவே முதற்தடவை எனினும், சமர்க்களத்தில் தாம் பெற்ற பட்டறிவினூடே வார்த்தை வார்த்தையாய் வெளிப்பட்டு, கவியாரமாய் தொடுக்கப்பட்டதன் விளைவாய் உண்மைத் தன்மையும்; உணர்வு பூர்வமாயும் கவிதைகள் அமைந்தன- ஒரு புறம் உரிமைப் போராட்டம் - எதிர்கால சந்ததியினரின் வாழ்விற்கான எழுச்சி நிகழ்ந்து கொண்டிருக்க, அந்நிய நாடுகளுக்குப் பறந்து கொண்டிருக்கும் எம்மினத்தில் ஒரு சாரார் மீதான நியாயமான கோபமும் கூட, அனைத்துக்கவிஞர் கவிதைகளிலும் வெளிப்பட்டன.

இனி, 'சீதன அம்புகள்' எனும் நாட்டிய நாடகம் பெண் போராளிக் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டது. விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் உருவாக்கி அளித்த இந்த நாட்டிய நாடகம், அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கியதுடன் ' இவ்வளவு கலைத்திறன் வாய்ந்தவர்கள் எங்கள் போராளிகள்'' என நிமிரவும் வைத்தது.

நிகழ்வுகளின் நிறைவாக நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' என்ற நாடகம் அரங்கிடப்பட்டது.

மாலையில் தொடங்கி முன்னிரவின் முடிவுவரை இந்த வெளிப்பாடுகள் நிகழ்ந்தன. முன்னர் நிகழ்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் கலை, இலக்கிய வாதிகள் எனப்படும் ஒரு வட்டத்துள் அனேகமாக முடங்கி விடுவன. இப்போது நிகழ்ந்து வரும் இவ்வகையான நிகழ்வுகள் கலை, இலக்கிய வாதிகளுடன் பரந்து பட்ட மக்களையும் போராளிகளையும் மையங்கொள்ள வைத்து வருவது நிறைவாகவும் போராட்ட உந்து தலை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றன. பயனுள்ள இந்த எட்டுமணிநேரம் பயன் மிக்க பலநாட்களிற்கு........ □□

க
வி
தை

இ. திருமாறன்

# உடன் பிறப்பே! என்ன செய்ய உத்தேசம்?

ஈழத் தமிழா விழிப்பாயா
இனியும் உறங்கிக் கிடப்பாயா
சுதந்திரம் அதனை மறப்பாயா — இல்லை
சோற்றுக்கு கையேந்தி நிற்பாயா

கட்டிய உடையதும் இழப்பாயா
காசுக்கு மானத்தை விற்பாயா
வெட்டி மனிதனாய் வாழ்வாயா — இல்லை
வீறுடன் நிமிர்ந்து நடப்பாயா

தொட்டிலில் வளர்ந்த புலியா (டா) - நீ
தொழுவத்தில் வளர்ந்த பசுமாடா
பட்டினி என்றதும் பணிவாயா — இல்லை
பணிவிடை செய்து பிழைப்பாயா

தெருவினில் சாபவன் கோழையடா
செருக்களத்தினில் சாபவன் வீரனடா
உன் உதிரத்தில் பாய்வது கழுநீரா - இல்லை
உந்தன் தாயின் முலைப்பாலா

தாயவள் விலங்கினை உடைப்பாயா - உன்
தங்கையின் கண்ணீரைத் துடைப்பாயா
கைகளை உயர்த்தி நிமிர்வாயா — இல்லை
கடமையை மறந்து இருப்பாயா

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

சிறுகதை

# “எனக்கும் துவக்கொன்று தாருங்கள்”

சீனமொழியில்:
**வாங்ஷி - யென்**

ஆங்கிலம் வழியாக தமிழில்:
**சு. மகேந்திரன்**

வாங்ஷி - யென் இன் போரைத் தழுவிய பல கதைகள், நேரடியான போர் அநுபவங்களின் பிரதிபலிப்பாகும்; அவை சீனாவில் பிரபலமான சஞ்சிகையான ‘போர்க்கள இலக்கியம்’ என்பதில் பிரசுரிக்கப் பட்டவை.

பல வருட மன்னர் ஆட்சி 1911ம் ஆண்டு, சீனாவில் முடிவுற்றது. சியாங் - கை - ஷேக் இனது தேசியப்படைகள் கொம்யூனிஸ்ட்டுகளின் உதவியுடன் சீனாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றி ‘கொமின்ராங்’ நிர்வாகத்தை 1928இல் உருவாக்கின. உட்பிரச்சினைகளால் கொம்யூனிஸ்ட்டுகளுக்கும், கொமின்ராங்க் இற்கும் இடையே பிளவு ஏற்பட்டது. 1931ல் ஜப்பான் மஞ்சூரியாவைப் பிடித்துக் கொண்டது. 1945ல் ஜப்பான் சரணடையவே, சியாங் - கை ஷேக்கின் படைகளுக்கும் கொம்யூனிஸ்ட் புரட்சியாளர் மாவோ - சே - துங் இன் படைகளுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டு யுத்தமே, இக்கதை நடந்த காலப் பகுதியாகும். ‘பேய்வீரர்கள்’ சியாங் - கை - ஷேக்கின் வீரர்கள்; ‘நம்மவர்கள்’ என அழைக்கப்படுபவர்கள், மாவோ - சே - துங் தலைமை தாங்கிய கொம்யூனிஸ்ட் போராளிகள்.

எதிரி வரிசையை முறியடித்து, விரைவாக ஓர் இரவும் பகலும் நடந்து, எமது துருப்புக்கள் 'லூயாங்' இன் மேற்குப் பகுதியில் அமைந்த 'பாதுகாப்பான பிரதேசத்தை' அடைந்தன.

அதுவும் ஒரு கரிய இரவுதான். எதிரியின் குண்டு வீச்சால் லூயாங் முழுமையாக எரிந்திருந்தது. ஆனால் அதிலிருந்து 20 லய்* தூரமுள்ள ஓர் அமைதியான கிராமத்தை அடைந்தோம். இரண்டு கிழமையாக நடந்த இராணுவ நடவடிக்கைகளால், மரணக் களைப்பு அடைந்திருந்தோம். தவழ்ந்து சென்று, தினைத் தானியம் வைக்கப்பட்டிருந்த கொட்டில்களுக்குள் - அங்கு குவிக்கப்பட்டிருந்த கோதுமைக் கதிர்களுக்குமேல் — ஒழுங்கற்ற முறையில் எமது அணி படுத்துக்கொண்டது.

''லோசென் இது சரியல்ல! இந்தக் கோதுமைக் குவியல்கள் அமிழ்ந்துவிடும்'' என, நான் முணுமுணுத்தேன். ஆனால் அசைவதற்கு என்னிடம் பலம் இருக்கவில்லை.

நான் எழும்பியபோது எனது கண்கள் ஒட்டிக்கொண்டு மிகுந்த வலியைத் தந்தன. தலையைத் தூக்கிச் சுற்று முற்றும் பார்த்தேன். 'கோதுமைக் கதிர்க் குவியலா! அது அரை வாசி காய்ந்த கழுதைக் கழிவாக இருந்தது!''

''இங்கே பார். என்ன மாதிரியான நித்திரைப் பேய்கள் நாங்கள்'' என, நண்பனை எழுப்பிக் கூறினேன்.

ஏதோ பிரமாணத்தைக் கேவல் ஒலியுடன் கூறியபடி எழுந்து, நிலைமையைக் கண்டு காறித்துப்பினான், லோசென்.

குனிந்தே செல்லக் கூடிய எதிர்ப்புற வீடு ஒன்றில் இருந்து, முதுகுகூனிய விவசாயி ஒருவன் வெளியே வந்தான். பணிவாகவும் மன்னிப்புக் கேட்கும் குரலிலும், அவன் என்னிடம் சொன்னான்:

''சீச்...சீ! அவையெல்லாம் கழுதைக்கழிவு. நான் விறகுக்காக அதனைக் காய வைத்துள்ளேன்— நீங்கள் ஒரு சொல்லுக்கூடச் சொல்லவில்லையே! எனது வீட்டில் எவ்வளவோ இடம் இருக்கிறது.''

நான் நன்றி கூறியபடி அவனை உற்று நோக்கினேன்.

மடிப்பு நிறைந்த அவனது நெற்றிப் பொட்டு, அவனது இதயம் தூய்மையானது எனக் காட்டியது. விவசாயிகளுக்கே உரிய வெட்கமும், வெருட்சியும் காணப்பட்டன. அவனது புகைக்குழாயில் இருந்து தரம் குறைந்த புகையிலையின் வாசனை வந்துகொண்டிருந்தது.

''நான் உங்களுக்கு கழுவத் தண்ணீர் அள்ளித் தருகிறேன்.''

''யோசிக்காதே—ஆறுதான்மிகவும்வசதியானது.''

நாங்கள் எமது சுத்திகரிப்பை முடித்துக்கொண்டு வரும்போது, அவன் திரும்பவும் வந்தான்.

''உங்களுக்காகத் தண்ணீர் சுட வைத்திருக்கிறேன் லோசக்''* என்றான்.

(ஒரு வீரனை அழைக்கும்போது லோசக் எனவே, மக்கள் அழைத்தனர்)

ஆ ...! அவர்களின் மனோபாவம் எவ்வளவு அக்கறை உள்ளதாகவும் ஆழமானதாகவும் இருந்தது! நாங்கள் எங்காவது இளைப்பாறுவதற்கு அல்லது தங்குவதற்குப் புகுந்தால், அவர்கள் சூடாக்

* 3 லய் = 1 மைல்

* சீனப் புரட்சியின் போது கொம்யூனிஸ்ட் போராளிகளை, மக்கள் இப்பெயரினால் தான் அன்புடன் அழைத்தனர்.

கிய நீர், கஞ்சி, தினைக் கேக், நூடில்ஸ் என்பன வற்றைத் தருவர். பின் அரவணைக்கும் அந்தப் பார்வைகள் .... சில இலகுவான கேள்விகள்... என்பன வற்றால், தமது அன்பைக் காட்டுவர். களைப்புற்று வயலில்இருந்து வரும் தமது மகள்மார், புருஷர்களுடன் நடந்து கொள்வதுபோல் மிகுந்த அன்புடனேயே எம்மை வரவேற்றனர்.

பொதுவில் எல்லோரும் சாதாரணமாகவும் அன்பாகவும் இருந்தனர். முன்பு அவர்கள், ஆயுதம் தாங்கியவர்கள்பற்றி கவலைகொடுக்கும் பல நினைவுகளைத் தம்முள் வைத்திருந்தனர். ''போர்வீரர்களுக்குப் பயப்படு; ஆனால் கொள்ளைக்காரருக்குப் பயப்படத் தேவையில்லை'' என்ற வழக்கும், எங்கும் பேசப்பட்டதாகும். ஆனால் இப்போது அப்படியல்ல என்பது, எல்லோருக்கும் தெரிந்திருந்தது. தமது விதியில் பங்குகொண்டுள்ள —தூரத்தில் இருந்துவரும் இந்த விருந்தாளிகள்— தம்மவர்களே என, அவர்களுக்கு விளங்கி இருந்தது.

குனிந்துகொண்டு அவனின் வீட்டுக்குள் சென்றோம். பெரியதோர் மண் அடுப்பு அந்த வீட்டின் பெரும்பகுதியைப் பிடித்திருந்தது. தினைவைக்கோலால் வேயப்பட்ட வீடு, திருத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தது. முறிந்து தூங்கிய தினை வைக்கோல்களின்மேல் எமது தலை படும்போதெல்லாம், தூசி மண்டலம் எழும்பிக்கொண்டிருந்தது.

ஒரு பானையில் இருந்து நீராவி வெளியேறிக்கொண்டிருந்தது. இன்னுமோர் பானை - அநேகமாக கோதுமைக் கஞ்சி அதில் மிஞ்சியிருந்தது போலும்... இலையான்கள் போர்க்களம் போல் மொய்த்துக் கொண்டிருந்தன.

அப்போது, நீட்டிய மஞ்சள் பற்களை உடைய பெண் ஒருத்தி, அடுப்பின் கதவு முன் வந்து நின்றாள். அவள் ஏதும் பேசாமல், கவனமாகவும் நடுக்கத்துடனும், தினைவைக்கோலால் செய்யப்பட்ட மூடியைக் கொதிக்கும் பானையில் இருந்து எடுத்தாள். சடுதியாக, மிக அதிகமான நீராவி வெளிக்கிளம்பியது.

விவசாயி வெளியே சென்று ''லோசக், இங்கே சுடு தண்ணீர் உள்ளது'' எனத் தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தான்.

''சுடுதண்ணீர்'' என்ற வார்த்தையைக் கேட்ட உடனேயே, எம்மவர்கள் ஒரே கூட்டமாக, நல்ல தின்பண்டம் ஒன்றைக் கண்ட எறும்புகள்போல் உள்ளே கூடினர். ஒரே சமயத்தில் பத்துத் தகரக் குவளைகள் பானையுள் நுழைந்தன. அவை மோதும் சத்தமும், தண்ணீர் பூவாக வாரித் தெறித்தலும் நடந்தன.

இது அப்பெண்ணுக்குச் சிரிப்பை மூட்டியது. அவள் தனது முகத்தில் உள்ள வியர்வையைத் துடைத்தபடி, தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தாள்; ''தண்ணீர் காணாவிட்டால் என்ன? இன்னும் கொஞ்சம் கொதிக்கவைக்கலாம். பெரிய பானையை வைக்க வேண்டும்.''

அரைவாசிக் குவளைகள் நிறையும் முன்னரே பானை வற்றிவிட்டது. சிலர் குவளைகளை வெளியே எடுத்தனர். சுரண்டும் சத்தம் எழ, பாத்திரத்தில் மிஞ்சிக்கிடந்த சொட்டு நீரையும் எடுக்கச் சிலர் முனைந்தனர். ஆவலுடன் வெறுமையாகக் காத்திருந்த சிலர், ''நாம் சிறிது பொறுமையாக இருக்கவேண்டும்'' எனக் கூறிக் கொண்டிருந்தனர்.

கதவடியில் பரபரப்பு டன் நின்று கொண்டிருந்த விவசாயி தனது கைகளைத் தேய்த்துக் கொண்டும், ஆட்டிக் கொண்டும் இருந் தான். இயற்கைக்குமாறா கச் சிரித்தபடி சொன் னான்.

''சிறிது நேரம் பொறுங் கள். நான் போய்த் தண் ணீர் அள்ளி வருகிறேன்.''

தனது சுங்கானை வாயில் வைத்தபடி, மரத் திலான வாளியை எடுத்துக் கொண்டு, அந்தப் பெண் ணிடம் ''நான் உன்னிடம் பெரிய பானையில் சுடவைக் கச் சொன்னேன்.... பெரிய பானையில்'' என, முணு முணுத்தான்.

அந்தப் பகிந்த வீட்டுக் குள் நுழைந்தபோது, இருட் டில் எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் விரைவில், கண்கள் இருட் டுக்குப் பழக்கப்பட்டு விட் டன. தேரைகள் இருண்ட கிடங்குகளில் கிடப்பது போல் இரண்டு சிறிய பெண் குழந்தைகள், அடுப்பைச் சுற் றிப் பதுங்கியபடி நிலத்தில் கிடந்தன. உடல்களைக் குறுக்கியபடி, கண்களைச் சுழற்றி, முரட்டுத் தோற்ற முடைய இந்த அழையா விருந்தாளிகளை வெருட்சி யுடன் பார்த்துக்கொண்டி ருந்தனர். நான் அவர்க ளைப் பார்ப்பதைக் கண்ட தும், சடுதியான பயத்துடன் தங்களுக்குள் கட்டிப் பிடித் தபடி, கோமாளிக் கோலத் துடன், தாயின் பின்னால் ஒளித்தபடி நின்றனர்.

விவசாயி இரண்டு வாளி தண்ணீருடன் வந் தான். ஒரு காய்ந்த புடலங் காயின் வெளிக்கோதின் உதவியுடன், பானைக்குள் நீரை ஊற்றினான். அவனது கூனிய உடல் மேலும் கூன லாக, இருமத் தொடங் கினான்.

''உனது பெயர் என்ன?''

''என்னைக் கூனல் 'சாங் எச்' என அழைப் பார்கள்.''

அவன் இதனைக் கூறி வெட்கத்துடன் சிரித்தபடி சொன்னான்.

''இளவட்டங்கள் என் னைக் கூனல் 'சாங் எச் மாமா' என்று அழைக்கவே விரும்புகின்றனர்.''

''அவை உன்னுடைய குழந்தைகளா?''

''அந்த இரண்டு சிறிய பெண்களா? கீ—கீ — ஆம், இரண்டு சாப்பிட மட்டும் தெரிந்த வாய்கள்.''

இந்த விவசாயிகளின் அழகிய தன்மையே இது தான்! அவர்களது இதய மோ ஒரு மடித்த விசிறி போன்றது. மடிந்து இருக் கும்போது அவை இறுக்க மாகவும், ஒரு துளிக் காற் றுக்கூட உட்செல்ல முடியா ததாகவும் இருக்கும். ஆனால் அவை திறக்கப் பட்டாலோ, உங்கள் கண் களின் முன்னால் எல்லா வற்றையும் காட்டிவிடும்.

அவன் தனது துக் கத்தை, வெறுப்பை, அதே நேரத்தில் — எதனையும் தெரிவு செய்யாமலும் யோசிக்காமலும், முற்றா கக் கொட்டித் தீர்த்துவிட் டான். நிலம் இன்மை, அற்பமான விளைச்சல், கடுமையான வரி என்பன பற்றிப் பேசினான்.

''எமது விளைபொருட் கள் கப்பமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவற்றிற்கு அவர்கள் கொடுக்கும் பெயர்கள்கூட நினைவில் நிற்பது இல்லை. ஆனால் சிரமமாகவே உள்ளது. எண்ணெயினைத் தவிர்க்கலாம்தான்; ஆனால் உப்பு இல்லாமல் முடி யாதே! அது எவ்வளவு விலை உயர்ந்து விட்டது! உங்களிடம் ஏதும் இருந் தால், அதிர்ஷ்டம் தான்.''

சிறிது நிறுத்தி புதுமை யாகப் பார்த்தான். அவ னது இதயம் துன்ப நினை வுகளில் மூழ்கி இருந்தது.

தனக்கு மகிழ்ச்சி தரும் ஒரே சாதாரணமான சுங்காணை எடுத்துப் பற்றினான். அதிலிருந்து ஓர் திரளான புகை வெளியேறி, அவனது கவலை படிந்த முகத்தைச் சூழ்ந்தது.

''அந்தப் பேய்கள் இங்குவந்துதாக்கமாட்டார்களா?''

''அவர்கள் வூ—யாங்கிலிருந்து 40 அல்லது 50 லய் தூரத்தில் உள்ளதாகக் கேள்வி'' என, அவனின் மனைவி இடைமறித்தாள்.

''அது உண்மையா? 40 அல்லது 50 லய் தூரம், ஒரு நாள் நடக்கும் தூரந்தானே. மொட்டைத்தலைலோ — வூதான் சொன்னான் — பேய்களின் வெளிநாட்டுத் துப்பாக்கிகள் சுடத்தொடங்கினால், 80 லய் தூரம் செல்லும் என!''

''அவ்வளவு விரைவாக அல்ல'' — நான் தற்செயலாகக் கூறுவதுபோல் கூறினேன். எனது குரலை மென்மையானதாகவும், தெளிவற்றதாகவும் வேண்டுமென்றே நான் வைத்துக் கொண்டேன்.

நாங்கள் நன்றாகச் சாப்பிட்டு ஏழு அல்லது எட்டு நாட்கள் இருக்கும். புளிப்புப் 'பீச்' பழங்களையும், முசுக்கொட்டை இலைகளையுமே சாப்பிட்டு, சிறிய ஓடைகளில் வரும் மஞ்சள் நீரையே மதிப்பு நிறைந்த பானமாகவும் அருந்தவே எமக்கு முடிந்தது.

எமது நலிந்துபோன வயிற்றுக்கு சிறிது ஆறுதல் தர வேண்டி ஒரு 'முழுமையான' உணவு உட்கொள்ள வேண்டும் என்ற விருப்பம், எம்மில் பலருக்கும் ஏற்பட்டிருந்தது. ஒரு பெரிய கூட்டம் அதைப் பற்றி அளவளாவிக் கொண்டுமிருந்தது. ஆனால் அரிசியும் இறைச்சியும் எங்கே வாங்குவது? இந்தக் கிராமத்தில் ஏதாவது முக்கியத்துவம் வாய்ந்த குடும்பங்கள் இருந்திருப்பின், அவை ஏற்கெனவே வீடுகளை விட்டு வெளியேறி இருக்கும். இருப்பவர்களோ கோதுமைக் கஞ்சி குடிப்பவர்களாகவே இருந்தனர்.

அரிசி அல்லது இறைச்சி வாங்க வேண்டும் என்றால், 10 லய் தூரத்தில் இருக்கும் ஒரு சந்தைக்குத் தான் செல்ல வேண்டும்என்றான், 'சாங் எச்.'

''நீங்கள் இந்தக் கூனல் 'சாங் எச்' ஐ நம்பியே ஆகவேண்டும். அவன் ஒரு போதும் லோசக்குகளை ஏமாற்றமாட்டான்.''

அவனை நம்புவதா இல்லையா என்பதைப் பற்றி, நாம் நினைக்கவே இல்லை. எமக்கு என்ன வேண்டும் என்பதை அவனிடம் விளக்கி, பணத்தைக் கொடுத்து அனுப்பினோம்.

சிறிது நேரத்தில் சாமான்களை ஒரு தடியில் கட்டி. தோளில் தொட்டில்போல் சுமந்தபடி, பெருமூச்சுடன் 'சாங் எச்' வந்தான். அவற்றின் நிறையையும். விலையையும் விரிவாகக் கூறினான். தனது ஒட்டுப் போட்ட சட்டையால் முகத்தைத் துடைத்தபடி, ஏதோ தனது சொந்த வேலை ஒன்றைச் செய்து முடித்தது போன்ற தோரணையில், சிரித்துக் கொண்டிருந்தான்.

''உண்மையாகவே பயங்கரமானது தான்'' — ஆச்சரியமும், மிகையும் கலந்த குரலில் கூறினான்.

சுறுசுறுப்புடன் மேலும். தான் செல்லும் போது வேறோர் படை அணியினர் தன்னைச் சோதனைசெய்ததாகவும், குதிரையில் வந்த படை வீரர்கள் துப்பாக்கி முனைக்கத்தியைதனதுமார்பில் நீட்டி, அரிசியையும். இறைச்சியையும் தராவிட்டால் தன்னைச் சுட்டுவிடுவதாகக் கூறியதாகவும், தான் வந்த காரியத்தைக் கூறி, கொடுக்க மறுக்கவே, தன்னைத் துப்பாக்கியின் பின்புறத்தால் அடித்து பின் விடுவித்ததாகவும்,

சொன்னான். பின், தனது கிராமத்தின் பக்கம் வந்த போது காவலாளி தன்னை மறித்ததாகவும், தான் நிற்காமல் போகவே சுட உத்தரவிட்டதாகவும், துப்பாக்கி சுடும் சத்தம் கேட்ட போது குண்டு ஒன்று தனது காதின் பக்கமாக உராய்ந்தது போல் சென்றதாகவும், தான் கிட்டத்தட்டச் செத்துப்போய் விட்டதாகவும் சொன்னான்.!

அவன் செய்த உபகாரத்துக்காக ஒரு வெகுமதி கொடுக்க விரும்பி முயன்றோம். அவன் தடுமாற்றம் உற்று, அரை நாள் வரை பேசாமலே இருந்தான். அவனது கூனல் இன்னும் அதிகரித்து முகம் சிவக்க, கைகளைத் தொடர்ந்து ஆட்டியபடி இருந்தான்.

''நீங்கள் ...... இது .. இது... இது— நான் கூனல் 'சாங் எச்' லோசக் நான் இல்லை ...... இல்லை — இந்த, இந்த வகை மனிதன் அல்ல.''

''இதை எடுத்துக் கொள்; இது எமது இராணுவத்தின் விதி. இதைக் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ளவே வேண்டும்!''

''உண்மையா நடிக்காதே!'' — இது எமது சகோதரன் ஒருவனின் கிசுகிசுக் குரல்.

'' இல்லை...... இது அதுவல்ல'' — அவன் தொடர்ந்து சொன்னான்; மறுத்தான்; ''பேய்களால் மிகவும் நொருக்கப்பட்டுள்ளீர்களென உங்களில் ஒருவன் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். நீங்கள் எல்லோரும் மிகுந்த துன்பம் அநுபவித்து உள்ளீர்கள். எனக்குக் காசு தேவையில்லை.''

உணவு சமைக்கப்பட்டதும் எமது தகரக் குவளைகளை, ஆவி வெளியேறும் சோற்றினால் நிரப்பிக் கொண்டோம். தினைத் தண்டுகளைச் சாப்பிடும் குச்சிகளாகப் பாவித்தோம். பிந்தியோர் தினை வைக்கோல் கிடைக்காமல் கைகளை உபயோகித்தனர்.

''உண்மையிலேயே ருசியாக உள்ளது; ஆனால் உப்பு கொஞ்சம் குறைய''

அந்தப் பல்லு நீண்ட பெண், நாங்கள் சமைத்த போது தங்களுக்காக கோதுமைக் கஞ்சியும் ஒரு சிறிய பானையில் சமைத்திருந்தாள். அத்துடன் மஞ்சள் நிறச் சூப்பும் இருந்தது. அந்த மெலிந்த சிறு பெண்களும் தாய் தகப்பனுடன் சாப்பிட அமர்ந்தனர். ஆனால் தமது மெல்லிய உதடுகளைத் திறந்து மூடியபடி, கள்ளமாக எங்களையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாம் 'சாங் எச்' அருகில் சென்றோம். ''நாங்கள் உங்களுக்கு அதிக சிரமம் கொடுத்து விட்டோம். நீங்கள் காசும் வேண்டாம் எனக் கூறுகிறீர்கள். வாருங்கள் ...... நீங்களும், எமது மூத்த அண்ணியும் குழந்தைகளும் எங்களுடன் சாப்பிடுங்கள்.''

''இல்லை. நீங்கள் என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? பல நாட்களாக நீங்கள், நிம்மதியாக ஒரு நல்ல சாப்பாடு கூடச் சாப்பிடவில்லை. உங்களில் பல பேர் உள்ளதால், அதனை நீங்களே சாப்பிடுங்கள். நான் கஞ்சி குடிப்பேன். இவ்வளவு சம்பிரதாயம் இருக்க வேண்டாம்.''

அவன் கூனிக்கொண்டு எம்மை விட்டு அகன்றான்.

திடீரென ஆகாயவிமானங்கள் வந்தன. அவைகளின் அச்சம்தரும் மோட்டோர்களினது சத்தம், வர வரச் சமீபமாய்க் கேட்டது. எதிரிதுணிச்சலுடனும் பைத்தியக்காரத்தனமாகவும் ஆகாயத்தில் பதிவாகப் பறந்தான். பக்கத்தில் உள்ள மிகச் சிறிய கிராமம் ஒன்றுக்கு, தொன் கணக்கில் குண்டுகளைப் பொழிய அவர்கள் சென்றுகொண்டி

ருந்தனர். அந்தக் கொலைகாரர்களின் உருவங்கள் கூடத்தெளிவற்றதாகத் தெரிந்தன. ஆகாயத்தின் அரைவாசி உயரத்தில் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டது; பூமி அதிர்த்தது!

'சாங் எச்' ஐ அது மிகவும் பயமடையச் செய்தது; இது வேட்டை நாயால் தொடர்ந்து கலைக்கப்படும் இராஜகீரியைப்போல், அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மரணத்தின் பிடியில் இருந்து தப்புவதற்காக, ஆற்றின் பக்கம் நின்ற பெரிய அரளி மரத்தின் அடியில் பதுங்கிக் கொண்டான். அவனது இரு கைகளும் மரத்தின் அடியை, நன்றாக அணைத்துப் பிடித்தபடி இருந்தன. அவனது முகம் முழுமையாக மாறி இருந்தது. ஆகாயவிமானங்கள் சென்ற பின்புங்கூட. அவன் தண்ணீருக்குள் ஒளிந்து கொண்டு, மரத்தின் வேர் ஒன்றைப் பற்றிக்கொண்டிருந்தான்.

ஒருவன் அவனைக் கேலி செய்தபடி கூவினான்; ''ஏய் பயந்த கிராமத்தானே! எல்லாம் முடிந்து விட்டது; வெளியே வா.''

''இந்தக் குண்டுகள் ஐந்து லய் தூரத்தில் விழுந்திருக்கும். அது மிகத்தூரம். பயப்படாதே.''

''பயப்படத் தேவை இல்லையா?''

எம்மை அவன் கலவரத்துடன் பார்த்தான். ''ஒரு குண்டு 20 அல்லது 30 லய் தூரத்தைத் தாக்காதா? நான் நான் கேள்விப்பட்டேன் — ஒரு குண்டு 100 போர் வரை கொல்லும் என்று.

அவனது மனைவியும் வெளியே வந்தாள். அவளும் பேதைமை நிரம்பிய பயத்தினால் அவன் பேசுவதை இடை மறித்துத் திட்டினான் ''அவர்கள் போடும் ஒரு குண்டே மிகப் பெரிய கொடுமைகளைப் புரியும், அங்குள்ள மனிதருக்கு.''

அந்த இரண்டு சிறுமிகளும் அவளது பாவாடையின் நுனிகளைப் பிடித்தபடி, என்ன நடந்தது எனத் தெரியாது பயத்துடன் திகைத்து நின்றனர். அவர்களது பேச்சுத் திசை மாறியது. 'பேய்கள்' எப்படி மனிதர்களைக் கொல்வர் எனவும், அவர்கள் மனிதர்களைப் பிடித்து தமது குதிரைகளின் சேணத்தில் சுற்றிக் கட்டுவர் எனவும், பேசிக்கொண்டனர். ஐந்து அல்லது பத்து மனிதர்களை அதே அளவான எண்ணிக்கை உடைய குதிரைகளில் கட்டியபின், லாயத்தில் இருந்து வெளியே எடுத்து வருவர். ஒரு குண்டு சுடப்படும். பின் பேய்வீரர்கள் தமது குதிரையில் இருந்து கொண்டு, அவற்றைக் கவலை ஏதும் இன்றி உதைப்பர்.

''பெண்கள் பிடிபட்டால்...?''

''நான் சொல்கிறேன் கேள்.'' அதே மனிதனே விளக்கமாவும் டம்பமாகவும் கூறினான்.

''அவர்களின் மனமோ கறுப்பு! அவர்கள் பெண்களைப் பிடித்தால், நல்ல அழகுடையவர்களைத் தெரிவுசெய்து, மரங்களின் அடியில் அழைத்துச்செல்வர். நீ என்ன நடக்கும் என்று நினைக்கிறாய்? பேய்கள் அசையாமலும் நிமிர்ந்தும் ஒரு பலகைபோல் விறைத்து இருப்பர். அவர்களது துப்பாக்கிகள் கைகளில் இருக்க — அவர்களது மீசைகள் விறைத்து நிற்க— மேற்சட்டைகளையும் காற்சட்டைகளையும் கழற்றும் படி, அப்பெண்களிடம் கூறுவர். உத்தரவுக்குப் பணியத் தயங்கினால் பின்புறத்தில் சப்பாத்துக் காலால் உதைவார்கள். இந்த நீல நிற ஆகாயம் அறிய, சூரியன் அறிய,

இது போலவே நடக்கிறது; ஒருத்தி முடிந்தபின் இன்னொருத்தி......''

''சீ ச் சீ...... சீ,........ கொடுமை செய்கின்றனர்.''

வானம் இருண்டபின், புறப்படுவதற்கு ஆயுத்தமாகுமாறு உத்தரவு வந்தது. நாம் எமது பிரதம அணியுடன் அப்போது தான் இணைய முடியும். இத்தகவல் கிடைத்துச் சற்றுப்பின், 'சாங் எச்' என்னைக் கண்டான்.

''கோப்ரல்!''— அவன் குழப்பத்துடன் கூப்பிட்டான்.

''என்ன மாமா! ஏன் இப்பிடிப் பார்க்கிறீர்கள்?''

''அந்தக் கழுதைச் சாணத்தின் மேல் படுக்க முடியாது! எனது கட்டில் இருவருக்கும் போதுமானது சின்னப் பெட்டைகளும் தாயும், அடுப்பின் முன்னால் படுக்க முடியும். அந்தக் கழுதைக்கழிவு ஈரமாகவும் உள்ளது!''

''அன்பின் கிராமத்தவரே, அது தேவையில்லை நாங்கள் இங்கிருந்து போகப் போகிறோம்.''

''போகப் போகிறீர்களா?''

இது அவனுக்குச் சிறிய விஷயமாகத் தெரியவில்லை

''ஏன் போகிறீர்கள்? நீங்கள் ஏன் இவ்வளவு கெதியாகப் புறப்படுகிறீர்கள்?''

அவன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தான். இந்தக் 'கூனல் சாங் எச்' சிடம், நான் உண்மையைக் கூறினேன்.

''நாங்கள் ஒரு குறுகிய நேரத்துக்கே - எமது உடம்பும் கால்களும் ஆறுதல் அடைவதற்காகவே. இங்கு தங்கினோம் எமது பிரதம அணி முன்னால் சென்று கொண்டிருக்கிறது. நாங்கள் அவர்களைப் பிடிக்க வேண்டும். அல்லாவிட்டால் எமது தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடலாம். பின்னால் பேய் வீரர்கள் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது ஆயுதத் தளபாடங்களும் மற்றவைகளும் போதியதாக இல்லை. நாங்கள் விரைவில் எமது பிரதம அணியுடன் இணைந்து விட வேண்டும்.''

இதைக் கூறிய பின்னரே, எவ்வளவு கவனமற்று நான் நடந்து கொண்டு விட்டேன் என்பதை உணர்ந்தேன்.

நான் பின்பு கூறினேன் ''ஆயினும் எமது இன்னோர் அணி, இப்போது எமக்குப் பின்னால் பேய் வீரர்களைத் தடுத்துக் கொண்டிருக்கிறது ''

''அப்படியா?'' என ஆவலுடன் கேட்டான் 'சாங் எச்.'

''அந்தப் பேய் வீரர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். ஓட முடியாத விவசாயிகளாகிய எம்மை விட்டுச் செல்கிறீர்கள். பேய் வீரர்கள் வந்து எல்லாவற்றையும் அழிக்க, ஆண்களைக் குதிரைச் சேணத்தில் கட்டி இழுக்க, பெண்களுக்குக் கொடுமை புரிய, குண்டுகள் போட அநுமதித்துச் செல்கிறீர்கள். நூறு பேர்களுக்கு மேல் துண்டு துண்டாக்கக் கூடிய அந்தக் குண்டுகள் — ஐயோ! அவற்றின் சத்தமோ இடிமுழக்கம் போன்றது ''

அவன், விஷத்தை உட்கொண்டுவிட்ட நாய் விசராகித் திரிவதுபோல் ஆனான்.

நீண்ட பல்லுடைய அவனது மனைவியும் சடுதியாக எமக்கு முன் வந்தாள். அவளின் தோற்றமும் பைத்திய முற்றவள் போல் இருந்தது.

''என்ன? பேய்வீரர்கள் வருகிறார்களா? நாங்கள் எங்கே போவது? எங்க

ளைத் தனியே விட்டு, நீங்கள் எங்கும் போக முடியாது.''

''லோசக்! நீங்கள் போக முடியாது.''

கறுத்த மரக்கை ஒன்று தன்னை அமுக்குவது போல் ஆனான்.

''நீங்கள் போக முடியாது. அப்பிடி நீங்கள் சென்றால், நான் உங்களுடன் வந்துவிடுவேன். எனது சிறுபெண்களின் தாயே, உடனே மூட்டையைக் கட்டு!''

''அவர்களுடன் போவதா? இந்தச் சிறுமிகளினது கதி என்ன? கோதுமை வயல்களின் கதி?''

''நீ போகமாட்டாயா?... பேய்வீரர்கள் வந்தாலும் நீ போக மாட்டாயா?''

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்தப் பதிந்த வீட்டுக்குள் இருந்து பாத்திரங்கள் மோதும் சத்தமும், வேண்டுமென்றே ஏற்படுத்திய ஓசைகளும், பெரிதாகக் கத்துவதும் கேட்டன.

அயலவர்கள் இதனால் கலவரமடைந்தனர்.

''கூனல் 'சாங் எச்' மாமா! என்ன நடக்கிறது?''

''தேடிக் கொள்ளுங்கள் அடைக்கலம் தேடிக் கொள்ளுங்கள். பேய்கள் வருகின்றன. உங்கள் உயிரைக்காப்பாற்றுவது கடினம். எம்மை 'லோசக்' பார்த்துக் கொள்ள மாட்டார்கள். ஆகவே, நான் அவர்களுடன் போகப்போகிறேன்.''

''உனது வீட்டின் கதி என்ன? கோதுமை .....?''

''ஒன்றுமே செய்ய முடியாது. பேய்வீரர்களின் மனமோ இருளானது.''

ஆனால் எம்மால் தாமதிக்க முடியவில்லை! கிராமத்தின் சுற்றாடலில் குதிரைகள் கனைக்கும் சத்தம் கேட்டது. கிராமத்திலும் சிறிய குழப்பநிலை தோன்றியது. நாம் புறப்பட்டுவிட்டோம். எமக்குப்பின் 'சாங் எச்' வருகிறானா என, நாம் கவனிக்கவில்லை.

□ □ □

மூன்று நாட்களின் பின் 'எக்ஸ்' என்னும் பட்டணத்தை அடைந்து எமது பிரதான அணியுடன் இணைந்துவிட்டோம். எமது அணி. 'எக்ஸ்' இல் இருந்து 6 லய் தூரத்தில் கிழக்காக இருந்த ஓர் பண்டகசாலையில் தங்கி இருந்தது.

இம்முறை, நிலைத்து நின்று எதிரியைத் தூரத்தி அடிக்கும்படி உத்தரவு வந்திருந்தது.

திட்டம் தீட்டப்பட்டபின், பண்டகசாலையின் மேறகே மரம் ஒன்றின் மறைவில் இருந்த ஓர் வீட்டில் தங்கி இருந்தோம். கோதுமை வைக்கோலின் மேல் ஒழுங்கற்ற முறையில் படுத்திருந்தோம். சில வீரர்கள் கால்களைக் கழுவுவதிலும் உடை மாற்றிக்கொண்டும், பாடிக்கொண்டும் இருந்தனர்.

''இது தியாகம் செய்யும் போது முடிவெடுக்கும் வேளை...''

□ □ □

ஓர் சிறிய கடையில் இருந்து 'வைன்' கொண்டு வந்து, சிலர் அதனைச் சூழ்ந்து இருந்தனர். பண்டகசாலையின் கிழக்கில் இருந்து அச்சமயம் வேட்டுக்கள் கேட்டன. ஒரு விசேட சேவை லெப்டினன்ட் விசிலைச் சத்தமாக ஊத, எம்மவர்கள் தமது ஆயுதங்களை எடுக்க ஓடினர்.

''என்ன நடக்கிறது?''

''ஓர் ஒற்றன்! விவசாயிபோல் பாசாங்கு செய்கிறான். அவன் கூனல்

முதுகு உடையவானாகிலும் நன்றாகவே இருக்கிறான். காவலாளி அவனைத் தடுக்க, அவன் காலைப் பரப்பி வெளியே ஓடி இருக்கிறான். பா, ஒரே சூடு தான்; அது சரியாகவே அவனில் பாய்ந்தது.''

ஏற்கெனவே ஒற்றன் பிடிபட்டிருந்தான்; நம்மவர்கள் அவனைப் பண்டக சாலைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தனர்.

அவனது முகம் மரண இருளுடன் இருந்தது; உடல் பதற நடந்துகொண்டிருந்தான். அவனது சுங்கான், கழுத்தின் பின்புறம் தொங்கிக்கொண்டு இருந்தது.

''கூனல் சாங் எச் மாமா நீங்களா...!''

என்னைக் கண்டவுடன் அவனது முகம் மலர்ந்தது. அவன் பலமாக அழுதான்.

''கோப்ரல்! காப்பாற்றுங்கள் எனது உயிரைக் காப்பாற்றுங்கள்.''

''இது எப்பிடி நடந்தது? நீ நீங்கள் தானே?''

''கோப்ரல் இது ...''— அவன் தொடங்கினான்

இதற்கிடையே அவன் பெரிய வாகை மரம் ஒன்றின் கீழ் நிறுத்தப்பட்டான். அவனது முகம், வேதனையினால் பல மடிப்புக்களுடன் இருந்தது. அவன் தனது சக்தி அனைத்தையும் கூட்டிப் பேச முற்பட்டான்; ஆனால் பேச்சு தொடர்ச்சியாகவரவில்லை.

''அன்று பின்னேரம் தான்—அந்த ஏழாம் நாள் பின்னேரம் தான் நாம் கிராமத்தில் கழித்த, கடைசிப் பின்னேரம் அந்தக் கறுத்தப் பேய்வீரர்கள் எம்மைத் தொட அனுமதிப்பதில்லை என முடிவு செய்துவிட்டேன்.

எனது மனைவி கூறினாள்: 'கோதுமை வயல்களின் நிலைமை என்ன? இந்த விழப்போகும் வீட்டின் கதி?' நான் சொன்னேன்; 'நீ போக வரமாட்டாயா? பேய்வீரர்கள் வந்த பின், போவாயா மாட்டாயா?' எனது தோளில் தடியில் போட்டு இரண்டு பிள்ளைகளையும் தூக்கினேன். எனது சிறிய பெண்களின் கரைச்சல்களுடன். அவற்றின் தாயும் ஓடி வந்ததை நினைத்துப் பாருங்கள் அன்று மிகவும் இருளாகவும் இருந்தது. நான் பிரதான பாதை வழியிலேயே வந்தேன். ஆயினும் எப்படியோ, என்னால் உங்களைப் பிடிக்க முடியவில்லை. எனது மனைவியால் விரைவாக ஓட முடியவில்லை. பிள்ளைகளின் கரைச்சல்களும் எமது வேகத்தைத் தடைப்படுத்தின. அடுத்தநாள், அதாவது எட்டாவது நாளன்று நாங்கள் 'எக்ஸ்' இலுள்ள சந்தையை அடைந்தோம். நான் கூறினேன்: 'விரைவாக வாருங்கள். அவர்களைப் பிடித்து விடலாம்.' அவள் பிடிவாதமாக அதற்கு மறுத்தாள். 'உயிரே இல்லை. எனது காலுக்குச் சிறிது ஓய்வு கொடுக்க வேண்டும்; சிறிது நீர் வேண்டும்.'

அதுவும் உண்மைதான்; சிறு பெண்களுக்கு வாந்தி பேதி பிடித்திருந்தது. நான் எதுவுமே செய்ய முடியவில்லை. நான் தனியாக சந்தையில் இருந்து வெளியே ஓடி, அருகில் இருந்த அருவியில் எனது முகத்தைக் கழுவினேன்.''

ஒரு நிமிடம் சிறிது பேச்சை நிறுத்தினான். அதன் பின் அவனது பேச்சு அவசரமானதாக இருந்தது.

''ஆ....! விமானங்கள் வந்தன. எல்லோரும் ஓடினர். நான் விரைவாகச் சந்தைக்கு வந்தேன். தாயையும் பிள்ளைகளையும் பார்க்க. விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன ''கங்—கங்—'' என்னால் சந்தையில் இருந்து ஓடவே முடிந்தது. அவை பறந்து

போனபின், நான் திரும்பவும் சந்தைக்குச் சென்றேன்: தாயையும் பிள்ளைகளையும் பார்க்க. அவர்கள்...... ஒரு குவியலாக இறந்திருந்தனர். இறப்பு மிக மோசமாக......... மிக மோசமாக.''

அவனால் அழமுடியவில்லை; ஆனாலும் அழுதான்.

''என்னால் முடிந்தது- வெறுங்கைகளுடன் ஓடவே; என்னால் இனி முடியக் கூடியது — லோசக்குடன் இணைவதே. நான்...... நான் ...''

அவன் தனது கண்களை வேதனையுடன் சுழற்றினான். நேராகத் தொடர்ந்து நிற்கத் தனது இரு கைகளாலும் முயன்றான். அவனது குரல் பரிதாபகரமானதாகவும் கரகரப்பாகவும் இருந்தது.

''நான் லோசக்கை வெறுக்கவில்லை. அந்த இருள்மனம் கொண்ட பேய்களையே வெறுக்கிறேன்! இல்லை...... நான் வீணில் சாகமாட்டேன்.''

அவனது முகத்தில் இருந்து ஒரு சிவப்பு ஒளி வீசியது. அவன் தனது கைகளைப் பிரார்த்தனையுடன் முறையிடுவதுபோல், நீட்டினான்.

''எனக்கும் துவக்கொன்று தாருங்கள்.''

அவனது கண்கள் மீண்டும் சுழன்றன. அவன் மயங்கி விழுந்தான். □□

●　●　●

நவம்பர் 27
1992

# மாவீரர் நாள்

**எம் மண்ணுக்குள் விதையான**

**மாவீரர்களை**

**நினைவு கொள்வோம்.**

சிறுகதை

# வழி

இ. சிவஞானம்

அவனுக்குத் தண்ணி குடிக்க வேணும் போல் இருந்தது. யோசிச்சுப் பார்த்தான். கொஞ்ச நேரத்துக்கு முன் தான் வயிறுமுட்டத் தண்ணி குடிச்ச ஞாபகம். அப்ப பிறகும் ஏன் தண்ணி குடிக்காத மாதிரி, சரியாய்த் தண்ணி விடாய்க்கிற மாதிரி ஒரு உணர்வு?

வானத்திலே நிலவைப்பார்த்தபடி கிடந்தவனுக்கு ஒண்டிலேயும் பிடிப்பில்லாமல, திரும்பி குப்புறப்படுத்தான் - அப்பவும் அவனுக்குத் தண்ணி விடாய்க்கிறமாதிரி...... எதையோ யோசிச்சவனாய் மீண்டும் புரண்டு அந்த நிலவைப் பார்த்தான். நிலவு நல்ல குளிர்மையாய் எறிச்சுக்கொண்டு வழமை போல மௌனமாய் நின்றது. அவனுக்கு குளிர்மையெண்டா அதுவும், நிலவின்ரை அந்தக் குளிர்மை நல்லாய்ப் பிடிக்கும். மற்றது அவன்ரை அம்மா கருவூர்ப்பானையெண்டு சொல்லுற அந்த மண்பானைக்குள்ள தண்ணி அள்ளியந்து, அந்த எலுமிச்சை நிழலுக்கை தென்னம் பொச்சு அடுக்கி, புழுதியால அணைபோட்டு, அதை நல்லா நனைச்சு, அதுக்கு மேலவைச்ச பச்சைத் தண்ணியை, அந்தச் செம்புக்க எடுத்துக் குடிக்கேக்க வாற அந்தக் குளிர்மையெண்டா அதுவும் நல்லாப்பிடிக்கும்.

அவனுக்குக் குளிர்மையில விருப்பமெண்டு தான் ஆரும் சொல்லுவினம். ஆனால் அவனுக்கு 'ஐஸ் கிறீம்' பிடிக்காது. அதைவிட அந்தத் தண்ணி, அந்தச் செம்பால அள்ளி அம்மா பேசப் பேசக் குடிக்கிறது தான் நல்லாப்பிடிக்கும்.

இண்டைக்கும் அப்பிடித்தான். ஒரு முழு நிலவுகாலம். 'நிலவு எவ்வளவு குளிர்மையாய், மென்மையாய் எங்கடை அம்மாவைப் போல' அவன் மனசுக்குள் நினைத்தான்.

'அட அங்கை' அதைச்சுற்றி திட்டுத்திட்டாய், பாளம் பாளமாய், வெள்ளரிப்பழம் பிளந்தமாதிரி எத்தனை வடிவான முகில்க்கூட்டம்.! பார்த்துக்கொண்டிருந்த அவன்ரை கண்களில் திடீரென்று நீர் கசிகிறமாதிரி ஒரு உணர்வு. - அவனிடமிருந்து ஏதோ தொலைந்து போனதுபோல்.

''ஏன் நான் இப்ப கவலைப்படுகிறன். அதுவும் எனக்குப் பிடிச்ச நிலைப் பார்த்து'' தனக்குள்ளே கேட்டுக்கொண்டான். மீண்டும் கண்களை மூடி, சாமி கும்பிடுற குழந்தையைப் போல எதையோ யோசித்தான்.

அவனுக்கு அந்தமுகில்கூட்டத்தை எங்கையோ பார்த்தமாதிரி, ஒரு நினைவு. ஒருக்கா ஆழமாய், நல்லாய் மூச்செடுத்து விட்டான். 'ஓம் அவை எங்கடை பின்வளவு தோட்டத்தில இருந்த கோவாக்கண்டுகளைப் போல வட்டமாய் உருண்டையாய்.....'

'ச்சா' என அலுப்புக்கொட்டிக் கொண்டான். 'இந்த முறை என்ன சோக்கான விளைச்சல். ஐயா சால்வையைத் தலைக்குக் கட்டிக்கொண்டு அதுக்குள்ள நிண்டால், இந்த நிலவைப் போலத்தான் — தூரநிண்டு பாக்கேக்க தெரியும்.' அவனுக்கு இப்ப தன்னிலயே ஆத்திரம் வந்தது. 'ஏன் தான் இப்ப இந்த நிலவைப் பார்க்க வெளிக்கிட்டன். நித்திரையும் வராமல் நிலவையும் பாக்கேலாமல் இந்தக் கோவாத் தோட்டத்தின் மேல் நினைவு வந்து எல்லாத்தையும் குழப்புது.'

அவனுக்கு வயசு கிட்டத்தட்ட இருவத்தினாலு. இருவத்தைஞ்சு இருக்கும். முற்றத்தில படுத்து முழுநிலவைப் பாக்கிற அவனை யாரும் கவிதை எழுதிறவனெண்டு நினைச்சா அது முழுப்பிழை. ஆக, நிலவு எங்கடை அம்மாவைப் போல' குளிர்மையாய் எண்டதைத் தவிர வேறில்லை. ஆனால் நிலவு எப்ப வந்தாலும் அவன் வீட்டு முத்தத்தில தான். கவிதையும் இல்லை. கதையும் இல்லை. அப்ப பின்ன ஏன் நிலவைப் பார்க்கிறான்? அவனுக்கே தெரியாது. அவன் யோசிக்கவில்லை. அவன் அதைப்பற்றி அக்கறைப்படவே இல்லை. அந்த நிலவையும், அந்தச் சேலம் மாவையும், அப்படியே அந்த மண்ணிலே படுக்கிறதையும் நல்லாப் பிடிச்சிருக்கு. அப்ப, காத்து நல்லா வீசுமெண்டுதான் அதில படுக்கிறானோ? அவனுக்குக் காத்தை அவ்வளவாகப் பிடிக்கிறேல்ல. அதின்ரை அந்த இரைச்சலைக் கேட்டாக் கோவம் பொத்திக்கொண்டு வரும். எண்டாலும் மரத்தின்ரை அந்தக் குளிர்மையை அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஏன்?

அவன் தன்ரை பின்வளவு தோட்டத்திலயிருந்து மத்தியானம் வந்ததும், அந்த மண்பானேக்கை தண்ணியெடுத்து வயிறுமுட்டக் குடிப்பான். பிறகு, அப்படியே வந்து சேலம் மாவுக்குள்ள ஒரு துணியை உதறி முதுகுக்குப் போட்டிட்டு அப்பிடியேசாய்வான். ஒரு மணித்தியாலத்துக்குக் கிட்ட அப்பிடிக் கழிய, அலுப்புத்தீர உசாரோட எழும்பிக் குளிக்கப் போவான்.

அந்தப் பெரிய வாளியில தண்ணியைக் கோலி ஆரச்சோர அள்ளியள்ளிக் குளிப்பான் மேல்த்தண்ணிக் கிணறு. நல்ல வசதி அதில் குளிப்பதும் அவனுக்குப் பிடிக்கும். ஆனால் இப்ப நாலைஞ்சு நாளாய் ..... நினைச்சவனுக்கு ஒரு அரியண்டமான நினைப்பாய் அது உபத்திரப்படுத்த, நிலவை வெறிச்சுப் பார்த்தான்.

குளிச்சிட்டு சாப்பிட வந்தால் அம்மா பெரிய கோப்பையில - அவனுக்கு மட்டுமெண்டு அம்மா வச்சிருக்கிற அந்தப் பெரிய கோப்பையில — சோறு நிறையப் போட்டு, கறியளோடை உப்புமிளகாயும் பொரிச்சு வைச்சிருப்பா அம்மாவுக்கு ஒடியல் பிட்டு என்றால் உயிர். ஆனால் அவனுக்கு அது அவ்வளவாய்ப் பிடிக்கிறேல்ல. சாப்பிடேக்கை ஆரும் கதைச்சா - அம்மாவெண்டாலும்-சாப்பிடப் பிடிக்காது கோப்பை நிறைய சோறும் இருக்கவேணும். இடையில போட்டால் அவனுக்கு கோவம் வருமெண்டு அம்மாவுக்குத் தெரியும். சப்

பாணிகட்டி இருக்க அவனுக்குப் பஞ்சி. அவனுக்காக அம்மா ஒரு கொஞ்சம் உயரமான பலகைக்கட்டை வைச்சிருந்து. அவன் வந்ததும் எடுத்துப் போடுவா. அதிலே இருந்து கொண்டு கையில கோப்பையை ஏந்தினபடி தான் சாப்பிடுவான். சாப்பிடேக்கை அம்மா முன்னாலை இருந்து அவனைப் பாத்துக்கொண்டிருப்பா. அப்பிடி இல்லையெண்டா அண்டைக்கு அவன் அரை வயிறுதான்.

மாமி வீட்டுக் குசினி அறை முன்னால தெரிய நிலவைப் பாக்கிறதை விடுத்து தூரத்தே பாத்தான். அந்த சேலன் மா இல்லை. எலுமிச்சையும். அதுக்குக்கீழ கிடக்கிற பானையும் தண்ணியும் அந்தப் பின்வளவு கோவாத் தோட்டமும், அவன்ரை கிணறும் பெரிய வாளியும் அந்தப் பலகைக்கட்டையும், பெரிய கோப்பையும்...... ஒண்டையும் காணேல்லை. அதாலை வந்த அரியண்டத்தை, ஆத்திரத்தைத் தாங்க ஏலாமல் அவன்ரை நிலவைக் கூட பாராமல் என்னவோ சோர்வோடை... கோவாத் தோட்டத்தில நாள் முழுக்க உழைச்சும் இல்லாத சோர்வோடை, புரண்டு படுத்து, மீண்டும் அந்த நிலவை வெறிச்சுப்பார்த்தான்.

''ஏன் தம்பி. வாரும். வந்து உள்ளுக்குப்படும் - சிச்சி! ஆரும், நீர் முத்தத்தில படுக்கிறதைப் பார்த்தாலும். அங்க அந்த முன்னறை உமக்குத் தானே. நல்ல கட்டில் மெத்தையெல்லாம் போட்டிருக்கு'' என்றா மாமி. மாமியைப்பாக்கப்பரிதாபமாயிருந்தது. நல்லா ஆதரிக்குது மனுசி. ஆனால் அவனுக்கு அந்த அழைப்பு அதை விட்டு எங்கையாவது ஓடவேணும் போல .. அவ்வளவுக்கு ஏதோ வெறுப்பு' பேசாமல், தாயைப் பாத்தபடி எழும்பி அறைக்கு வந்து கட்டிலில் 'தொம்' மெண்டு விழுந்து கண்களை இறுக மூடினான். அவனுக்குத் தன்ரைவீடும், கிணறும், தோட்டமும், அந்த மாவும் அதோடு படுத்திருந்த தானும், அந்த நிலவும் மனதில் மாறி மாறி வந்து கொண்டிருந்தன-நித்திரையைத் தவிர.

'தம்பி நித்தைரையாப் போனியோ' கேட்டவாறு வந்த அம்மா ''உன்ரை தம்பியெல்ல கடிதம் போட்டிருக்கிறான்! என்றா.

கனநாளாய் கடிதம் காணாத ஆவலில் இருந்த அம்மா, இரண்டாம் முறையோ மூண்டாம் முறையோ இவனுக்குச் சொன்னா. ஆவலோடு வாசிக்கத் தொடங்கி. ஒழுங்காப்படித்த அம்மாவின் குரல் இடையில் சுருங்கியது.

''... அம்மா இங்கேயும் பிரச்சினை தான். இந்தியாவில இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்பத் தொடங்கினதுக்குப் பிறகு, சுவிசும் அனுப்ப முயற்சிக்கிறது இங்கை எல்லாரும் என்ன செய்யிறதெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கினம். இங்கை இருந்து, அனுப்பிறதுக்கு முதல் வர யோசிக்கிறன் ஊருக்கு வாறதை நினைச்சவுடனை இப்பவே வெளிக்கிடவேணும் போலிருக்கு. புளியடிச் சந்தியும். அரசடிப் பாலமும் அதோடை அண்டின குளமும், வயல்களும், விதைப்பும், காவலும் வேட்டையும்... நினைவுக்கு வருகுது. என்னதான் இருந்தாலும் எங்கட ஊர் திறந்தானம்மா அதிருக்க, நீங்களும் இப்ப ஊரைவிட்டு இடம்பெயர்ந்து மாமிவீட்டில இருக்கிறதாய் எழுதியிருந்தியள். உங்களுக்கு எல்லா வசதிகளும் ...'' என்று வாசித்துக்கொண்டிருந்தா அம்மா. ஆனால் அவனுக்குத் தொடர்ந்து ஒண்டும் ஏறவில்லை.

'வீடும் நாடும் ஒவ்வொருவருக்கும் உரிமையாய் இருக்கோணும். எல்லாம் தனக்குத் தனக்கெண்டு இல்லாத வரை .....' எண்டு நினைத்தவனுக்கு நிலவைப் பாக்கவேணும் போலிருந்தது. வெளியே வந்து நிமிர்ந்தான். ☐

சிறுகதை

செம்பியன் செல்வன்

# கால—|—மை = காலமை

ஹோல்சர் கட்டிய நெஞ்சும் துப்பாக்கி ஏந்திய கரங்களுமாக, அவர்கள் 'தப தப'வென வாகனத்திலிருந்து குதித்தார்கள். 'அடிபாட்டுக்கு'ப் போக அனுமதிபெற எவ்வளவு அடிபட்டிருப்பார்கள்? சந்தர்ப்பம் கிடைத்த மகிழ்ச்சி அவர்கள் முகங்களில் படர்ந்திருந்தது. மெல்லிய குளிரான கடற்காற்று மேனியைத் தடவிச் சென்றது.

இடிந்து நிலைகுலைந்து போன கட்டிடங்களும் .. மனித நடமாட்டம் அற்ற தெருக்களும்......கதவோ, யன்னல்களோ காணாமற்போன... ஓடுகள் சரிய 'ஓ'வென அலறிக்கொண்டிருக்கும் வீடுகளும்·· பூநாறிப் பற்றைகளும்... வெள்ளெருக்குக் குத்துப்புதர்களும் ...பேய் வெள்ளரிக் கொடிகளுமாக நகரத்தின் நகரமான அப்பகுதி அருண்டு கிடந்தது. அவன் 'நெஞ்சினில் நெருப்பாக' எதுவோ பற்றி எரிந்தது.

*யாரோ... எங்கோ... எப்போதோ...*
*யாரோடோ செய்து கொண்ட*
*தவறுகளின் விளைவுகளா - இவை?*
*எம் சந்ததியினரை வஞ்சித்தவர்கள்*
*யார்?...*
*ம்... பரவாயில்லை... எல்லாவற்றிற்*
*கும் பதிலடி நாம் கொடுப்போம்*
*இதைவிட 'அப்பனான' ஒரு நகரை*
*அமைத்துக் காட்டுவம்... பழைய*
*வீட்டை அழித்துப் புதுவீடுகட்டு*
*வதைப் போல அவர்கள் அழிக்கிற*
*பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும்..*
*நாங்கள் புதிது புதிதாக ஆக்குவம்...*

அவர்களை இறக்கி விட்ட வாகனம் பேரிரைச்சலோடு உறுமிய படி விரைந்து போனது. அது புழுதியைக் கிளப்பிக் கொண்டு கரையிலிருந்து மறையும் வரை பார்த்தான். கழுகுக்கு மூக்கில் வியர்ப்பதுபோல் திடீரென

அவர்களுக்கு மேலாக 'தும்பி' ஒன்று பறந்து போனது. தொடர்ந்து 'கோள் மூட்டிப் பிளேன்' என்று சிறுவர்களால் எள்ளிநகையாடப்படும் 'சீ. பிளேன் பெரிய வட்டமடித்தது; இனிநிச்சயம் 'பொமரோ'... சகடையோ அல்லது இரண்டுமோ கட்டாயம் வரும்.

'எல்லோரும் கட்டிடத்துக்குள் ஓடுங்கள்!' - கட்டளைக்குரல் ஓய்வதற்கு முன் அவர்கள் அனைவரும் கட்டிடத்திற்குள் புகுந்திருந்தனர். சில மணித்துளிகளில் மூன்று பொம்மர்கள்-குண்டு வீச்சு விமானங்கள் இலக்குத் தெரியாமலோ, வீசத்தெரியாமலோ வழக்கம் போல கண்மூடித்தனமாக குண்டுகளை வாரிக் கொட்டத் தொடங்கின.

அந்த இடைவெளி நேரத்தில் தான் அவன் தாங்கள் வந்திருந்த கட்டிடத்தை அவதானித்தான்,

எட! .. இது ரெஸ்ட்கவுஸல்லவா?

'என்ன மச்சான்! கோட்டை அடிபாட்டுக்கெண்டு கூட்டி வந்து, இங்க ..' - என்று காதிற்குள் 'கிசுகிசு' க்கும் ஜெகனை மெல்லத் திரும்பிப் பார்த்தான். ஏ. கே 47 ஐப்பற்றியிருந்த அவன் கரங்கள் துடிப்பது தெரிந்தது.

'அவசரப்படாத... கொஞ்சம் பொறு... போராளிக்குப் பதட்டம் கூடாது... நிதானம் மிக மிகமுக்கியம் எண்டு சொல்லித்தந்ததை நீ அடிக்கடி மறந்து போகிறாய் ..' - என்று நட்புரிமையுடன் அதட்டினான். அவன் கண்கள் யன்னலினூடாக வெளியே வெறித்தது.

யூடிசி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு, இன்று மாநகரசபை என்று அழைக்கப்பட்ட அந்தக் கட்டிடம் தரையோடு தரையாக

*'இந்தக் கட்டிட மேடையிலே தான் காலம் காலமாக எத்தனை எத்தனை அரசியல் கூட்டங்கள் நடந்தன... தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதாகக் கூறிய வாக்குறுதிகள் எத்தனை? எத்தனை? .. அந்தத் தலைவர்கள் எவ்வளவு மெத்தனமாக இருந்தார்கள்... வாக்குறுதிகளைப் பறக்க விட்டார்கள் .. அல்லது சிங்கள அரசு அவர்களுக்கு வழங்கிய சலுகைகளில் மயங்கிப் போனார்கள் ...... அதன் விளைவு...? ஜெகன் போன்ற இளைஞர்கள் உருவானதுதான்.*

'எல்லோரும் பங்கருக்குள் இறங்குங்கள்.!'

அப்போதுதான் அது அவர்கள் கண்ணில் பட்டது. அறையின் சுவரோரமாக கீழ் நோக்கி படிவரிசையமைத்து...

ஓ!... ஆச்சரியத்தால் விழிகள் அகலத்திறந்தன. ஜெகன் துள்ளி எழுந்தான்.

தூரத்தே அவர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த கோட்டை, வெட்டை வெளியினுக்கு அப்பால் தோற்றம் கொண்டிருக்க, நேராகக் கோட்டையைச் சமீபிக்க முடியாது. திறந்த வெளியென நிலம் விரிந்து பரந்து கிடந்தது. மெல்லிய அசைவும்... தலைக் கறுப்பும் கூட கோட்டையின் மதில்களின் பின்னால் இருக்கும் சினைப்பர்களைப் பேசவைக்கும்.

பங்கருக்குள்ளே இறங்கி நடக்க நடக்க... அவன் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. உள்ளே .. அழகான பாதை ...... காற்றோட்ட வசதி... வெளிச்ச வசதி...

*'மின்சார டிரான்ஸ் போமர்களை அழித்து மின்சாரக் கம்பங்களைச் சாய்த்தீர்களே .. எரிபொருள்களைத்*

தடை செய்தீர்களே..கேவலம் நெருப் புப் பெட்டியைக் கூடத் தடைசெய் தீர்களே... நகரை இருளில் மூழ்க டித்து என்ன பலனைக் கண்டீர் கள்? பொது மக்களின் வெறுப் பைச் சம்பாதித்ததைவிட வேறென்ன?

எல்லாம் எங்கள் இளைஞர்களின் ஆற்றல்... அறிவு... ஆக்கம்.. அவர் கள் நெஞ்சம் அப்போதே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கி விட் டன. வழியெலாம் அவர்களையொத்த விடுதலை வீரர்கள்... இவர்களை நட் புடன்... கனிவுடன்... நோக்கினார் கள். மறுவினாடி அவர்கள் தத்தம் கடமையிலீடுபடலாயினர்.

'கோட்டையைக் கைப்பற்றியே தீருவோம்.' என்பதான உறுதிமுகத் தில் தெறித்தது. பாதை வளைந்து வளைந்து பல பிரிவுகளாகப் பிரிந்து.. பிரிந்து..

*'நாளை இவர்கள் உருவாக்கும் நாடும் சமுதாயமும் இப்படித்தான் சீராக ஒழுங்காக... இருக்கும் பழையபெருச்சாளிகளின் வளைகளை நாங்களே உடைத்தெறியவேண்டும்.. அந்த வளைகளை எங்கள் எதிரியே உடைத்தெறிந்து உதவுகிறான், நாளை மலரும் சுதந்திர பூமியில் இந் தப் பழைய பெருச்சாளிகளின் எச் சங்களோ... முடை நாற்றங்களோ நிச்சயம் வீசமாட்டா...*

'முரளி! ஜெகன்... விசித்திரன், கலாமணி நீங்கள் இங்க நில்லுங்க..'

இவர்கள் நிற்க மற்றவர்கள் அவர் களைக் கடந்து சென்றார்கள். அவர் களை நோக்கி அங்கிருந்தவர்களில் ஒருவன் வந்தான். தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

'நீங்கள் வருகிறியள் எண்டு முன்பே தகவல் வந்திட்டுது.. உங்க ளுக்காகத்தான் காத்திருக்கிறோம்... இவர்கள் நன்றாகக் களைத்துப் போனார்கள் இவர்கள் இடத்துக்கு நீங்கள் போய் இவர்களை விடுவியுங் கள்..'

ஜெகன் ஆவலுடன் அந்த இடத்தை நோக்கி ஓடினான்.

'கொஞ்சம் நில்லுங்கள்... அவச ரம் கூடாது... எதிரி கண் மண்தெரி யாமல் அடிக்கிறான் எங்களுக்கு எதிலும் அநாவசிய இழப்பு இருக்கக் கூடாது.. உயிர்.. ஏன் ஆயுதத்திலும் இழப்பு கூடாது... கவனம்...'

ஜெகன் தன்துப்பாக்கியை மார் பில் அணைத்துக் கொண்டு கூவினான்.

'என் உயிரை இழந்தாலும் இழப் பேனேயொழிய ஆயுதத்தை இழக்க மாட்டேன்...'

'அதுவல்ல விசயம்.. எதிரிக்கு வான் வெளியாலும் ஆயுதம் வருகுது போல... ஆகவே தாறுமாறாக அடிக் கிறான். நாங்கள் எதனையும் கணக் கிட்டுத்தான் சுடவேண்டும்... அதோட அவன்ர, சினைப்பர் எந்த நேரம் வெடிக்குமெண்டு சொல்லேலாது... கவனமாக இருங்கள்... அதேபோல கோட்டை மதிலுக்கு மேலாக எது வும் தெரிந்தால் தயங்காமல் வெடி வையுங்கள்...?

பங்கருக்குள்ளிருந்து தமது இலக் குகளை ஒழுங்கு படுத்திக் கொண் டார்கள்... நீண்ட மௌனம் சலிப்பை ஏற்படுத்தியது. மெதுவாக பங்க ருக்கு மேலாகத் தலையை உயர்த்தி னான். இடமிருந்து வலமாக மெது வாகத் தலையைத் திருப்பினான். நீலக் கடல்... பண்ணைக்கடல் கண்ணில் பளீரென அடித்தது... முன்பு கடலை மறைத்திருந்த யாழ் மாநகரசபை

மண்டபம் தரைமட்டமாகிய பின் கடல் குதூகலிப்பது தெரிந்தது..

*அந்தக் கடலுக்கு அப்பால் தான் எதிரி முகாம் இறக்கியிருக்கிறான். கடலில் அவன் இறங்கும் போது நிச்சயம் கண்ணில் பட்டே தீரவேண்டும்*

பக்கத்திலிருந்த புதிய கட்டிடமான பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயம் தகர்க்கப்பட்டு, பழங்கிழவியின் ஆற்றாமையாய்ப் புலம்பிக் கொண்டிருக்க, விழுப்புண் பலபெற்ற விளையாட்டரங்கு வெறுமையில் குளித்துக்கொண்டிருந்தது. அந்த மைதானத்தில் அரங்கிற்கும் கோட்டைக்கும் இடையே சில புல்டோசர்கள் புதைந்து போயிருக்க... நூலகம் கண்களில் பட்டது...

*தென்கிழாசியாவின் உன்னதமான முதல் தர நூலகம். வெளிநாட்டுத் தூதுவர் சொல்லிப்போன வார்த்தைகள் கூட காற்றில் வலுவிழந்து போகவில்லை. ஆனால் அதற்குள்.. நூலகம் எரியுண்டது. தொண்ணூற்றாறாயிரம் நூல்கள் கருகிச் சாம்பலாக, தமிழ மாணவர்களின் கல்வியிலும் பெருந் தீபரவியதா? தமிழீழ மாணவனே என்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்களைப் பழிக்குப் பழி வாங்கு...*

அவன் ஒரு புத்தகப் பிரியன். அவனுக்கு நூலகத்தைப் பார்க்கப் பார்க்க நெஞ்சம் விம்மியது. ஒரு கணம் நிலை குலைந்தான்.

'உஷ்யக்..' சினைப்பரின் குண்டு ஒன்று அவன் தலைக்குமேலால் உரசிக் கொண்டு போனது. நல்லவேளை அவசரம் அவசரமாகத் தலையை உள்ளிழுத்துக் கொண்டான்.

'எளிய நாய்கள்!..' - ஜெகனின் துப்பாக்கிவெடித்தது.அது எதிர்த்தரப்பில் ஏதோ விளைவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சில நிமிட தாமதத்தின் பின் அங்கிருந்து வெடியோசை கழாயிற்று. அவர்கள் தமது வெடி மருந்துகளையும், ரவைகளையும் வாரி யிறைத்தனர்.

''மச்சான்... உவங்களுக்கு கையில ஆயுதம் இருக்கிற திமிரிலதான் எதனையும் செய்யிறவங்கள்.. மச்சான் முதலிக்குளத்தில அரை நூற்றாண்டுக்கு மேலாக குடியிருந்த எங்களை.. எங்களைப் போன்ற தமிழ்மக்களை எத்தனை முறை ஓட ஓட விரட்டியிருப்பாங்கள் தெரியுமே அப்பா சொல்வார் அம்பத்தெட்டில சிங்களக் காடையர் வந்து துரத்தியடிக்க, தாங்கள் காட்டுக்குள் ஓடி, தஞ்சம் புகுந்ததாக. என்ர காலத்திலும் எழுபத்தேழு, எண்பத்திமூன்றுகளிலும் காட்டுக்கைதான் ஓடினம்... அப்ப எல்லாம் அவங்கட கையில ஆயுதமிருந்துது மச்சான்... இப்ப என்ர கையிலும் ஆயுதம் இருக்கு. இனி ஒருக்கா எங்கட கிராமத்துக்க இவங்கள் வந்து போகட்டுமன்... நான் ஒருவன் மட்டும் அவங்களுக்குப் பதில் சொல்லுவன் '

'மச்சான்! நீமுந்தி மாதிரி தனியாள் இல்லை. உனது சுற்றம் பெரியது.. உன்னைத் தனிய போக விடுவமா? உனக்கு முன்னால நாங்கள் அங்க நிப்பம். என்ன விசர்க்கதை பேசிறம்.. நாங்கள் தமிழீழம் பெறும் பொழுது முதலிக்குளத்தில சிங்களவன் இருப்பானே?

'அதுவும் சரிதான் மச்சான்...... பயிற்றப்பட்ட இராணுவமும், பொலீசும் இருநூறுக்கு மேற்பட்டவங்கள் கோட்டைக்குள்ள ஆயுதங்களோட நிக்கிறாங்கள் வெளிய வரப்பயப்பிடுறாங்கள்...'

ஹெலியும் பொமரும் வானத்திலே தென்பட்டன. இவர்கள் தயாராகி னார்கள். சற்று நேரத்தில் இரண்டு அவ்ரோ விமானங்கள் வட்டமிடத் தொடங்கின.

'சாப்பாடு போட வந்திருக்கிறாங்கள். சாப்பாடு கிடைக்கச் செய்யக் கூடாது... பசி தாகத்தால தவித்துப் போக வேண்டும்.. இதால அவர்களுக்குள்ளயே அடிபிடி நடக்கத் தொடங்கும்... அரசுக்கும் நெருக்குவாரம் தொடங்கும். சிங்கள மக்களும் எங்கட போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குவினம்...'

'அதுமட்டுமல்ல மச்சான்... உந்தப் பொட்டலங்களுக்குள்ள ஆயுதங்களோ ... வெடி மருந்துகளோ கூட இருக்கலாம் எண்டு கதைச்சதை மறந்து போனீயா?...'

'படபட ...... பட் ...... பட்'

விமானம் வேகமாக மேலெழ முதல் பொட்டலம் பண்ணைக் கடலுக்குள் விழுகிறது...

பொம்மர் ஒன்று அவசரம் அவசரமாக குண்டுகளைப் போடத்தொடங்கியது.

எங்கும் ஒரே வெடிச்சத்தங்கள் ... புகை மண்டலங்கள் .. குழிகள் பறிக்கின்றன... எல்லாவற்றையும் மீறி உணவுப் பொட்டலங்கள் விழுகின்றன. ஒன்று இரண்டு மூன்று இல்லை யில்லை . கோட்டைக்கு வெளியில...

'பட்பட்... பட்... பட் '

குண்டு வீச்சு விமானமும் மூர்க்கமாக, குத்தாக கீழிறங்குவதும்... குண்டு பொழிவதும் . மேலெழுவதும்.

விமானம் வேகமாக வருகிறது. இங்கிருந்து யாரோ 50 கலிபரை அடிக்கிறார்கள்... அது குண்டினை வீச .. எங்கோ விழுகிறது... ஜெகனினதும், இவனினதும்துப்பாக்கிகள்ரவைகளை வேகமாகத்துப்புகின்றன. விமானம்உயர்ந்து பெரிதாக வட்டமடிக்கிறது.மீண்டும் அது அவர்கள் பங்கர் பக்கமாக வேகமாக வருகையில், அதனை எதிர்கொள்வது போல் இவர்கள் பங்கருக்கு மேலால் தலையை உயர்த்தி வெடிவைக்கிறார்கள்... நாலாபுறமும் ரவைகள் சொரிகின்றன .. விமானம் குண்டைப்போட்டுவிட்டு கரும்புகையைக்கக்கிக்கொண்டு மண்டைதீவுப்பக்கமாக கடலை நோக்கிப் போகிறது .. எங்கும் வெற்றிக் களிப்பு எழுகிறது...

திடீரென புங்கரில் பரபரப்பு எழுகிறது...

ஜெகன் எங்கே? .. எங்கே காணவில்லையே

'அதோ!... அதோ!... அங்கே ..... யாரோ விழுந்து கிடக்கிறது போல

நூறுயார் தூரத்துக்கு முன் விளையாட்டரங்குக் கட்டடத்திற்கு முன்னால், புதைந்திருந்த புல்டோசர் வாகனத்திற்குமிடையில் யாரோ குப்புற விழுந்து கிடந்தார்கள். ஒரு கையில் ஆயுதம் தெரிந்தது.

இவனுக்கு நெஞ்சம் வெடித்து விடும் போலிருந்தது. எதிரே பார்த்தான். கொஞ்சநேரத்திற்கு முன் தன் முன்னால் இருந்தவனின் இருக்கை வெறுமையாகக் காட்சியளித்தது,

வானிலே சந்திரன் காலிக்கத் தொடங்கினான். முன் நிலவில் ஜெகனின் சடலமும், அந்தப் பெட்டியும்...

'உன்னைத்தனிய போகவிடுவமா? என்று கூறிவிட்டு இப்படியிருக்கிறோமே...' - நெஞ்சம் அலறியது. ஆனால் எங்கும் அமைதி. ஆ' . இதென்ன? எங்கிருந்து இந்த நாய்கள் வந்தன... இதெல்லாம் வழக்கமான நிகழ்ச்சிகளே . இந்த நாய்கள் ஓடி

வருவது உணவுக்காகவா .. அவனுக்காகவா...

கூடாது... கூடாது... என் நண்பனை அவை தீண்ட விடமாட்டேன் அவன் துப்பாக்கி படபடத்தது ஓரிரு நாய்கள் சுருண்டு விழுந்தன. மற்றவை வெருண்டோடின. இவனை நோக்கி இவன் நண்பர்கள் ஓடிவந்தனர்.

'ஜெகனை மீட்க வேண்டும்... அவன் அப்படி அநாதையாகக் கிடக்கக் கூடாது .. அவனை நாய்கள் கடித்துக் குதற விடமாட்டன்...' அலறினான். 'நாளை காகங்கள் கண்களை ... குடலை தோண்டலாமே!...'

'இந்த இழப்புகளுக்காக நாம் கலங்கக்கூடாது. எமது கலக்கம் எதிரியைப் பலப்படுத்தும்... நாம் நிச்சயம் ஜெகனை மீட்போம்... இப்பயில்லை .. நேரமிருக்கு முன்நிலவு நேரத்தில எங்கள எதிரி காத்துக் கொண்டிருப்பான்... நீ இருட்டும் வரை காத்திரு இருளோடு இருளாக அவனைக் கொண்டு வரவேண்டும்... சிலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்...'

நானும் அவர்களோடு போய்...'

அவன் இரஞ்சினான்.

சரி!...

அவர்கள் பின்னிருட்டு வரும் வரை காத்திருந்தனர்.

அவ்வப்போது பரா வெளிச்சம் அவர்களைத்தாண்டிச் சென்றது. அவர்கள் தரையோடு தரையாக .. குண்டுகள் விழுந்து பறித்த குழிகளில்... மைதானத்தில் பற்றை பற்றிக் கிடந்த குத்துச்செடிகளில்... மறைவு கொண்டு முழங்கைகளால் நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் கரங்களில் துப்பாக்கிகள்...

பராவெளிச்சம் தங்களைத் தாண்டிச் செல்ல எடுக்கும் நேரத்தை புறப்படு முன்னரே கணக்கிட்டிருந்தனர். அந்த நேர இடைவெளியை மனதில் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தனர். எதிரியும் இவர்களது ஆற்றலில் அதிக நம்பிக்கை கொண்டவன் . ஆதலால் அடிக்கடி ஜெகன் கிடந்த இடத்தை நோக்கி .. அவ்வப்போது வெடிகளைத் தீர்த்துக் கொண்டிருந்தான். ஆனால் புறப்படும் பொழுதே மிகக் கடுமையான கட்டளை. இயன்றவரை துப்பாக்கியைப் பயன்படுத்தக் கூடாது. அவர்கள் ஜெகனின் சடலத்தை நெருங்கியபோது மிகவும் களைத்துப் போயிருந்தனர்.

ஜெகன் குப்புற விழுந்து கிடந்தான்

இவன் அவனை தனது முதுகிலேற்றிக் கொண்டான். மீண்டும் ஊர்த்துவ இயக்கம். குண்டுகள் பறித்த குழிகள் பாதுகாப்பாக இருந்த வேளை அவையே பயணத்திற்கும் தடையாக இருந்தன.

பங்கரில் ஜெகனைக் கொண்டுவந்து கிடத்தினார்கள். அவன்மல்லாந்து கிடந்தான். அவன் முகத்தில் மண்பட்டிருந்தாலும், உதடுகளில் மண்ணை முத்தமிட்டது போல் அப்பிக் கிடந்தது. வலதுகரத்தில் அவன் தாங்கிய ஏ. கே47 ஐ அப்போதுதான் கவனித்தார்கள். அவன் கையிலிருந்து அது அகற்றப்படாமலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஜெகன் அவன் வலதுகரத்தைப் பிரித்து துப்பாக்கியை எடுக்க முனைந்தான். அசைக்கமுடியவில்லை.

விரல்கள் அழுங்குப்பிடியாக மரத்து விறைத்துப் போய்... மறுகரத்தைப் பார்த்தார்கள். அதுவும் இறுக மூடியிருந்தது. அதைப்பலம் கொண்டமட்டும் பிரித்தபோது...

கையிலிருந்து மண் உதிர்ந்தது

□□

# விடுதலைக்கு அதிக விலைகொடுத்த ஒரு தாயின் கடிதம்

**கடிதம்**

☐ காயமடைந்து வரும் விடுதலைப்புலிகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஒரு பெண் டாக்டருக்கு, ஒரு தாயினால் எழுதப்பட்ட கடிதம் இது.

☐ இத்தாயின் ஆண்பிள்ளைகள் இருவர் இந்திய இராணுவத்துடன் நின்ற தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

☐ மகள் ஒருத்தி விடுதலைப்புலியாகி மாங்குளம் இராணுவமுகம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தாள்.

☐ இன்னொரு மகன் இப்பொழுது விடுதலைப்புலிகளில் ஒருவனாகக் களத்திலே நிற்கின்றான்.

☐ இத்தனைக்குப் பின்னும், அத்தாயின் உணர்வுகள் இவை.

**என் அன்புத் தமிழ் திருத் தாயே!**

தான் தாய் ஆகா விட்டாலும் தாய் மண்ணைக் காத்திட இத் தவத்தாள் பெற்ற தவச்செல்வங்களை தன் மக்கள் என்று அரவணைத்து, அன்பு காட்டி, தன் இனம் படும் கோரக் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்த வீரக் குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்திலே அந்தப் புனிதமான தாய்மையின் தூய்மையைக் காட்டி, அவர்கள் நெஞ்சத்திலே வித்திட்ட வீரக் கடமை நோக்கும் பாதைக்கு வழி காட்டி, மைந்தர் நெஞ்சிலே வஞ்சினமும் உள்ளத்தில் உறுதியும், கைகளில் வீர வெற்றியின் கணைகளையும் கொடுத்து போருக்கு சென்று, போர்க் களத்தில் பகைவர்களை வென்று, உன் வீரக் கோபத்தின் தாகம் தீர சென்று வருவாய் என வீரத் திலகம் நெற்றியில் இட்டு, தன் பிள்ளைகளின் ஆட்டத்தின் மத்தியில் எதிரிகளின் சூடு பட்டு சுதந்திரக் காயங்களை சுமந்து சோரவடையாச் செல்வங்களின் பூ உடல்களில் பட்ட வீரத் தழும்புகளைத் தன் கைகளால் வருடி, தலை சாயாத் தமிழ் மகனை தலை நிமிர வைத்து போரின் தொடரை ஆடி வா என வழி அனுப்பி விட்டு வீர வெற்றி மாலை சூடி விரைந்தோடி வரும் மகனை எதிர் பார்த்து காத்திருக்கும் தாய்க் குலமே,

ஆண்டாண்டு காலமாக அவதியுற்று அல்லல் பட்ட தமிழினம், தாண்டவமாடும் மனித அட்டூழியங்களால் தாக்குப் பட்டு, அந்தக் கொடுமைகளின்றும் தாண்டி வாழ தன் நாடு, தன் சுதந்திரம், என்ற இலக்கை நோக்காய் வைத்து புறப்பட்ட வீரர்கள் வரிசையில் என் மகனும் ஒருவன் என்பதில் பெருமைப் படுகிறேன்.

ஆயிரம் ஆயிரம் அருந்தவச் சொத்துகளை அள்ளித் தந்த பூமி இது. அன்னையிவள் தன்னை மீட்க அள்ளித் தெளித்த முத்துக்கள். முத்துக்களின் சிந்தையிலே மூண்ட விடுதலைத் தீ தாயவள் மீளாக் கோபக் கனல். அந்தத் தமிழ்த் தாயின் கோப ஆவேசம் தணிந்து தான் மூட்டிய தீயால் வெந்து கொண்ட இத்தனை மலர்களாலும் சமாதானம் அடைந்து தான புனிதமடைந்து கொண்ட திருப்தியில், அன்னையவள் தன்னைக் காக்கத் துணிந்த வீரர்களின் எண்ணச் சாதனையை நிறைவேற்றி. அவர்கள் ஏக்கமான அந்தத் தாயகம் மலர தாயகத்தை வென்றெடுத்த வேங்கைகளின் சின்னக் கொடி ஈழத்தில் பறக்க, தமிழ் ஈழம் சுதந்திரம் அடைந்து விட்டது; எனப் பேசும் காலம் அதிக தூரமில்லை. ☐☐

நெஞ்சில் நிறைந்தவர்களை நினைவில் நீடித்துவைக்க

ஞானம்ஸ் ஸ்ரூடியோ

புகைப்பட சேவையில் நீண்ட காலங்களில்...
ஞாபகச் சின்னமாய்
கறுப்பு வெள்ளை, கலர் படங்களை எல்லா அளவுகளிலும்,
எக்காலமும், எவரும் வியக்கும் விதத்தில்
கலைத்துவத்தில் தருவது "ஞானம்ஸ்",
யாழ்ப்பாணத்தில் "ஞானம்ஸ்" ஒரு
புகைப்படக் கலைக் கூடம்

ஞானம்ஸ்
ஸ்ரூடியோ
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## "வெளிச்சம்"

எங்களுடைய காலத்தை
இலக்கியத்தில் பதிவு செய்யும்
"வெளிச்சம்" தன் பணியைத் தொடர
ஊக்கமளிப்போம்

**க. ஆனந்தகுமார்**
**யாழ்ப்பாணம்.**

---

## திரு ரியூசன் சென்ரர்

புகையிரத நிலைய வீதி,
**கோண்டாவில்.**

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
*A/L* 93, 94 கலை, வர்த்தக, கணித வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| தூயகணிதம் / பிரயோக கணிதம் | திரு. கமலசிங்கம் | புவியியல் | :- திரு. வேலா |
| | | இந்துநாகரீகம் | :- திரு. சோதி |
| இரசாயனம் | :- திரு. செல்வா | அரசியல் | :- திரு. நவம் |
| பௌதீகம் | :- திரு. விமல்ராஜ் | வரலாறு | :- திரு. பிள்ளை |
| பொருளியல் | :- திரு. உதயன் | அளவியல் | :- திரு. *S. S.* மனோகரன் |
| வர்த்தகமும் நிதியும் | :- திரு. தேவா | தமிழ் | :- திரு. குழந்தை |

"நெல்லுக் குத்தும் மில்லைத் தேடி
நேர் கொம்பு மாடு பூட்டி
நல்ல நெல்லுக் கொண்டுவந்து
நம்மகிட்டக் குத்திப் போறார்"

தரமான குத்தரிசி, உடைத்த பச்சை அரிசி, தீட்டுப்பச்சை அரிசி, சம்பா அரிசி போன்ற சகல அரிசி வகைகளையும் பெற்றுக் கொள்ள,

**ஞானேஸ்வரன் அரிசி ஆலை**
இணுவில்.

●

குறைந்த கட்டணத்தில் நல்ல
முறையில் விரைவாக நெல் குத்திக் கொடுப்பவர்கள்.

●

# ஞானேஸ்வரன் அரிசி ஆலை

(பரராசசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை)

**இணுவில்.**

க. பொ. த உயர்தர (A/L) கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும்
க. பொ. த சாதாரண (O/L) வகுப்புக்களுக்கும்
தனித்துவம்
வாய்ந்த
ஒரே
நிறுவனம்

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நாடென்ன செய்தது உனக்கு
எனக் கேள்விகள் கேட்பதை விடுத்து
நீயென்ன செய்தாய் அதற்கு
என நினைத்தால் நன்மை உனக்கு

யூனிவேர்சல்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,

*வாழ்வொரு நிலம் வேண்டும் — நாம்*
*வாழுமிடம் துயர் நீங்கி*
*நீளநல் வாழ்க்கை வேண்டும் — யாம்*
*நிறையும் காலம் வேண்டும்.''*


**விவசாயிகளின்**

□

## கமக்காரர் மாளிகை

**காங்கேசன்துறை வீதி,**
**சுன்னாகம்.**

*பாவனையாளர்கள் வருவது*
புகழ் ஸ்ரோர்ஸ்க்கு

*பலசரக்குப் பொருள் வாங்குவதற்கு*
*வாடிக்கையாளர் நாடுவதும்*
''புகழ் ஸ்ரோர்ஸ்''

*பலசரக்குப் பொருள் வியாபாரம்*

## புகழ் ஸ்ரோர்ஸ்

**காங்கேசன்துறை வீதி,**
**சுன்னாகம்.**

அவர்கள் வந்தார்கள்
நெல் குத்தித் தரும்படி கேட்டார்கள்
குத்திக் கொடுத்தோம்.
அரிசியைக் கொண்டு போகும்போது மகிழ்ந்தார்கள்
குறைந்த கட்டணம்,
நல்ல முறையில் குத்தியதால் அவர்களுக்கு மகிழ்ச்சி.
அவர்களின் மகிழ்ச்சியே
எங்களின் நிறைவு, எங்களின் உயர்வு.

மொத்தமாக நெல் குத்துவதற்கும்
நெல்லை,
பச்சை அரிசியாக,
புழுங்கல் அரிசியாக,
தீட்டல் பச்சை அரிசியாக
குத்தித் தருவதற்கும்

ரேணுகா அரிசி ஆலை
இருபாலை வீதி, கோண்டாவில்.

ஆங்கில மருந்து வகைகள்
குழந்தைகளுக்கான பால்மா வகைகள்
ஆரோக்கியம் தரும் சகல பொருட்களுக்கும்
யாழ்ப்பாணத்தில் பெயர் பெற்றவர்கள்

## கவிதா பார்மஸி

**259, கே. கே. எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
G. A. Q, B. A (பேராதனை, யாழ்ப்பாணம்)
க. பொ. த (உயர்தரம், சாதாரணம்)
வகுப்புகளும்
திறமை வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## புதிய உயர்கல்வி நிலையம்

ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

## யாழ்நகர மத்தியில் சுவைப் பிரவாகம்

காலை 6.00 மணி முதல் காலை உணவு வகைகள்
பாண்! பாண் சார் தயாரிப்புக்கள்

பகல் 11 30 மணி முதல் சைவ, அசைவ கறிகளுடன் சோறு
புரியாணி (கோழி - ஆடு) பிரைட் றைஸ் (கோழி - ஆடு)
சூப் வகைகள், விசேட கடல் உணவு தயாரிப்புகள்

மாலையில் உங்கள் இரவு உணவுத் தேவைகளிற்கு எடுத்துச் செல்ல
விசேட பாண், மசாலை தோசை, இடியப்பம், தோசை.

எந்நேரமும் சைவ, அசைவ, கார, இனிப்பு பலகாரங்கள்
கேக் வகைகள் - பல்வேறு வகைகளில்
ஐஸ்கிறீம் வகைகள் குளிர்பானங்கள்
நறுமண பீடா

விசேட வைபவங்களிற்கு - பரிமாறு சேவை! பாத்திர வாடகை சேவை

சுவை! சுத்தம்!! சுகாதாரம்!!!

நம்பிக்கையுடன் நாடுங்கள்

# சுவையருவி

**மின் நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தனியார் கல்விக் கூடங்கள்
மத்தியில்

**இன்சுவை**

மாணவர் நலன் கருதி
சுவையும் சத்தும் நிறைந்த
உணவு வகைகள்! குளிர்பானங்கள்!!

யாழ். நகரில் மிகக் குறைந்த விலையில்
சுவைமிகு
**ஐஸ்கிறீம் வகைகள்**
மனம் குளிர் சேவைக்கு

# இன்சுவை

**மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**எழிலகம்**

பல்வேறு பொருட்களையும் தனித்தனி பகுதிகளில் சிரமமின்றி தெரிவு செய்ய சிறந்த விற்பனையகம்.
எம்மால் தெரிவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படும் பொருட்களில் நீங்கள் தெரிவு செய்யும் வேளை,
மிகச் சிறந்ததையே எடுத்துச் செல்கின்றீர்கள்.
உங்கள் வசதியை முன்னிட்டு புதிய நடைவிதிகள்
நாடுங்கள்

# எழிலகம்

**மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## உங்கள் அனைத்து தேவைகளையும்
## நிறைவேற்றும் நிறுவனம்

பாடசாலை உபகரணங்கள்
அழகு சாதனப்பொருட்கள்
அன்றாட வீட்டுப்பாவனைப் பொருட்கள்
தாயக விடுதலைப் பாடல்கள் [ஒலிப்பதிவு நாடா]
தமிழக, ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள

# தமிழருவி

71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.